TB 1742

230 - 1 - 1904

[illegible] நாடகம்

கந்தசாமி பிள்ளை (மதுரை)

[illegible]

DIGITIZED

C-,892MK54,K
NO2 0
76638

894.8112
1742

ஸ்ரீ
ராமஜெயம்.

230

# கோவிலன்நாடகம்.

இஃது

மதுரைமாநகரம்
சங்கீத சாஹித்ய வேதாந்த மஹாவித்வான்
ஆறுமுகம்பிள்ளை குமாரராகிய
சுந்தர ஜெய வீர சூர தீர கவிராஜ
கந்தசாமிபிள்ளையவர்களால்
இயற்றப்பட்டு.

சென்னை-இட்டா.
பார்த்தசாரதிநாயுடு
அவர்களாற்றமது
ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1902.
MADRAS.

சென்னை-ஆர்சாரப்பன் தெரு 84-வது கெ.

Registered Copy Right.

ஸ்ரீ

ராமஜெயம்.

# கோவிலன் நாடகம்.

இஃது,

சென்னை - வண்ணையம்பதி வித்வானும், சபாப்பிரசங்கியுமாகிய

இயற்றமிழாசிரியர். ம-ா-ா-ஸ்ரீ, ச-இ-தோமாஸ்புலவரவர்கள்

மாணாக்கராகிய, திரிசிரபுரம். மஹாவித்வானும்,

இந்நூலாசிரியரின் பிரியநண்பருமாகிய, வீ-கந்தசாமிபிள்ளை கூறிய

## சிறப்புப்பாயிரம்.

மலர்வி ருலகில் மழைபொழி வானில்
கலரவிர் சசிமீன் ஞாயிறு பொலிய
கழையொளிர் பண்ணை கமுகென கதிர்சால்
விழையொளிர் பொருட் டெயபொங் கருவி.
சநதன மகிற்பெரு ஆரமு முத்து
கந்திலா துகிற்பொற் றிரளும் நகைபார்
முப்பொன் இருகரை முசுக்கலை பிணவொடு
அப்பொன் கைதர அருங்கனி யெனவுண்
சேலொடு வாளை திரள்முத் தீன்று
பாலொடு தன்பயி ரெனமுனிந் தகலும்
தியிங்கில மெனப்பெருந் துணுக்கைகள் மிதக்க
குமிங்கில கரியெனச் கொள்ளுஞ் சகோரம்
தரித்திடா பேனம் தயங்கவெண் டாமரை
தரித்திட அன்னம் தங்கிவிழ் நசைய
செந்நிறத் துணுக்கையை செங்கால் நாரைகள்
தந்நிறக் கயலெனத் தடவிப் பார்க்க
செந்நிற மோடுஞ் சேற்றை நிணமென
கன்னிறக் காக்கை கழுகோ டார்ப்ப
முந்நீர் நீர்மைக் குதவு மாப்போல்
நந்நீர் திரண்டு புரண்டு ஓட
சான்றோர் தவர்கள் தானபா னஞ்செய
ஆன்றோர்க் குதவு மருவியே யென்றும்
பூமகள் தனத்தில் பொங்குறும் பாற்போல்
நாமகள் நாவின் நாற்பா வினைப்போல்
சேமகளகத்தின் திரங்மா லையைப்போல்
கோமக ள்புறத்தின் கொள்துகி லணைபோல்

76638



வழுக்கா வஞ்சர் மனத்தி னூற்றும்
வழுதலை யுருக்கி போடுநீ ரைத்தும்
கொடையிலார் கொல்லை குணமிலாப் பெண்டிர்
நடையிலா சிறுகுழி நிறம்பிட நன்கு
பெருமணி சிறுமணி பலமணி களையும்
கருமணிக் குறிஞ்சியைக் களைந்து காவல்
படையிலா வரசன் பாடென வெருண்டு
விடையுலா முல்லையூர் ஆயர்கள் பருக
பலநிலங் களுமுய பதிவிதை விதைப்ப
வானூர் இரால்தேன் வழித்தெழு வண்மை
பானூர் பசுநெய் படர்ந்துமீன் பாயும்
சேனூயர் இளம்பி செம்மலர் வாழும்
வேனூயர் சால்நிறை விபல மருதத்தில்
முந்நிலக் கள்வர் கொள்ளை கொள்வரென
இந்நிலத் தோர்களுக் கமைத்தது முணவை
வண்டு கிண்டிய செண்டு பூக்களில்
தண்டு தாமரை கொண்ட தேன்களும்
விண்டு கொட்டிய வெங்காய் கனிகளும்
பண்டு காட்டியப் பாமர கொடிகள்
தெண்ட னிட்டு தெண்கால் வீசவும்
கொண்ட மணத்தினைக் கூட்டும் விருந்துபோல்
பண்டுனை வளிக்கும் பண்டா ரம்போல்
விண்டு கண்டுயில் பாற்கட லன்ன
பிரமன் வீங்கனமும் பேணி யுறங்க
நரம்பிசை யாழும் நனியொலி மிகக்க
வெண்துகி லணிந்த கலைமகள் மாலும்
பொன்துகி லுள்ளணி பொன்னூர் வைகைபாய்
நன்னதி யோடும் நான்மாடக் கூடல்
தொன்னதி யிமதனத் தொகுக்குநான் மறைகளும்
விண்ணதி யோடி யியைந் தொடுங்கின
தண்ணதி மூன்றும் சாகர மாயின
பொன்னதி பெறுந்தாதை மெய்யு மாயின
புலவர் களறிவு போன்று விளங்கின
அலகிலா வகழிக் காதர வாயின
இத்தகை நதிக்கடல் வீழுமென் றோர்ந்து
பொத்தகை கைதையும் வேலியாய் சூழ்ந்தும்
செய்தலும் செய்து வலையாய் போற்றின
உய்தலும் தன்னினம் பிரியா வென்பபோல்

## சிறப்புப்பாயிரம்.

பணக்கட லாகப் பாயுந் தாரூர்
குணக்கட லோடுதன் குணத்தையுங் காட்ட
செந்தமிழ் நாடென சிறக்கு மூதூர்
பைந்தமிழ்க் கரசு பாலசுப்ர மணியன்
நந்தா தென்றல்வாழ் நன்மலை யத்தோன்
சொந்தமாய் போற்றிய சுந்தர தமிழை
நாட்டிய வீரன் கூட்டிய சங்கமும்
பாட்டியல் நாற்ப தோன்மர்வாழ் பீடமும்
சிவவாக் கியனல் சீர்நாக் கியநாள்
தவவாக் கன்றெனத் தடுத்த கோவிலும்
பவமெனும் பிறப்பு பஞ்சபட் டோட
நவமீ ஞகுதி சொக்கரை நாட
சேல்படு கண்ணார் வியங்கு மாடமும்
வேல்படு காளையர் வியக்கும் கூடமும்
தண்டா மரைக்கா கூவற் றளிரும்
விண்டார் அரங்கு வேள்வி சாலையும்
புரந்தரன் முகலோர் புகைபடம் பிடிக்க
தரந்தா மாக தழைத்திடும் பதியாம்
முத்தமிழ் மறைமொழி மூர்த்தி தானமும்
நத்திமிழ் முத்தும் பத்தியாய் விளங்கும்
முத்திக் கயிலை மூதோர் போற்றிடும்
சித்தமாய் விளங்கும் திவ்யமா மதுரையில்
மதங்கியி ஞேர்கூர் மாகாளி யென்னும்
இதங்கிய கோவிலிற் றீபம்வைத் திடாமல்
மதம்மொழி சேனைகள் சூழும் அரனும்
சதமக வானும் சரண்புக யென்றும்
மும்முர சும்மொழி முகட்டினிற் றரியலர்
தம்முற இணங்கும் தாழ்முடி ஒலியும்
பாண்டியர் திட்டம் செய்திட் டக்காள்
வேண்டும் விழாக்கள் விழைப்பா திருக்க
மணியரசசெட்டி மனைவி இலையர்கள்
அணியுங் குமாரன் எண்ணெய் விற்றதால்
காளியார் கோவிலிற் காரிளைத் தேற்றினன்
காளையா மவன்பங் காளியாற் றெரிந்து
ஆலயமுன் றிலில் வெட்டினர் அடைவே
சாலய மனைவியும் கணவனிற் சாய்ந்தாள்
காளியும் அறிந்து கதுமென சொக்கர்
தாளிணை பணிந்து தைரியமாய் செப்ப
சோனாட் டில்வாழ் பூம்புகார் நாடாம்
சேனாட் டாரும் திரையிடு மூதூர்



பட்டினத் தடிகள் பரவிய பதியாம்
செட்டினத் தவர்கள் சேர்ந்திடும் செம்மல்
மருதவாணர்பிரான் வாழ்திருக்கோவிலும்
செருதம் வச்சிராயுதனுந் துதித்திடும்
காவிரி மாநதி கடலென ஒலிரும்
மாவிரி சோலை சங்கத் துறையும்
முல்லைக்குத்தேர் அளித்த சோழன்
நெல்லைக் குவிக்கும் நீள்பணை யாகும்
காவிரிப் பூம்புகார் பட்டின மென்று
காவிரி ஔவையார் நாவலர் போற்றும்
பூம்பதி தன்னில் மாச்சோட் டானும்
தேம்பதி என்னும் திரள்மா ருகனும்
புத்திர மின்றிப் பெருந்தவம் புரிய
சித்திர நந்த வனத்தை வைத்து
சந்திரன் சூரியன் சுரா தருக்களும்
இந்திரன் கண்டு இதுதகு மென்ன
பசும்புற் களுமோர் கொடியெனப் படரும்
விசும்பிற் கருள நிழல்கொண் டெய்யும்
பெற்றிய வனமது பிறங்கிடு நாளில்
உற்ற காம தேனுவுங் கன்றும்
நற்றவ மாகநற் புல்லை மேய
செற்றிட கவண்டு கல்லால் கன்றை
கொன்றிட காம தேனுவும் சாபம்
இன்றிட புதல்வன் பதினா றண்டில
இருபிள வாக உளைந்துயி ரிறப்பான்
அறியென தேனும் அகட்டு வகல்
துதிதவம் செய்ய சொக்கர் தோன்றி
அதிதவன் மாச்சோட்டான் செட்டியார்
அரிவையாம் வர்ண மாலைதன் வயிறதில்
அரிந்த வாணியன் கோவில னாகவும்
பாண்டியர் மனையில் காளிகன் னகையாய்
பூண்கடை யூரில்வாழ் வசந்த மாலைதன்
குலத்தில் மாதவி தோன்றிட செய்தார்
தலத்தில் பாண்டியர் சோதிடம் பார்க்க
பாண்டியர் நாடு பழுதாகுமென
வேண்டிய சாத்திர வல்லோர் கூற
வைகை யாற்றினில் வதித்திடப் பிள்ளையை
பொய்கை யாகப் பெட்டிதா வியற்றி

விட்டனர் ஆறே விழையுந் தாய்போல்
இட்டினர் மாது கண்கரம் எடுக்க
வளர்ந்து பக்குவ நாளினில் வணிகர்
கிளர்ந்து கோவலன் இசைமணஞ் செய்ய
கூறினர் குவலயம் எலாமறிகிட்டு
கூறினும் அமையா பந்தரோன் றிபற்றி
அருந்தவ முனிகள் யாவரும் சூழ
பெருந்தவ மணமது முடித்த போதினில்
சிறப்புற பரத நாட்டியம் நடிக்க
விருப்புற மாதவி வேசி தன்மையாய்
சபையினில் நடிக்க தக்கவர் படிக்க
நவையிது வென்று யாவருங் களிக்க
நற்பயி லுருவ ஊர்வசி நாண
சொற்பயில் கிளிபோல் துவண்டு கோவலனை
கொண்டனள் கிரியை குதர்பவ னென்போல்
தெண்டிரைக் கடலைக் குடித்த தேசிகன்போல்
நப்பனக் கையால் நாயகன் செசதையை
சபனஞ் சொன்ப தாரன் கோவலனை
திருக்கடவூர் தெய்வநாட்டிற்கு
பெருக்கடையாத பெற்றாள் கோவலனை
கண்ணகை சிறுமி யகன்ற காலையில்
சொர்ண நாவிலை சுகமாய்ப் பார்த்து
கணவன் யாரென உழற மாமியை
மணவன் செய்தி வகுத்தனள் விரிவாய்
ஓலையை விடுத்து உணர்வாய் ஓத
சேலை தொடுத்த சேற்கணாள் மறுத்து
நின்போல் பதுமை இயற்றிவைத் தேனென
தன்போல் செய்து தனிவழி நடக்க
பதுமை இறந்து பதுமனும் போனான்
இதுவமை யாக ஆற்றினில் இசைக்க
பூம்புகார் பட்டினம் புண்ணியன் வந்து
தேம்புகார் தேவியை கண்டு தியங்கி
மருவார் வஞ்ச மலர் மணம்போல்
தெருவார் சிலம்பை விருவித் தெளிந்து
புண்ணிய பூமியாம் மதுரையில் விற்க
கண்ணிய வஞ்சி பத்தனோர் வாங்க
அரசன் மனையில் களுமன் கொணர்ந்த
நரசன் மனிவன் கைவபுரிந்தானென
புரசை சூழும் பாண்டியர் பால்விட
விரசை யாக வெட்டென சொன்னான்



காளி தேவிதன் கோவிலிற் சென்று
ஆளிநீ யென்று அவன்கை வாளால்
இருபிள வாக இவன்விழும் காலில்
ஒருபிள வான ஓங்கார கண்ணகை
உத்தமி வந்து உயிரைக் கொடுத்து
சத்தியமாக தன்னூரை கேட்டு
பாண்டியர் வசித்த பட்டினம் யாவும்
காண்டிகை யெரித்த காண்டவனம்போல்
சுட்டெரித் தெழுந்து ஒற்றியூரில்
வட்டப் பாறையில் வதிந்த நாயகிதன்
திவ்ய கர்தையை செழுநாடகமாய்
அவ்யமிலாகண பதியருள் பெற்று
மதுரையில் வாழ்ந்த மஹாசங் கித
பதுசா ஷித்ய வேதாந்த சாஸ்திர
பார்த்திபன் ஆறுமுகப்பிள்ளை யீன்ற
கீர்த்தியோன் சிலப்பதி காரங் கிளரி
பஞ்ச லக்ஷணம் பயின்றநன் னுவலன்
கொஞ்சும் விளைதபு குரைசழல் மதிப்போன்
நாடகக் கீர்த்தனை நவிற்றிய மேலோன்
பாடக வன்னையை பாடிடும் வித்தகன்
சிறப்புறுஞ் சுந்தர ஜெயவீர தீர
உறப்புறுஞ் சூர சபாப்பிர சங்க
கந்தசாமி கவிராஜ சிங்கம்
சொந்தமாக சொன்ன இந்நூலை

துதிப்பினு மனத்தில் சிவப் பயிராக
கதிக்கென விளைந்து தமிழ்ந்து எழுந்து
பத்மநாப விலாசப் பிரவில்
தத்வ பயோதரம் பொழிந்தா னென்ன

புகழ்ந்துலகோர்கள் போற்றவு மாந்தர்
மகிழ்ந்துகொள்வீர் மண்ணுள்ளளவும்

வாழ்க வாழ்க பல்லாண்டு வாழ்க
தாழ்க தாழ்க தப்பெனப் புகல்வோர்

கன்னகை சரிதை கருணை
நன்னய நாடகஞ் சிறந்திட மாதோ.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

(*)

இஃது.

சென்னை-வண்ணையம்பதி வித்வானும்,

சபாப்பிரசங்கியுமாகிய இயற்றமிழாசிரியர்.

ம-௱-௱-ஸ்ரீ, ச - ஸி. தோமாஸ்பிள்ளையவர்களால்

இயற்றிய - சாற்றுக்கவி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னுருஞ்செம்பியன்மாமதுரைநகர்க் குவலைகுளிர் பூபன் தாய்மை
தென்னுருஞ் சங்கிதசா கித்தியவே தாந்தநிதி செம்மற் சீர்த்தி [ம்
பன்னுறு மணியாறு முககுரிசிற் சேய்சுந்தர ஜெயமா வீர
சொன்னறு மெழிற்சூர கீரகவி ராஜகந்த சாமி யேதே.

இதுவுமது - வெண்பா.

சந்தம் பணிகொழிக்க கனிவாய் மொழியுருக்குப்
பந்த மெழுத்தசைச்சீர் பாப்புகட்டி—அந்தமிகும்
கோவிலனன் னாடகத்தைக் கூறினான் செந்தமிழ்த்தேர்
பாவலனே! மாவலன்கண் பார்!

இஃது.

திருமயிலை - மஹாவித்வான்,

ம-௱-௱-ஸ்ரீ, ஸி - கண்ணுசாமிமுதலியாரவர்களால்

இயற்றிய - சாற்றுக்கவி.

ஆசிரியவிருத்தம்.

சீர்பூத்த காவலடர் மதுரையம் பதிவாசன்
 செய்யகலை தெரிவல்லவன்
திகழுமொரு சங்கீத சாஹித்ய வேதாந்த
 திவ்யகன கயசக்குணன்
சேர்பூத்த ஆறுமுக பிள்ளைதரு புத்திரன்
 சீனிலமதிக்கு மன்பன்
சிறையின்சொல் வாய்ந்தசுந் தரவீர ஜெயசீல
 கவிராஜ கந்தசாமி
தேர்பூத்த அன்புபொறை யடக்கமின் சொல்மிக்க
 திகழுகலை மிகுநாவலன்
செய்யமா றமைதந்த மைந்தன் கணேசனின்
 சீதபத மறவாதவன்
ஏர்பூத்த கோவிலன் னாடகம் தன்னையே
 எவருமின்புற வாழ்த்தவே
இயற்றினன் கேட்பவர் படிப்பவரென்றென்று
 மிலகிநிதி பெருகமாதோ.



ஸ்ரீ ஜெயகணேசகுருவேதுணை.

# கோவிலன் நாடகம்.

கணேசர் ஸ்தோத்திரம்.

விருத்தம்.

சீர்மிகுமயிர்தருபசிவகாமியருள்சுபுத்ரா
தார்புகழ்மிகுமுன்பா நாரமென்மனதிருத்தி
பார்புகழ்மேன்றுகாவல் பாமிகுகின்காடகத்தின்
சீர்தனை தவசாவண்மைஞ் சித்திக்கவரமீவாயே.

சுருட்டி-ம்-சோட்-ஆதிதாளம்.

பல்லவி.

தந்திமுகா வந்தென்றன்
சிந்தையில் கொலுவமர்ந் தருள்புரிவாய் (தந்தி)

அநுபல்லவி.

கந்தாமூலிக வானவனே
புந்தாந் தோர்புகழ் மோகனனே
செந் தமிழில
சிந்தை மகிழ்
தந்தனைப் புகழ்ந்திதோ பாடினேனே (தந்தி)

சரணங்கள்.

கணபதியே யென் றனையென
தனுதினை மனதி லினையுன்னி
குணநிபாவென் அனைபாட
கணநிபாடென் புகழ்கீட
தும்பி முகா
தம்பி னேறும்
செம்பொற் றிருவடி சொர்தமெனத் (தந்தி)

வந்திவோ புந்தனருள்
தந்திடு வாவென் றனைபோற்றது
சுந்தரஜெயவீர சுவிராஜ
கந்தசாமியின் குருநாதா
புவ புகழே
பன்... முறையே
பன்வினை தீரயா வரமருளே (தந்தி)

சரஸ்வதி ஸ்தோத்திரம்

விருத்தம

மெய்தனில்சொர்னமாலை மேன்மைதம்புருவீனை
கைதனிலரும்வாணி கருதுமிந்நாடகத்தை
பொய்யிலாமணிமென்றெந்தப் புலவரும்புகழ்ந்துரைக்க
செய்யுமென்றனிநேறன்றுந் சரஸ்வதியுன்றுள்போற்றி

பதம்-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

வாணிசரஸ்வதி வந்தென்வாக்கிலிருப்பாய்—கையில்
வர்ணத்தம்பூரணிந்து சொர்ணமணிபூண்டிலங்கும் (வாணி)

அநுபல்லவி

காணாதற்கரியகலை மடந்தையம்பாபுஸ்தக
பாணியெந்தன் றனையென்று யானுனை நினைமுப்பாட— (வாணி)

சரணங்கள்

பக்தியுடனுந்தன் திரு பாதமேது நினைதென்றுனை
சித்தகித்தந்துதிக்கவுந் சக்தியெனக்கருளுவாய்
சித்தர்முனிவோர்புகழும் புத்தகபாணிதயாநிதி
சித்தைக்கருட்பிரகாச வேதமலர்யந்திராணி (வாணி)

இலக்கியச்செந்தமிழோ டிலக்கணசந்தரசம்
இன்பமுடனேசேர்ந்த இசையுந்தரமயபெத்தி
உலகிலனைவோர்மகிழ உன்னருட்கிருபையாலே
நலமுடனேயிலங்கும் நாடகமொழுநவிறேன் (வாணி)

சுந்தரஜெயவீர குமாரகவிராஜ
கந்தசாமியின்னேகனிக் கருணக்கிருபாநிதி
செந்தமிழ்க்கடலேயுந்தன் சேவடிமறவாமலே
சிந்தனைசெய்துன்பாதந்தனைச்சந்ததம்பணிந்தேனம்மா. (வாணி)



முருகர் ஸ்தோத்திரம்.

விருத்தம்.

வள்ளிதெய்வானையோடு வடிவேலையணிந்துசொர்ண
புள்ளிமாமயில்மீதேறி புகழுடனென்முன்வந்து
உள்ளசங்கீததாளம் உய்யவிந்நாடகத்தைத்
தெள்ளியதமிழாற்பாடச் செய்திடும்முருகாபோற்றி

மதுரைமீனாக்ஷி சொக்கலிங்கேஸ்வரர் ஸ்தோத்திரம்.

விருத்தம்.

மதுரைமீனாக்ஷியம்பா மஹாதேவசொக்கலிங்கா
துதிசெயுமென்றுன்வைதா நலங்குமிந்நாடகத்தில்
ஏதுவையுமோனேசிரும் எனேயோடணிப்ராகாசம்
பதுமைபோலமையச்செய்வீர் பரமனேநின்றுள்போற்றி.

வெங்கிடேஸ்வரர் ஸ்தோத்திரம்.

விருத்தம்.

வெங்கிடேஸ்வரனேயெந்த வேளையுமென்கவிக்கு
சங்கீதசாஹித்யங்கள் சற்றேனும்பிசகிடாது
மங்களச்சொல்லமைத்து மாநிலமெங்குமீடி
தங்குமென்புகழ்விளங்கத் தயைபுரிந்திடச்செய்குவீரே.

இஷ்டதேவதா ஸ்தோத்திரம்.

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்ட ஏகவல்லிப் பொன்னியம்மனி
சிங்காரி வடிவாம்பிகா
செகாமிகாளிதுர்க் காவஷ்டலக்ஷ்மி
ஸ்ரீகௌரி மாரியுமையே
பேர்கொண்டசக்தியே மதுரைவீரனே
பேட்புறும் எல்லம்மனி
பேதுபுகழ்கண்ணகைக் கோவிலன்சரிதையை
பெருமையா யெழுதுகின்றேன்
பார்கொண்டபுவிமீ திலக்கியஞ்சீர்தனோ
பாவினம் வழுவுறாது
பன்பொருளலங்கார சங்கீதசாஹித்யம்
பகருடனே யினைத்து

தார்கொண்டபாவலரும் நாவலரும்ன்கெனத்
 தரணியோர் கொண்டாடவும்
தாரமல்நாடகம தாகவேயெழுதவும்
 தருகுவீர் வரமெனக்கே.

கணேசர் வருகிற - விருத்தம்.

அப்பளத்தோசைபோளி அதிரசமெள்ளுருண்டை
முப்பழம்பாலுமுண்டு மூஷிகமீதிலேறி
செப்பொணுமகிழ்ச்சியோடு செப்புநாடகத்தைக்காண
கொப்பெனகணேசர்வந்து கொலுவமர்ந்திருக்கின்றாரே

தரு-இ-ம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

ஆதிகணேசரிதோ—சபைதனிற்
ஜோதிபோல்வந்தாரே

அநுபல்லவி.

பாதிமதியணிந்த பரமேஸ்வரனெனு
நீதிமறைபுகழும் ஜோதியருளிய (ஆதி)

சரணங்கள்.

மார்பிற்றுரா லணிந்து—ருத்திராக்ஷ
மகுடஞ்சிர சணிந்து
பார்மிசையோர்க்கருள் பரவிவிளங்கவும்
கார்மேகம்போலுங் கருதமாமுகிலேறி (ஆதி)

அப்பளம் முக்கனியும்—எள்ளுருண்டை
அதிரசத்தேன்குழலும்
செப்பும்பாயசமும் செவ்விளநீருடன்
இப்புவியோர்தர இனிதுண்டன்புடன் (ஆதி)

கோவிலன் நாடகத்தை—எழுதவே
கோரியவர் வரத்தை
தாவிபெற்றேனிந்த தரணியோர்கொண்டாட
பாவினக்குறையாது பண்பொருளினைத்திட (ஆதி)



பொது - விருத்தம்.

பட்டிலாபுகழ்பெற்றிருக்கும் மதுரைவாழ்பாண்டியர்க்கு
இட்டமாய்க்காவற்செய்யுந் திறமைத்தனதுகையில்
கட்டமாய்ப்பிரம்பையேந்தி சபைதனையுலகோர்மெச்ச
கட்டியக்காரன்வந்து கனகசபைதோன்றினனே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மதுராமாநகரத்தை அரசாட்சிசெய்யும் பாண்டியராஜாக்களுடைய ஆசாரவாசல்காக்குங் கட்டியக்காரன் சபைக்குவருகிறவிதங்காண்க.

கட்டியக்காரன் வருகிற-ஓரடித்தரு.

இ-ம்-பந்துவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

கட்டியக்காரன் வந்தான்—வெகுவுல்லாச
கட்டியக்காரன் வந்தான்.

அநுபல்லவி.

அட்டகாசத்துடன் அவனியென்றும்புகழ்
பட்டிலாபுகழோடும் மதுரைவாழ்பாண்டியர் (கட்டியக்)

சரணம்.

நெற்றியிலக்ஷதத்தினை திகழ்சந்தனக்குறியிட்டு
சேர்விழிகளிரண்டில் சேர்மையாய்மையிட்டு
பற்றிகரத்தனிற் பட்டகத்தியுந்தொட்டு
பார்த்திபமிலக பாபமெனவேயிட்டு
திசையுமதிர்ந்திட திருதிருதிருவென
இசையுமின்னாடகம் இதுவேசரியென
அசையநடைநடந்து ஆச்சர்யமிதுவென
தசைவன்மையுள்ளது தனதுகரங்களென
நீட்டி பிரம்பதைக்
காட்டி பகைவரை
வாட்டி யடிப்பேனென
சாற்றுங் புகழோனாம்
தகதரிகிடதக தத்திமிகுருக்கதி
தளாங்குதகதிக தக்கிடதோமென
காதரதிரிதில லாருஜெஜங்கதி
தகதகதகத தகதகதகவென (கட்டியக்)



பாண்டியராஜன் சபை.



கட்டியக்காரன் சொல் - விருத்தம்.

அதிமேவும்மதுரையாண்டுத் துலங்கும்பாண்டியர்களென்னும்
அதிவீரசூரர் அஞ்சாதவெற்றியாளர்
மதியோங்குமமைச்சரோடு மாசபைவருகின்றார்கள்
எதிரெதிர்நிற்காமற்றான் எட்டிநின்றொதுங்குவீரே

(வ-ம) கேளுங்களையா சபையோர்களே பாண்டியமகாராஜாக்கள் மந்திரிபிரதானிகளுடன் கொலுவுக்குவருகின்றார்கள், பட்டவர்த்தனர்கள், மகுடவர்த்தனர்கள், பகுதிகட்டுஞ் சிற்றரசர்கள்முதலானோரும் வெகு ஜாக்கிரதையாயிருப்பீர்களையா கனவான்களே.

பாண்டியர் சபைக்குவருகிற - ஓரடித்தரு.

இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வீரதிகெம்பீர சூராம்பாண்டிய
நிரதிதோரவந்தார்—கொலுவிருக்க
நிரதிதோரவந்தார்

அநுபல்லவி.

ஊரணிபோர்புகழ் மாராதிவீர
போரணிந்திலகுமித்து சூராமாங்கார
மிகுஞ்செம் புகழுள
ரஞ்சித மாகவே
கொஞ்சியே யிசையாடி
மெஞ்ச விலாதவர் (வீரதி)

சரணம்.

அச்சம்பயமில்லார் ஆறுயிரம்பாண்டியர்
அழகுமணிமகுடம் முடிகனிற்பூண்டவர்
மெச்சும்செயகோற்கையில் விச்சையாய்க்கொண்டவர்
மேன்மையேபோடிலையிலா மேதினியாண்டவர்
தக்கவும் புகழுள
சொக்கவேங் கேவலை
மிக்கவே பக்தியோ
டெக்காலு முந்தொழும்
அரசர் பணிந்திட
முரசு திருமுழங்க
வரிசை வரிசையாக
சரிசம பதவென (வீரதி)

பாண்டியராஜாக்கள் சிவஸ்துதிசெய்கிற
விருத்தம்.

சொக்கலிங்கமூர்த்தேஞான ஜோதியாமணியேபோற்றி
சிக்கிலாவேதந்தேடுஞ் சிவக்கொழுந்தரசேபோற்றி
முக்காலுமுனைத்துதித்தோம் முக்கண்ணாவெமதுசெங்கே
எக்காலும்சிறந்துவாழ்க வெமக்கருள்செய்வாய்போற்றி.

மந்திரிகள் சொல் - விருத்தம்

சொன்னசொல்வழுவுறாத நாயகேபோற்றிபோற்றி
இன்னகர்தன்னையாளும் இறைவரேபோற்றிபோற்றி
மன்னவரெவருமேற்றும் மணிமுடியணிந்தென்றும்
பன்னூற்கீர்த்தியோங்கும் பாண்டியவரசேபோற்றி.

பாண்டியர்கள் மந்திரிகளோடு தேசவிசாரணைசெய்வது
ஆசிரியவிருத்தம்.

பாண்டியர் - சீரிலகுமணிமதுரை யெங்குமுளகுடிபடை
சீராய்ப் பிழைக்கிறார

மந்திரி ஜீவகாருண்யரே குடிபடைகளனுதினம்
சீரிலக வாழ்கிறார்கள்.

பாண்டியர் - கேரிலகுமாதமும் மாரிபெய்தேபயிர்
கேர்த்தியாய் விளைகின்றதா

மந்திரி கேடிலிற்குறைவின்றி செல்விளைந்திடமழை
கேர்மையாய்ப் பொழியுதரசே


பாண்டியர் - பாரிலகுஞ்சொக்கேசர் மீனாக்ஷிதிருவிழா
பண்பாய் நடக்கின்றதா

மந்திரி பாரோர்களனுதினம் முப்பூஜைசெய்தினிய
பணிவிடை செய்கிறார்கள்

பாண்டியர் - தாரோர்களாதுலர்ப் பசிதணியவேயன்ன
தானங்கள் செய்கிறார

மந்திரி தர்மகுணசீலர்களாதுலர்க்கனுதினம்
தருமஞ்செய்கின்றாரரசே





காளியம்மன் ஆலயத்தில் திருவிளக்கேற்றிவைப்பவனை
வெட்டிப்போடுமென்று பாண்டியராஜாக்கள்
மந்திரிகளுக்குச் சொல் - விருத்தம்.

மந்திரிமாரேகேளீர் மதுரையிற்காளிகோயில்
பந்தனஞ்செய்துமூடி பாழடைந்திருக்குதென்று
வந்தக்கேதிருவிளக்கு வைத்திடுவோர்தம்மை
இந்தவாளாயுதத்தால் இருதுண்டாய்வெட்டுவேனே.

(வ-ம்) கேளுங்கள் மந்திரிமார்களே நமதுமதுரையிலிருக்கும் காளி கோவிலை காம் மூடிவைத்துப் பாழாகச்செய்திருக்கின்றமையால் இனி யாவரேனும் அந்தஆலயத்தில் திருவிளக்கேற்றிவைப்பார்களில் அவர் கள்சிரசை அந்தக் காளிக்குமுன்பாகவே வெட்டிப்போடுவேனென்று நகர்முழுதுமறியப் பறைசாற்றச் செய்வீர்கள்.

(மந்திரி) அப்படியே தெரிவிக்கின்றேன் அரசே:—தலையாரி நமது மதுரைமாநகரத்திலுள்ள காளிகோயிலில் யாவரேனும் திருவிளக்கு ஏற்றிவைப்பாராகில் அவர்களிரசைக் காளிக்குமுன்பாக வெட்டிப் போடுவோமென்று பாண்டியமகாராஜா யுரைத்தனரென்று எல்லோருக்குந்தெரியப்படுத்துவாய்.

(தலையாரி) அப்படியே மகாபாக்கியமையா.

பொது-வசனம்.

கேளுங்களையா சபையோர்களே மந்திரியுரைத்த வாக்கியப்படியே தலையாரியானவன் வெட்டியானை யழைத்துக்கொண்டுபோய் கடைத்தெருவில் ஜனங்கள்கும்புசேரும்படியாக பறைசாற்றச்செய்து பாண்டியருரைத்த ஆக்கினையைத்தெரிவிக்கும் விதங்காண்க.

தலையாரி குடிகளுக்குச்சொல்வது

விருத்தம்.

எதிராகவந்திருக்கும் எல்லோருமறிவதற்கு
அதிசயமொன்றுரைப்பேன் அன்புடன்கவனிப்பீர்கள்
விதியினுங்காளி முன்னே விளக்கேற்றிடுவாரானால்
அதிரவேவெட்டுவோரசம் அனைவர்க்குந்தெரிவித்தேனே

(வ-ம்) கேளுங்களையா குடிபடைகளே நமது மதுரையாநகரத்தில் எல்லைப்பிடாரியாக வீற்றிருக்கும்படியான காளியம்மன் ஆலயத்தில் திருவிளக்கேற்றிவைப்பவர்கள் சிரசை வாளாயுதத்தினால் வெட்டிப் போடுவோமென்று பாண்டியராஜாக்கள் ஆக்ஞாபித்தனர்களையா சனங்களே.

பொது-விருத்தம்

மாநாகச்செட்டியோடு மாச்சோட்டான்செட்டியாரும்
ஆனதோர்சரக்குகப்பல் அன்புடன்கடத்திக்கொண்டு
வானமும்புவியும்வாழ்த்த வர்த்தகஞ்செய்தும்பின்னை
தானில்லாகுறையினாலே தபஞ்செய்யவனத்திற்சென்றார்

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மதுரைமாநகரத்திற் கடுத்த காவிரிப்பூம்பட்டணத்திலிருக்கும் கப்பல் வர்த்தகராகிய மாச்சோட்டான்செட்டியாருக்கும், மாநாகச்செட்டியாருக்கும் புத்திரசந்தானமில்லாமையால் கானகத்தில்வந்து தபஞ்செய்வதற்கு தகுதியான ஓர் நந்தவனமேற்படுத்தும் விதங்காண்க.





மாநாகச்செட்டியாரும், மாச்சோட்டான்செட்டியாரும்
தபஞ்செய்வதற்காக நந்தவனமேற்படுத்தியது.

தரு-இ-ப-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

சிந்தைமகிழ்ந்திவர்—சுந்தரமிலகிய
நந்தவனஞ்செய்தார்

அநுபல்லவி.

இந்திரன்முதலிய
சந்தோஷங்கொண்டு

அந்தரத்தோர்களும்
சபாசெனமெச்சிடும் (சிந்தை)

சரணங்கள்.

தாமரையில்லு வலக்கிர்தமாகிய
தடாகமொன்றுண்டாக்கி—சுற்றிலும்படி.

யாவெனச்செய்தனர் மயிலன்னையுறன்னுங்
ளவிழிடம்மனைக் - காக்கி

வன்னைப்போடிளவுகள் — மாசறுசெப்பிடவும்
பன்னும்பலாவிவை — யாநீர்மரமும்
தென்னைகமுகுவாழை — தேன்மாமரமும்
இன்னும்பலசெடிகள் — மிகுந்தளம்பழிமும் (சிந்து.

சந்திரசூரியர் ரிஷிமுனிபோற்றுஞ்
சங்கரன்வாழ்கைலை — தனிலிருந்து
சந்தோஷமாகவே நாலேணியிரங்கி
சார்ந்தும்வனத்தனிலே

காமதேனுமங்கு — களிப்போடுவந்து
தாமரைப்பொய்கை — ஜலமதையருந்தி
பூமகள்வாச — மிக்கெனப்புகழ்ந்து
சேமியிலிதைப்போ — விலேயென்றம்மகிழ்ந்து (சிந்து)

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மாநாய்க்கச்செட்டியும் மாச்சோட்டான்செட்டியுந் தபஞ்செய்வதற்காக காட்டிற்சென்று சிங்காரமாகிய நந்தவனமேற்படுத்திக்கொண்டிருக்கையில் அவ்விடத்தில் கைலையிலிருக்குங்காமதேனு அனுதினமும்வந்து அங்கிருக்குந் தடாகத்தில் இறங்கி தண்ணீருந்திச்செல்லும்போது நடக்குமவிதங்காண்க.

மாச்சோட்டான்செட்டி காமதேனுவின் கன்றுக்குட்டியை
கவண்கல்லாலடித்துக் கொல்வது - விருத்தம்.

அன்புடன்கொமதேனு அடர்வனமேகப்பார்த்துத்
தன்கன்றுங்கூடவந்து தழைத்திடும்புல்லேய
வன்மையாக்கவண்கெல்லால் மாச்சோட்டானடித்தபோது
துன்பமாய்க்கன்றுஞ்சாகத் துடித்ததேகாமதேனு

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே நந்தவனத்திற்கு அனுதினமும் வந்துகொண்டிருக்கும் வழக்கம்போல காமதேனு வரும்போது அன்றையதினம் அதன்கன்றுகுட்டியானது கூடவேதொடர்ந்துவந்து நந்தவனத்திலிருக்கும் பசுமையான புல்லைமேய்ந்துகொண்டிருக்கையில் மாச்சோட்டான்செட்டியார் கோபாவேசமாய்க் கவண்கெல்லால் அடித்தவுடனே கன்றுக்குட்டி அம்மாவென்றலறிக்கொண்டு பூமியில் விழுந்திறந்ததைக்கண்ட காமதேனு துயப்படும்விதங்காண்க.



கன்றுக்குட்டி இறந்துவிட்டமையால்காமதேனு துயரப்படுவது
தரு-இ-ம-நீலாம்புரி-திரிபுடைதாளம்
கண்ணிகள்.

ஆஹா அடடாபாலா — ஐயோயிறந்தாயோ
ஆருயிர்பதருதே — என்வயதிளங்கன்றே

ஏதோவரதேயென்று உரைத்ததையுணராமல
ஓடிவந்திறந்தாயே — என்வயதிளங்கன்றே

அருமையாய்நீயுண்ணும் — அமிர்தம்சுரந்திதோ
ஆருயிப்பெருகுதே — என்வயதிளங்கன்றே

தருமநீதிதவா — தன்வர்க்குமமுதூட்டும்
தர்மமும்பறந்ததோ — ஓ சிவமே சிவமே

அருக்குமயாதொரு — அனியாயஞ்செய்யாமல்
அன்போடிருந்தேனே — ஓ சிவமே சிவமே

பாருக்குளோர்பாவி — பதைத்திடகவண்டினால்
பாலனையடித்தானே — ஓ சிவமே சிவமே

கன்றுகுட்டியை கவண்கெல்லாலடித்துக்
கொன்றுவிட்ட மாச்சோட்டான்செட்டியாருக்கு
காமதேனு சாபங்கொடுப்பது-விருத்தம்.

அடபாவியான்றடிக்க அனியாயமாவென்கன்றை
இடமுள்ளகவண்டுகல்லால் இரமையடித்துக்கொன்றாய்
படபடென்றனதுபாலன் பதைத்தும்வபதிற்றுனே
அடவியில்வெட்டுண்டேதான் அனாதரவாய்மாவனே

(வ-ம்) அடடா துன்மார்க்கா உன்னுடைய கர்வத்தினால் பாப புண்ணியமின்னதென்றுணராமல் மமதைமேலிட்டு ஒன்றுந் தோற்றாமல் கவண்டுகல்லெறிந்து கன்றுக்குட்டியைக் கொன்றுவிட்டதாலுன்னுடைய பிள்ளையை பதினாறு வயதில் கால், குடல் சதைகளெல்லாஞ் சிதறும்படியாக வெட்டிப்போடுவார்களடா துஷ்டபாவிப்பயலே

மணியாரசெட்டியார் சரித்திரம்.

விருத்தம்.

மணியாரசென்னுஞ்செட்டி மங்கையரிருவர்தம்மில்
அணிதிகழ்மூத்தாள்மூன்றும் அன்புடனிளையாளொன்றும்

மணிபோலும்புத்ரர்களை மாநிதிபொருளையெல்லாம்
வணிகனும்பகுத்தளித்து வையயீதிறந்திட்டானே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மதுரைமாநகரத்திலிருந்த மணியாரசெட்டியார் அந்தியகாலத்தில் தன்னிடத்திலிருந்த பொன் பொருள் ஆஸ்தி பூஸ்திதிபாவையும் நான்கு பாகமாய்ப்பிரித்து தன்னுடைய மூத்தமனையாள் பிள்ளைகள் மூன்றுபேருக்கும் மூன்றுபாகமும், இளையமனையாள் பிள்ளையொருவனையால் அவனுக்கொரு பாகமும் பங்கிட்டுக்கொடுக்க அவரவர்களுக்குக்கிடைத்தமட்டும்வைத்துக்கொண்டு ஜீவித்திருக்கையில் இளையவள்குமாரனாகியவாணியன் தன் வழக்கம்போல எண்ணைவிற்கும் விதங்காண்க.

வாணியன் எண்ணைவிற்குதல் - தரு.

இ-ம்-கலியாணி-அடதாளம்.

பல்லவி.

எண்ணைவாங்குவீரே—அம்மையாரே
எண்ணைவாங்குவீரே

அநுபல்லவி.

புண்ணியமீரனன்று எண்ணையைவாங்கியே
கண்ணிதலைக்கிட வெண்மயிரேகுமே (எண்ணை)

சரணங்கள்.

வேர்க்கடலைபெண்ணை—விளக்கெண்ணை
பார்க்கும்தேங்காயெண்ணை
நீர்க்கடுயோனை சீக்குடந்தன்னிலே
நாக்கிக்கொண்டுதேனை நோக்கியாங்குவீரே (எண்ணை)

அப்பட்டவெள்ளிதானே—செக்கிலிட்டு
ஆட்டிவந்தேன் இதுமே
செப்பொனுவாசனை கப்புதுபாருங்கள்
தப்பில்லைசொன்னது ஒப்பியேவாருங்கள் (எண்ணை

பொது-வசனம்.

கேளுங்களையா சபையோர்களே வாணியன் வீதிவீதியாய் சுற்றித்திரிந்தும் எண்ணைவிற்காமலிருந்தமையால் பாண்டியர்களால் பாழ்மிருக்கும்படியான காளியம்மன் ஆலயத்திலவந்து பிரார்த்தனை செய்துக்கொள்ளும் விதங்காண்க.





வாணியன் காளியம்மன் ஆலயத்திற்குவந்து
பிரார்த்தனைசெய்துக்கொள்ளுதல்

விருத்தம்.

அன்புள்ளகாளியம்மா அதிகிலேவோனருப்பாது
வன்பயேயெத்தனெண்ணை வாங்குவோரில்லையேதாயே
நாக்குடத்தெண்ணையெல்லாம் விற்கவைவிற்றேனாகில்
உன்கோவிற்றிருவிளக்கு உடனேவைத்தேற்றுவேனே

(வ-ம்) அம்மணி காளிகாதேவி, பைரவி, சாமுண்டி, நீலி, கபாலி, திரிசூலி, மகிடாசம்மரி இன்றைக்கு யான் கொண்டுவந்திருக்கும்படி

யான் இவ்வெண்ணெயெல்லாம் விற்கிறபடியால் உன்னுடைய ஆலயத்தில் ஆயிரந்திருவிளக்கேற்றிவைத்து தேங்காயுடைத்து கர்ப்பூர ஆராதனை செய்கிறேனம்மா.

வாணியன் மறுபடியும் எண்ணெய் விற்குதல் - தரு

இ-ம் - கண்டா - அடதாளம்

கண்ணிகள்

எண்ணெய் வாங்குவோரெல்லாம் என்முன் வருவீர்கள் அம்மாமாரே - நல்ல
எள்ளைச் செக்கிலாட்டி எடுத்து வந்தேனிதோ அம்மாமாரே
வண்மையாயொளிவீசும் விளக்கெண்ணெய் நல்லெண்ணெய் ,, - கூடத்
வளருந்தேங்காயெண்ணெய் வாங்கக்கொணர்ந்தேனே அம்மாமாரே
அப்பட்டமென்னிது அவனியிற்கிட்டாது அம்மாமாரே வாங்கி
அதிரசம்பணியாரம் அன்பாகச்செய்வீரே அம்மாமாரே
செப்பொணாருசியிது தேசதேசத்தில்வாழ் அம்மாமாரே - பண்டம்
செய்துபுசித்தாலுந் தெவிட்டாதொருநாளும் அம்மாமாரே
இந்தெண்ணெய் நோக்கி நீங்கள் தாமதியாமலே அம்மாமாரே - எல்லாம்
வந்து வாங்கிக்கொள்வீர் சந்தோஷமாகவே அம்மாமாரே

பெண்கள் எண்ணெய் விலையை விசாரிக்குதல்.

விருத்தம்

நல்லெண்ணெய்க்குடத்திலெண்ணெய் மேன்மையாய்த் தலையில் தாங்கி
வல்லமை பாகச்செல்லும் வாணியா சொல்லக்கேளாய்
நல்லெண்ணெ யொருவிசை நற்றேங்காயெண்ணெய் விசை
சொல்லென்று விலையெமக்கு துரிதமாய் வாங்கவேண்டும்

(வ-ம்) அண்ணா எண்ணெய் விற்கும் வாணியனே நல்லெண்ணெய் ஒரு விசையும், தேங்காயெண்ணெய் ஒரு விசையும் வேண்டியதாகையால் எப்படிக்கொடுப்பீர் விலையைத் தெரியப்படுத்துவீரையா.

வாணியன் சொல் - விருத்தம்.

கட்டுறுநல் விசைரூபா கையிலே முக்கால்ரூபா
உட்டன்பட்டோர்கள் தனை வாங்கி உங்களுக்குப் போகித்தால்
பட்டுடன் தேவர்காது மார்பு தோல்கையுங் காலும்
கடவுளின் செயலால் நீண்டு கரும்பு போல் நிறைகுவீரே



(வ-ம்) அம்மா என்னிடத்திலிருக்கும் நல்லெண்ணெயும், விளக்கெண்ணெயும், தேங்காயெண்ணெயும் ஒரே விலையாகத்தான் விற்கிறேன் ஆதிலும் கையில் பணத்தைக் கொடுத்து வாங்கினால், ஒருவிசை முக்கால் ரூபாய், கடன்வாங்குவோருக்கு ஒருவிசை ஒரு ரூபாய் விலையாகுமம்மா இதற்குச் சம்மதப்பட்டு இந்த எண்ணெயை வாங்கி பலகாரம் செய்துபுசிப்பீர்களேல் தேகபுஷ்டியுண்டாகும், தலையிற் றேய்த்து ஸ்நானஞ்செய்தால் நேத்திரகுளிர்ச்சியாகியும், தேகசுகத்தியுமாகி, முகத்திற்கு அழகுண்டாகுமம்மா.

(பெண்கள்) அப்படியானால் அ-டகம் நல்லெண்ணெயும், கூ-டகம் தேங்காயெண்ணெயும், அ-டகம் விளக்கெண்ணெயும் வார்ப்பீரையா.

(வாணியன்) அப்படியே இதோ வார்க்கிறேனம்மா.

பெண்கள் வாணியனுக்குச் சொல் - விருத்தம்.

அன்புடனெண்ணெய் வார்த்த ஐயனே வாணியா கேள்
தன்மையதாய் விளங்கும் நல்லெண்ணெய்த் தேங்காயெண்ணெய்
வண்மையாயொளிமிகுந்த விளக்கெண்ணெய்க்கெல்லாம் ரொக்கம்
இன்னதென்றெமக்குரைத்தால் இக்கணந் தருவோமே

(வ-ம்) ஐயா வாணியனே யாங்கள் வாங்கிய எண்ணெய்களுக்குத் திரவியம் எவ்வளவாயிற்று? தெரிவிப்பீரையா.

(வாணியன்) ஆ- மொத்தத்திற்கு, ரூபாய் க-அணா ஆச்சுதம்மா.

(பெண்கள்) அப்படியே இதோ கொடுத்தோம் வாங்கிக்கொண்டு செல்வீரையா.

பொது - விருத்தம்.

அன்போடு வாணியன்தான் ஆனந்தமாகவந்து
இன்போடு காளியம்மனை இலங்கின் தோற்றிப்போற்றி
உன்பாதந் துணையினாலே உன்னதோரெண்ணெயெல்லாம்
வண்மையாய் விற்றேனென்று வாழ்த்தியே துதிக்கின்றானே.

(வ-ம்) கேளுங்களோ சபையோர்களே காளியம்மன் கிருபையினால் வாணியன் கொண்டுவந்த எண்ணெயெல்லாம் விக்கிரயஞ்செய்து விட்டு மகா சந்தோஷமாகத்தானே ஆலயத்திற்கு வந்து தான்செய்துகொண்ட பிரார்த்தனைப்படியே ஆயிரந்திருவிளக்கேற்றிவைத்து தேங்காயுடைத்து கர்ப்பூர ஆராதனை செய்யும் விதங்காண்க.



வாணியன் காளியம்மன் ஆலயத்தில்
திருவிளக்கேற்றிவைத்து
கர்ப்பூரதீபாராதனை
செய்தல் - தரு.

இ-ங் கல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

திருவிளக்கேற்றுகிறேன்—காளியம்மா
திருவிளக்கேற்றுகிறேன்



அநுபல்லவி.

அருமையுடனென்னை அன்பாகவிற்றேனே
பெருமையாய்தீபங்கள் பெட்பாயேற்றினேனே (திரு

சரணங்கள்.


ஆயிரந்திருவிளக்கும்—ஏற்றியிதோ
அலங்காரமாய்ஜொலிக்கும்
காயுங்கனியொடு கர்ப்பூராராதனை
தாயுனக்கன்பாகச் சேயன்படைத்தேனே (திரு)

உத்தமத்தன்பாக—பூஜைகளுஞ்
சித்தோஷத்தெம்பாக
வந்தனத்தோடிதோ சிந்தைமகிழ்ந்திட
சந்ததம்யானிங்கு வந்தனைசெய்திட (திரு)

பாண்டியர்கள் உப்பரிகையின்மீதேறி
காளியம்மன் ஆலயத்தில் ஆயிரந்திருவிளக்குகள்
பிரகாசிப்பதைக்கண்டு ஆச்சரியப்படுதல் - விருத்தம்.

வணிகனும்விளக்கையேற்றி வீட்டுக்குப்போனபின்பு
பணியலங்காரம்பூண்டு பாண்டியர்மெத்தையேறி
மணிபோன்றதீபங்கண்டு மதிக்குமிவ்விளக்கிட்டோனை
அணிக்கிறேன்சென்றுண்டாய் அரிதமாயழைப்பீரென்றார்.

(வ-ம) கேளுங்களையா சபையோர்களே காளியம்மன் ஆலயத்தில் வாணியன் ஆயிரந்திருவிளக்கேற்றிவைத்து தேங்காயுடைத்து கர்ப்பூரதீபாராதனைசெய்துவிட்டு தன்னுடைய வீட்டுக்குப்போய்விட்ட பிறகு பாண்டியர்கள் அன்னம்புசித்துத் தாம்பூலந்தரித்து குளிர்ந்த காற்றுவாங்குவதற்காக உல்லாசமாய் உப்பரிகையின்மேல் உலாவிக்கொண்டிருக்கையில் வடக்குமுகமாகத் திரும்பி காளியம்மன் ஆலயத்தைக்கண்டு அதிசயித்து [illegible] இவ்வளவு வைபவலங்காரசிங்கார [illegible] இவ்வாலயத்தில் தீப [illegible] வெட்டிப்போடுவோமென்று [illegible] கொலுவீற்றிருக்கின்றார். உப்பரிகையைவிட்டிறங்கி [illegible]



(மந்திரி) அரசே இன்றைக்கென்ன இவ்வளவு கோபாவேசமாயிருக்கின்றீர்கள்,

(பாண்டியர்) மந்திரி சீக்கிரம் வருவாய்.

(மந்திரி) இதோ வருகின்றேன்.

(பாண்டியர்) இங்கு பார்த்தனையா.

(மந்திரி) ஆம் பார்வையிட்டேன் அரசே.

(பாண்டியர்) இந்த அற்ப காளிக்கு இவ்வளவு வைபவலங்காரசிங்கார மஹிமைச்சமா.

(மந்திரி) அரசே என்னசொன்னீர். விசாரணைசெய்வோம்.

(பாண்டியர்) ஆலயத்தில் பிரகாசிக்கும் தீபங்களைப் பார்த்தால் வானத்திலிருக்கும் நக்ஷத்திரங்களைப்போல் ஜொலிக்கின்றதே.

(மந்திரி) ஆம் அவ்வண்ணமே துலங்குகின்றது.

(பாண்டியர்) முன்னமே யானுனக்குத் தெரிவித்ததுயாது



(மந்திரி) காளிகோவிலில் திருவிளக்கேற்றிவைப்பவர்களை அந்தக் காளிக்கு முன்பாகவே வெட்டிப்போடுவோமென்று உலகமறிய பறைசாற்றும்படி ஆக்ஞாபித்தீர்.

(பாண்டியர்) இவ்வண்ணமே எல்லோருக்குந் தெரிவித்தனையா.

(மந்திரி) அப்படியே தெரிவித்தேன் வேந்தே.

(பாண்டியர்) நாம் முன்னமே தெரிவித்திருந்தும் நமது ஆக்ஞையைக் கடந்து இவ்விதமாக திருவிளக்கேற்றியவனை இக்ஷணம் தேடிப் பிடித்துக்கொண்டுவாருங்கள் அவனை காளிக்குமுன்பாகவே வெட்டிப் போடுவோம்.

(மந்திரி) அப்படியே அழைப்பிக்கின்றேன் அரசே.

பொது வசனம்.

கேளுங்களையா சபையோர்களே பாண்டியராஜாக்கள் புகன்றதை மந்திரிகள் ஆலோசனைசெய்து நகர்சோதனைக்காரருக்குத்தெரிவிக்கும் விதங்காண்க.

(மந்திரி) சேவகா பாண்டியர்களால் பாழாகச்செய்து முடிவைத்திருக்கும் காளியம்மன் ஆலயத்தில் திருவிளக்கேற்றியவர்களைத்தேடிப் பிடித்துக்கொண்டுவருவாய்.



(சேவகன்) அப்படியே அவன் எங்கிருந்தபோதிலும் தேடிப்பிடித்துக்கொண்டுவருகிறேனையா.

சேவகர் குடிகளுக்குச்சொல் - விருத்தம்

ஆரையாகாளிமுன்னே ஆயிரம்விளக்கிட்டோர்கள்
கூறையமதுரைவாழுங் குடிகளேயவனுக்குற்ற
பேரைபேசொன்னீராகில் பொன்பொருளுமக்களிப்போம்
சீரையாயென்முன்னிப்போ சிக்கிரஞ்சொல்லுவீரே

(வ.ம்) கேளுங்களையா குடிபடைகளே நமது மதுரைமாநகரத்தில் பாண்டியர்களால் பாழடைந்திருக்கும்படியான காளியம்மன்ஆலயத்தில் திருவிளக்கேற்றிவைத்தவர்களை யாவரேனும் பார்த்திருந்தால் அவர்களை இன்னாரென்று தெரிவிப்பீராகில் உங்களுக்குப் பொன், பொருள் வெகுமானந்தருகின்றோம்.

(வாணியனுடையதமயன்) ஐயா கேளும் மந்திரி என் தம்பியானவன் பாழடைந்திருந்த காளிகோவிலைத்திறந்து ஆயிரந் திருவிளக்குகளேற்றி தேங்காயுடைத்து கர்ப்பூர ஆராதனையும் செய்தானையா.

(சேவகர்) சரி இவ்வண்ணமாகவே இராஜசபையில் தெரியப்படுத்துவோம் வருவீரையா.

(வாணியனுடையதமயன்) நல்லதையா.

(சேவகர்) சரி அவனிருப்பிடத்தைக்காண்பிப்பீர்

(வாணியனுடையதமயன்) நல்லது அப்படியே காண்பிக்கின்றேன் வருவீர்.

பொது-வசனம்.

கேளுங்களையா சபையோர்களே காளியம்மன் சகாயத்தினால் வாணியன் ஆயிரந்திருவிளக்கேற்றி மகாராஜன் அவனையெல்லாம் என்னைப்பார்த்து மகிழ்ந்து அவன் காளியம்மனென்று என்னைக்கண்டு கொண்டுவரும்போது வாசற்படி தலையிலே இடித்து உதிரம்பெருகுவதைக்கண்டு வாணியன்பெண்சாதி ஓடிவந்து பிராணநாதா இன்றைய தினம் யார்முகத்தில் விழித்தீரோ ஆதலின் இன்றைக்கு இரத்தக்குறிகண்டதென்று காயத்திற்கு பரிகாரம் படியான உபசாரனைசெய்துக் கொண்டிருக்கையில் எமதூதர்களைப் போலாக இவனுடைய தமயன்மார்களும், சேவகனும் வருகிற விதங்காணீர்.



(வாணியனுடையதமயன்) ஐயா இதுதான் எங்கள்தம்பியின் வீடு அதோ பார்த்தீரா அவனுடைய பெண்சாதியுடன் சந்தோஷமாய் பேசிக்கொண்டிருக்கிறான்.

(சேவகர்) சரி நமது காரியம்ஜெயமாய்விட்டது, அவனை இரகசியமாய் வெளியில் வரவழைப்பீர்களாகில் அவனை உபாயமாகப்பிடித்து கட்டிக்கொண்டுபோய் இராஜசமுகத்தில்விடுவோம்.

(வாணியனுடையதமயன்) தம்பி.

(வாணியன்) என் அண்ணா.

(வாணியனுடையதமயன்) சீக்கிரம்வெளியே வருவாயப்பா.

(வாணியன்) இதோ வருகின்றேன்,

(வாணியனுடையமனைவி) ஆ பிராணநாதா இன்றைக்கு வெளியே போகவேண்டாம்.

(வாணியன்) இதோ ஒருநாழிகைக்குள்ளாக ஓடிவருகின்றேன் பிராணநாயகி.

பொது-வசனம்

கேளுங்களையா சபையோர்களே வாணியன் தனது தமயன் அழைத்தாரென்று ஆசையுடனேவந்ததைக்கண்ட அவனுடைய தமயன்மார்கள் நல்வார்த்தைகளைப்பேசி அழைத்துக்கொண்டு கொஞ்சதூரம் போகையில் வாணியனை சேவகன் பின்கட்டாகக் கட்டிக்கொண்டு இராஜசபைக்கு வருகிறவிதங்காணக.

(சேவகன்) அரசே இவன்தான் காளியம்மன்ஆலயத்தில் திருவிளக்கேற்றியவன், இவர்கள் மூவரும் சாக்ஷிகள்.

(பாண்டியர்) மந்திரி இவர்களை விசாரணைசெய்வாய்.

(மந்திரி) அடா வாணியர்களே இதுவோ இராஜசபைஇவ்விடத்தில் பொய் சொல்லக்கூடாது கடவுள்சாக்ஷியாக உண்மையைத் தெரிவிப்பீர்கள்.

வாணியன் காளியம்மன் ஆலயத்தில் திருவிளக்கேற்றியது
உண்மையென்று இராஜசபையில் அவனுடைய
சகோதரர் சாக்ஷிசொல்வது-விருத்தம்.

மன்னனேயெங்கள்தம்பி மார்க்கமேபொல்லாதையா
முன்னவனக்காரத்தை யடக்குவோரெவருமில்லை

முன்னமேகாளிகோவில் மூடிவைத்ததைத்திறந்து
இன்புடன்தீபமேற்றி இராஜனேயாவித்தானே

(வ-ம்) ஐயா இவன் எங்கள்சிறியதாயார் மைந்தன். நேற்றையதினம் மூடிவைத்திருந்த ஆலயத்தைத்திறந்து ஆயிரந்திருவிளக்குகளேற்றிவைத்து தேங்காயுடைத்து கர்ப்பூரதீபாராதனையாவும் செய்தான் இது உண்மையென்றறிவீர்களையா;



(பாண்டியர்) மந்திரி இவர்கள் வாய்மொழியையுணர்ந்தேனையா.

(மந்திரி) அரசே இனி குற்றவாளியை விசாரிப்போம்.

(பாண்டியர்) சரி விசாரிப்பாய்.

(மந்திரி) அடா வாணியா. நீ காளியம்மன் ஆலயத்தில் திருவிளக்கேற்றியது உண்மைதானா.

(வாணியன்) உண்மைதானையா.



(பாண்டியர்) கொலைஞர்களே இவனை அழைத்துக்கொண்டுபோய் காளிக்குமுன்னே வெட்டிப்போடுவீர்கள்.

(கொலைஞர்) அப்படியே:—சீக்கிரம்வருவாயடா.

(வாணியன்) ஆ காளியம்மா.

கொலைஞர்கள் காளிக்குமுன்பாக
வாணியன் சிரசை வெட்டுவது

விருத்தம்.

தனதெண்ணெய்விற்றமையால் வணிகன்வந்து
தனிவிளக்காயிரங்காளிக் கேற்றிவைத்தான்
கனமுடையபாண்டியரு மிதனைக்கண்டு
கடுங்கோபத்தோடவனைத் தேடிப்பேர்த்து
மனதுபாகையேச்சுறவே யிருக்குமந்த
மாபாவியவன்னார்களுங் காட்டிவிட்டார்
சினமோங்கிக்காளிமுன்னே வெட்டும்போது
சிரசெகிரிமடியில்விழுந் தழுகின்றதே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே வாணியனானவன் எண்ணெயைவிற்று மனமகிழ்ந்து காளியம்மன் ஆலயத்தில் திருவிளக்கு ஏற்றிவைத்துவிட்டுப்போனபிறகு பாண்டியர் கோபாவேசமடைந்து அவனைப் பிடித்துக்கொண்டுவரும்படியாகத் தூதருக்குத்தெரிவிக்க அவர்கள்தேடிக்கொண்டு வருகையில் அவனுடைய பெரியதாயார்பிள்ளைகளால் அவனைப்பிடித்துக்கொண்டுவந்து காளிக்குமுன்பாக வெட்டும்போது அவனுடைய சிரசானது எகிறிவந்து அம்மன் மடியில் விழுந்து அபயப்படும் விதங்காண்க.

வெட்டுண்ட வாணியன் சிரசு அபயப்படுவது - தரு.

இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

அம்பிகைதிரிசூலி ஆதிமகம்மாயி — காளியம்மா-என்ன
அனியாயமோயிது யார்யிட்டசாபமோ — காளியம்மா
சம்பினபேர்களை நாசஞ்செய்வதுண்டோ — காளியம்மா-இது
ஆயந்தானேயுந்தன் மாயமோவழியிதேலன் — காளியம்மா

உன்கோவில்பாழாகி யுற்றதைபார்க்கவோ — காளியம்மா-ஒரு
மின்னாறறியில்லாமல் விளக்கேற்றிவைத்தேனே — காளியம்மா
பட்டுவேஷ்டிக்காலைபத்துசமயபாதகர் — காளியம்மா-வாளால்
வெட்டிவிட்டாரினி யென்னசெய்துவேன் — காளியம்மா
அநிரு பந்தனி அபிராமசெல்வசசி — காளியம்மா-மிக
அருகுதாய்க்குமென் அத்தைமகனையான் — காளியம்மா
இன்பமிராய்ந்துஇல் விவாகமாகவே — காளியம்மாஎந்தன்
சித்தமகிழ்ந்து விவாகம்செய்துக்கொண்டேன் — காளியம்மா
கலியாணம்செய்தபாவன் காணவில்லையகம் — காளியம்மா-இன்று
காவுகொடுத்தார்கள் காருமென்தாயர்நீரும் — காளியம்மா
தாலித்தேனை இருவரு துலங்கும்பகைஇ — காளியம்மா-எந்தன்
தாலியாயிருக்கத் திஷ்டமாயதுசெய்வாய் — காளியம்மா

வாணியனுக்கு காளியம்மன் சொல் - தரு

இ-ம்-இந்தன்தாஸ்-காபி-அடதாளசாப்பு.

பல்லவி.

சிந்தைகொள் ளாதேயம்மா பாலா
உந்தனைகொன்ற கிராதயானை அந்தகன்புரம்
ஏகவே செய்து — என்பழிதீர்ப்பேன் (சிந்தை)

சஞ்சலப்படாதே மைந்தனே இனி
அஞ்சாமலே யாதரிப்பேனென் றபயங்கொடுத்தேன்
செஞ்சொல் பெண் நீ — செவ்விதழ்மயா (சிந்தை)

அம்மாயவந்து சகுனத்தடனை கொன்று
உன்னிடம் திருப்பி மன்னவா நீ புண்ணியமாகவே
என்னை வரம் — வேண்டுநெசொல்லுவாய் (சிந்தை)

(காளியம்மன்) அப்பா எனது பக்தனே நீ விசனப்படவேண்டாம். உன்பழிக்குப்பழிவாங்குகிறேன். இப்போது உனக்குவேண்டியவரம்வேண்டுமென தெரிவிப்பாய் மைந்தா.

(வாணியன்) அம்மணி நீ எப்போதும் என்பக்கத்துணையாயிருந்து காய் பழிக்குப்பழியாக அக்கப்பாண்டியனைக்கொன்றுவிட்டு என்மனையாளை என்னுடன் தகனஞ்செய்யவேண்டுமம்மணி.

(காளியம்மன்) அப்படியே இருவருக்கும் புரிந்தேன் மைந்தா.



வாணியன் பெண்சாதி காளிகோவிலுக்கு
வருகிற - விருத்தம்.

தாலிவாணியனிறக்கத் தையலாளுனுக்குற்ற
தேவிமுன் சென்றிச்சேதி தெரிவித்தாரவள்தாடிக்க
ஆவியேயென நாதா ஐயையோவென்று சொல்லி
கூவியேயழுதுகாளி கோவில்முன்வருகின்றாளே.

(வ-ம்) செளுங்கணாயா சபையோர்களே வாணியனைக் கொன்றுவிட்டதையறிந்த பெண்களெல்லாம் ஐய்யோமுறையோவென்று கூச்சலிட்டுக்கொண்டுவந்து வாணியன்பெண்சாதிக்குத் தெரிவித்தவுடனே அலறிகுளறி வாயிலும், வயற்றிலும், முகத்திலும் அடித்துக்கொண்டு காளிகோவிலில்வந்து தன்புருஷன் வெட்டுண்டிருப்பதைக்கண்டு மண்மீது விழுந்து, புரண்டு, இனி என்னசெய்வேனென்று பரதவிக்கும் விதங்காண்க.

வாணியன்பெண்சாதி துயரப்படும் - தரு.

இ-ம்-கண்டா-அடதாளசாப்பு.

கண்ணிகள்.

ஆஹா மடிந்தாயோ — ஐயோவென்செய்குவேன்
அழகலங்காரனே — நாதா நாதா நாதா

ஓஹோ எந்தன்மெய் — தெரியுதேதனதியம்
ஓதாயோ தீதனே — நாதா நாதா நாதா

வலியவுன்னண்ணன்மார் — வாவென்றழைத்தோ
வகையோசஞ்செய்தாரே — நாதா நாதா நாதா

கலியாணஞ்செய்தென்னை — கைகூடிக்கிளிபோல
காப்பாற்றிவீரோவென் — நாதா நாதா நாதா

காளிமுன்வெட்டுண்டு — இடக்குறான்கோரத்தை
கண்டழலாமோனே — நாதா நாதா நாதா

காளிமதயாயி — கலக்குமென்நாதனை
காவுகொண்டிடலாமோ — காளி காளி காளி

அர்மான்மகனென்று — ஆசையாயிருந்தேனே
அந்தக்கொடும்படிசெய்தாய் — காளி காளி காளி

இம்மாவிலத்தனி — விரோதக்காரமேறும்
இந்தாடியென்வயிறும் — காளி காளி காளி

வாணியப்பெண் தன் புருஷனை வெட்டியதைப் பார்த்து
மனந்தாளாமல் வயற்றில் பகீர் பகீரென
அடித்துக்கொண்டு இறந்ததால்
காளியம்மன் வருகிற

விருத்தம்.

வாணியன்தேவிமோதி வயற்றினிலறைந்துக்கொண்டு
காணியிருசைவிட்டுக் கலங்கியேவிழ்ந்திறந்தாள்
கோணியேமனதுவாடி கொப்பெனகாளியவ்ந்ர
பாணியாய்சொக்கர்முன்னே பதறியேவருகின்றாளே

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே வாணியனிறந்ததைக்கண்ட வாணியப்பெண் உலகஆசையையொழித்து பகீர் பகீரென வயற்றிலடித்துக்கொண்டு விழ்ந்திறந்தாள். இந்த அனியாயத்தைப் பார்த்தவுடனேகாளியம்மனுக்குமனந்தாளாமல் கோபாவேசத்துடனே சொக்கலிங்கேஸ்வரருக்குத் தெரியப்படுத்தவேயென்று வோடிவருகின்ற விதங்காண்க.

சொக்கலிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு
காளியம்மன் வருகிற - தரு
இ-ம-கமாஸ்-ஆதிதாளம்.

பல்லவி.

காமினிகேடுங்கவே காளியும்வந்தாளே—கையில்
கத்திகட்டிஎழியப்பு வெற்றிகதாசூலங்கொண்டு (காமினி)

அநுபல்லவி.

ஆசிவா சொக்கலிங்கா ஆஹாஹாவென்றுடைய
ஆவிகளைவாருமென்று கோடாக்கிருத்திரன்போல (காமினி)

சரணங்கள்.

கோவைப்பல்லுங்கைகளும் பாரசடையுந்துலங்க
கோழிமுட்டைக்கண்திறந்து குழும்பூதகணமோடு
வையமழித்திடவே ஞானமையிதுவென்றுரைத்து
கோரக்கோபத்துடனே வீராவேசங்கொண்டவளும் (காமினி)

பதுமைபோற்பாண்டியரை பல்லினுற்கடித்திடவோ
சிதையுமவர்குடலை சிந்துசிந்தாய் நறுக்கவோ
மதுரையையழிக்கவோ மாநிலந்தன்னையொழிக்கவோ
பதிவோதவென்றுசிந்த பாதாளமதிரயிந்த (காமினி)



(சொக்கர்) ஆஹா காளி இதென்ன ஆச்சரியம் இவ்வளவு கோபாவசத்துடனே வந்தனையே.

காளிசொல் - வெண்செந்துறை.

அன்பாயஞ்சொக்கலிங்கா அவனிதனிலொன்றன்றி
உன்முன்னுரைபகற்று ஓடிவந்தேனிப்போது
நடந்தசங்கதியென்னவென்று சொக்கலிங்கேஸ்வரர்

காளியம்மனை விசாரிப்பது - விருத்தம்.

ஆபாசத்தோடேயிந்த அவனியோர்மனங்கலங்க
மாயானருத்ராங்கார மார்க்கமோடிங்கேவந்தாய்
பூபாலமாகியத்தாவே பொறுமையாயுனதுசேதி
வாயாறச்சொன்னாலுந்தன் வருத்தந்தீர்த்திரக்ஷிப்பேனே

(வ-ம்) காளி உன் கோபத்தைவிடுத்து நீ வந்தகாரணத்தைத் தெரியப்படுத்துவாய்.

பாண்டியர்கள்செய்த அக்கிரமத்தைசகிக்கமுடியாமல்
காளியம்மன் சொக்கலிங்கேஸ்வரருக்கு
விபரமாகத் தெரியப்படுத்துவது
நாதனாமக்கிரியை-இ-ம-செஞ்சுருட்டி-ஏகதாளம்.

கண்ணிகள்,

சொக்கலிங்காபாண்டியர்கள் செய்திடும்பொல்லா
அக்கிரமஞ்சொல்லுகிறேன் அன்பாய்க்கேட்பையே

மூன்னேமையென்னுலயத்தை மூடிவைத்தனர்
பின்னாதைச்செய்துமவர் விளக்குமேற்றினர்

இவ்விதமாயெனதாலயம் இருண்டிருக்கையில்
ஓளியில்லைவாணியன் அங்குடன்வந்து

ஆயிரந்திருவிளக்கென் ஆலயந்தனில்
நேர்மையுடனேயேற்றிடவும் ஞாயமிதுவே

பாண்டியரவனையென்முன் பதைக்கவெட்டினர்
வேண்டியவனுயிரிறக்க வேகுதேமனம்

மங்கைவாணிச்செட்டிமகள் மனநொந்துமே
சங்கம்போலும்பாண்டியரை சிந்தித்தழிந்தவர்

பிறகுடனும்பெருகுடனும் சிந்நசித்தாக
அறுத்தவரைக்கொன்றபின்னே ஆலயம்வருவேன்
பழிக்குப்பழிவாங்குங்காளி பழிகாரியென்று
செழித்திலகுஞ்சொக்கேசரெயன் சேதியுரையோ

காளியம்மன் சபதஞ்செய்தல்.

விருத்தம்.

ஆகையால்துஷ்டர்தன்னை அகாலமரணஞ்செய்வதற்கு
வாகையாய்க்கோவிலன்றன் வயற்றினிற்பெண்பிறந்து
சேகத்தையிழந்தோர்தமக்குத் தேவியாய்த்தோன்றியிந்த
வேகமாய்வந்தனென்னுரை வென்றபின்வருகுவேனே.

(வ-ம்) சொக்கலிங்கேஸ்வரா பாண்டியர்செய்த அக்கிரமங்களைக்கவனித்தீரன்றோ? ஆதலின்யானித்தஜென்மத்தை விடுத்து மறுஜென்மத்தில் பாண்டியன்மனையாளாகிய கோவிலன்மனைவியினுடைய வயற்றில் பெண்ணைப்பிறந்து என் சித்தமாக வெட்டுண்டிறந்தவனாகிய வாணியனை விவாகஞ்செய்துக்கொண்டு எனது பகைவராகிய பாண்டியர்களையெல்லாங்கொன்று அவர்கள் மணிக்குடலைப் பிடுங்கி மாலையாகப்போட்டுக்கொண்டு ஆலயத்திற்கு வருவேன் இவ்வண்ணம் செய்யாவிட்டால் என்பேர் காளியா

(சொக்கர்) அப்படியே உன்னிஷ்டம்போலாகுமென்றுநீவாய் காளி.

கோவிலன் உற்பத்தி.

விருத்தம்.

அன்பொடுசொக்கநாதர் அருள்புரிந்திடத்து
இன்பொடுசெட்டிசெட்டி இருக்குமவ்வேளைதன்னில்
வன்மையாய்க்கருவுறக்கொண்டாள் பனிவியாம்வர்ணமாலை
இன்புடனுமத்தருக சுந்தன்வழிகவி

(வ-ம்) சேனுக்களாயசபையோர்களே காளியம்மன் சொற்படி வந்துதயுணர்ந்த சொக்கலிங்கேஸ்வரர் ஆசீர்வாசனைசெய்து காளியம்மனையும், வாணியனையும், வாணியப்பெண்ணையும் இருவரிலடைக்கலத்துக்கொண்டிருந்தமையால் காயத்தை அவள் தன் மக்குட்டியைக் கவுண்டெல்லால் அடித்துக்கொன்று மாச்செட்டியாருடைய மனைவியாகிய வர்ணமாலையின் வயற்றில் வாணியனையழித்து கோவிலனுகப்பிறக்கும்படியாகச்செய்ய அந்தக்குழந்தையானது தாய் தந்தையர் மனங்களிக்க காலுக்குகால் வளர்ந்து ஐந்தாம் வயதில் சர்வாபரண சிங்காரலங்காரமாக சிறுவர்களுடன் விளையாட வருகிற விதங்காண்க.



கோவிலன் வருகிற - விருத்தம்.

காதினிற்கடுக்கனிட்டு கையிற்பொன்கொலுசுமிட்டு
ஜோதியாய்முத்துமாலை சொர்ணமாம்பணிகள்பூண்டு
ஆதியாஞ்சொக்கநாதர் அன்புடன்வந்தாற்போல
வீதியிற்கோவிலன்றான் விளையாடவருகின்றானே.

தரு - இ - மாதகராமக்கிரியை - ஆதிதாளம்.

பல்லவி.

கோவிலன்வந்தானே — அலங்கிர்த
கோவிலனவந்தானே

அநுபல்லவி.

மேவுந்தலையில் சிகைப்பின்னலிட்டு
பூவுமணிந்ததிற் குஞ்சுபாலையிட்டு (கோ)

சரணங்கள்.

அடிக்குழுத்து நிறைந்து — ஜொலித்திடும்
கடுக்கன்முருகணிந்து
உடுக்கைபோன்றிடையில்சொலிக்கும்வஸ்திரமுடுத்து
முடிக்காய்வெள்ளிப்பிரம் பெடுத்துக்கைகளாட்டி (கோ)

சிலம்புடனே சென்று — பதியரும்ப
பாலனகராணுக்கு
நீலவிழிக்குழை கோலத்தைப்பூரித்திட
சாலவுஞ்சந்தோஷ பாலனையுங்கூட்டி (கோ)

வர்ணமாலை சொல் - விருத்தம்.

அங்கஜசொரூபம்போலும் அருமையாய்க்கனிந்த
குங்குமவடிவாயென்கள் குழந்தையேகோவிலயா
சிங்கமேபுவியோர்மெச்சும் சிங்காரமயுத்தன்
மங்களவயிறுதித்த மணிமுத்தமெனக்குத்தாராய்

(வ-ம்) எங்கள் பிள்ளைகளிக்கப்பிறந்த சிங்காரவங்கார மன்மத சொரூபமாய்விளங்கிய எங்கள் புத்திரரத்தினமே. கோவிலயா அழகிய கையாலுனது சிங்காரமாகிய வாய்திறந்து ஒரு முத்தந்தருவாயடாசுற்கண்டிகுராகனிரசமே.

(கோவிலன்) அம்மா நான்வெளியேபோய் விளையாடிக்கொண்டிருந்து பசியாகும்போது இங்குவந்து பாலுண்கிறேனம்மா.

கர்ணகை உற்பத்தி.

விருத்தம்.

பாண்டியர்சிவனை நோக்கி பாலகன்றருவாயென்று
வேண்டியே தபசுசெய்ய விமலருங்கனிபாவி
பூண்டதோர்கனியதாக்கிப் புசியெனக்கோவிலங்கி
ஆண்டவர்சொற்போலுண்டு அழகுகர்ணகையையின்றாள்

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பாண்டியர்புத்திரசந்தானம் வேண்டுமென்று தபசுசெய்ய சொக்கலிங்கேஸ்வரர் காரியமதுவினை ஏதுவிச்சங்கனியாகச்செய்து கோவிலிங்கிக்குக் கொடுத்தனர் அவள் அதைபுசித்த பந்தாமாதங் கர்ணகையைப்பெற்றாள்.

(தோழிகள்) மஹாராஜாவே எங்கள் அரசிக்கு இன்றையதினம் பெண்குழந்தை பிறந்ததையா.

(பாண்டியன்) மஹா சந்தோஷம்.

பாண்டியன் ஜோதிஷரை அழைத்துவரும்படி.

மந்திரிக்குச் சொல் - விருத்தம்.

மந்திரியெனக்குப்புத்ரி மகிழ்ச்சியாய்ப்பிறந்ததென்று
சந்தோஷமாயெல்லோர்க்கும் சர்க்கரைவழங்கிப்புந்தி
சிந்தையுமிகமகிழ்ந்து ஜோதிஷர்தமையழைத்து
வந்தென்முன்சேதிசொலவாய் வன்மையாய்கொடியிற்றானே

(வ-ம்) மந்திரி இன்றைய தினம் பெண்குழந்தை பிறந்ததென்று நகர்முழுதுமுள்ள குடிபடைகளுக்குச் சர்க்கரைவழங்கி ஜாதகங்கணிக்கும் ஜோதிடரையும் அழைத்துக்கொண்டு வருவாய்.


மந்திரி சொல் - விருத்தம்.

மன்னனேயுமதுசொற்போல் மாநிலத்துள்ளோர்க்கெல்லாம்
பன்னருஞ்சீனியின்போல் வழங்கினேன்கற்கண்டின்பால்
சொன்னசொற்பொய்யாகாத ஜோதிடகணிகர்தம்மை
நன்மையாயழைத்துவந்தேன் நவின்றிடுமுற்றஞ்சேதி

(வ-ம்) அரசே உமதுசொற்படியே நகரையிலுள்ள குடிபடைகள் யாவருக்கும் போதுமானமட்டும் சர்க்கரையும், கற்கண்டும் வழங்கி பிறகு ஜோதிட கணிதசாஸ்திரியரையும் அழைத்துவந்தேன்.

(பாண்டியர்) ஐயா ஜோதிஷரே இன்றையதினம் பகல் பதினைந்து நாழிகைக்கு பெண்குழந்தைபிறந்தது. ஆகையால் அதன் ஜாதகபலன்களை விபரமாகத்தெரியப்படுத்துவீர்.





(ஜோதிஷன்) அப்படியே விபரமாகத் தெரியப்படுத்துகின்றேன் கவனிப்பீர் மஹாராஜாவே.

(வ-ம்) நல்லது தெரிவிப்பீர்.

ஜோதிஷன் ஜாதகம்பார்த்துச்சொல்வது.

விருத்தம்.

பாரப்பா சாஸ்திரநாம் பொய்யாகாது
பாண்டியரேயிக்குழந்தை யுமக்காகாது
நீரப்பா மகவாசை தாய்க்காகாது
நிருள்ள அரமனைக் கிதுவாகாது
ஆரப்பா உன்குலத்தோருக்காகாது
அழகுகுழலோசைமதுரைக்காகாது
சீரப்பா சொன்னேனுன்முன்னிப்போது
சிந்திப்பீர்தலையெழுத்தின் விதிசப்பாதே,

(பாண்டியர்) ஜோதிஷரே இந்தக்குழந்தையாலெங்களுக்கெல்லாம் ஆகாதாதென்றுரைத்தீரே அதென்னகாரணமோ அதை யெனக்கு விபரமாகத்தெரியப்படுத்துவீர்.

(ஜோதிஷன்) அப்படியே தெரிவிக்கின்றேன் கவனமாய்க்கேட்பீர் மஹாராஜாவே.

(பாண்டியன்) கல்லது தெரிவிப்பீர்.

ஜோதிஷன் கர்ணகையின் ஜாதகபலாபலன்களை
இராஜசபையோரறிய பாண்டியனுக்கு
விபரமாகச் சொல்வது - தரு.
இ-ம்-நவரோஸ்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

இக்குழந்தைஜாதகத்தைபக்குவமாய்ச்சொல்லுகிறேன்
ராஜனே மஹாரா ராஜனே
மிக்கசந்தோஷத்துடனே அக்கரையாய்க்கேளுமையா
ராஜனே மஹாரா ராஜனே
வலதுகாலின்செந்திலம்போ வடமதுரைக்காகாதையா
ராஜனே மஹாரா ராஜனே
கனகலென்றழுதாளால் கனமதுரைவெந்துவிடும்
ராஜனே மஹாரா ராஜனே
தேம்பித்தேம்பியழுதால் தென்மதுரைவெந்துவிடும்
ராஜனே மஹாரா ராஜனே
ஆம்புகழுங்கள்குடிக்கு அனர்த்தகாலம்சேர்ந்துவிடும்
ராஜனே மஹாரா ராஜனே
மாலைசூட்டிபிறந்ததினால் மாமனுக்கும்ஆகாதையா
ராஜனே மஹாரா ராஜனே
ஆலவாய்க்கரும்புபோலே அடியோடேயொழிந்திடுவீர்
ராஜனே மஹாரா ராஜனே
கொடிசுற்றிப்பிறந்ததினால் கோத்திரமழியுமையா
ராஜனே மஹாரா ராஜனே
வடிவுடையபெட்டியிலேவைத்திதைவைகையிற்றள்ளும்
ராஜனே மஹாரா ராஜனே

(வ-ம்) கேளுமையா மஹாராஜாவே உமது குழந்தையின் ஜாதக இலக்ஷணக்குறிப்பு இவ்வண்ணமாயிருப்பதால் நீங்கள் புத்திரிவாஞ்சையையொழித்து தங்கள் ராஜ்யபாரத்தில் இந்த பெண்ணை வைத்திருக்காமல் பெட்டிக்குள்வைத்து வைகையாற்றில் விட்டுவிடுவீரையா.



கர்ணகையை பெட்டிக்குள்வைத்து
வைகையாற்றில்விடுவது

விருத்தம்.

ஜோதிஷன்சொல்லைக்கேட்டு சோர்ந்தனரெல்லோருந்தான்
கோதிலாக்கோவிலங்கி கோவெனக்கதறிவீழ்ந்தாள்
வாதிலாபேழைக்குள்ளே வருத்தமாய்சிசுவைவைத்து
நீதிலாவைகையாற்றில் நிமலனைவிடுத்திட்டாரே.

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே ஜோதிஷன் சொன்னவார்த்தையைக்கேட்ட பாண்டியராஜாக்களும், மந்திரிபிரதானிமுதலாகிய யாவரும் மனங்கலங்கி துயரப்படவும், பெற்றதாயாகிய கோவிலங்கி வயற்றிலடித்துக்கொண்டு கதறியழுது பரதவிக்கவும் கர்ணகையைப் பெட்டியில்வைத்து வைகையாற்றில் விடுக்கவும் ஜலத்தில் மிதந்துக் கொண்டுவரும் விதங்காண்க.

கர்ணகையை வைத்திருக்கும்படியான பெட்டி
வைகையாற்றில் மிதந்துக்கொண்டு
வருகிற - ஓடிந்தரு.
இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

வைகைநதியிற்பெட்டி வருத்தமில்லாமலே
வாகாய்மிதந்துவருதே—இதோ இதோ
வாகாய்மிதந்துவருதே

அநுபல்லவி.

பொய்கையிலேவீச புரண்டதின்மேலோங்கி
பொங்குமச்சங்குழ்ந்து பெட்டியதைத்தாங்கி
பையச்சுழன்றுவரும் பதுமைபோலிதைவாங்கி
பக்குவமாய்விட பதாரமற்றோரங்கி வைகை

சரணம்.

வண்டுகளொருபுறம் வந்துகூத்தாடவும்
வழங்குங்கிதாச வாழ்த்துகள்பாடவும்
அண்டாமரரெல்லாம் ஆசித்துத்தேடவும்
அழகுறுபேழையோஅசைந்தசைந்தோடவும்

ஆற்றிலையின் வேகம்—வீச
ஐந்தலை நாகம்—வந்து
காற்றிசையு மேரும்—பெட்டியை
கடத்திக்கொண்டு போகும்

படத்தையெடுத்து கிழல் பக்ஷமாய்க்காட்டி

பெட்டியின் மீதேறி—காளிவெள
பெட்புறவே கூறி

மாணிக்கஞ்சிலம்பில் வைத்திட்டவொளியும்
பூணிட காவிரிப் பூசுகர்வாவும்
தோணிநிம்வர்த்தகா தலங்குதேயெனவும்
காணிடவேயதை கரையிலொதுக்கவும் (வைகை)

மாநாகச்செட்டியாரும், மாச்சோட்டான்செட்டியாரும்

வைகைநதியிலிறங்கி ஜலத்தில்மிதந்துவருகின்ற

பெட்டியை எடுப்பது - விருத்தம்.

அன்போங்குஞ்செட்டிமார்கள் ஆற்றிலேயிறங்கிக்கொண்டு
முன்பாகவருகும்பெட்டி முன்சென்றேயெடுத்தவெண்ணி
இன்பாகமாத்தைக்கட்டி இணைக்கதேநார்தெப்பமாக்கி
கன்னமையாயதின்மீதேறி கடத்தையெடுத்துக்கொண்டார்

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மாநாகச்செட்டியும், மாச்சோட்டான்செட்டியும் மரத்துண்டுகளைத்தெப்பமாகச்செய்து அதன்மீதேறிச்சென்று வைகைநதியில் மிதந்துவரும்பெட்டியையெடுத்துக்கொண்டுவந்தபிறகு நடக்கும்விதங்காண்க.

(மாச்சோட்டான்) மைத்துனா இந்தப் பெட்டியை யானெடுத்துக் கொள்ளுகிறேன்.

(மாநாகன்) மைத்துனா அப்படியானால் பெட்டிக்குள்ளிருப்பதை யானெடுத்துக்கொள்ளுகிறேன்.

(மாச்சோட்டான்) அவ்வாறு பெட்டியைத்திறப்பீர்


(மாநாகன்பெட்டியைத்திறப்பது)

(மாச்சோட்டான்) ஆஹா இதோ அந்தகன் இந்தக்குழந்தையின் வடிவலங்கார சுந்தரத்தைப்பாருங்கள்.



(மாநாகன்) மைத்துனா உன் குமாரனாகிய கோவிலனுக்கு எனது புத்திரியாகிய இந்தப்பெண்ணைவிவாகஞ்செய்கின்றனையா.

(மாச்சோட்டான்) அப்படியே நீர் சொல்லியவண்ணமே நாம் இருவருக்கும் திருமணஞ்செய்து மகிழ்வோம்.



வசந்தமாலை புத்திரசந்தானம் வேண்டுமென்று
தபஞ்செய்யும்போது பரமசிவத்தின்
திருவையால் மாதவிபிறப்பது.

விருத்தம்.

விருப்பமாய்ச்செட்டிமார்கள் வீட்டுக்குப்போனபின்பு
அருமையாய்வசந்தமாலை அம்மாயெனக்கோர்பிள்ளை
தருமையாவென்றுபோற்றி தபஞ்செய்யசொக்கநாதர்
வரும்புகழிவள்வயற்றில் வாணிச்சியுயிரைவிட்டார்.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மாநாகச்செட்டி கண்ணகையையும் மாச்சோட்டான்செட்டியார்பெட்டியையுமெடுத்துக்கொண்டு வீட்டுக்குப்போய்விட்டார்கள். இது இப்படியிருக்க அங்கள தங்கள் வீட்டுக்குப்போய்விட்டார்கள். இது இப்படியிருக்க திருக்கடையூர் பட்டணத்திலிருக்கும வசந்தமாலை யென்னுந்தாசியா

னவன் தனக்குப்புத்திரசந்தானம்வேண்டுமென்று ஈஸ்வரனைத் தியானஞ்செய்யும்போது சொக்கநாதஸ்வாமியிடம் மாணிக்கவிநாயகர் வரத்தினால் இவ்வயற்றில் மாதவியாகப்பிறக்கும்படி யநுக்கிரகஞ்செய்தருளியபின் பத்துமாதஞ்சென்று குழந்தைபிறந்த வசந்தமாலை ஜோதிஷரையழைத்து ஜாதகம்பார்க்கும் விதங்காண்க.

வசந்தமாலை ஜோதிஷருக்குச்சொல் - விருத்தம்

பூதலமதிக்கப்பெற்ற புரோகிதரெனவுமெச்ச
குதிலாவேதமோதுஞ் சுப்பையங்காரேயிந்த
மாதினைக்குறித்தபெண்ணாம் மாதவிஜாதகத்தை
நீதியாயோதுமென்முன் நிச்சயமாகத்தானே

(வ-ம்) கேளுமையா சுவாமி ஜோதிஷசுப்பையங்காரே யென் புத்திரியாகிய மாதவியின் ஜாதகபலாபலன்களை யெனக்குவிபரமாய்த்தெரியப்படுத்துவீரையா.

(ஜோதிஷர்) நல்லது அப்படியே தெரிவிக்கின்றேன் தக்ஷிணைத் தாம்பூலங்கொண்டுவருவாய்.

(வசந்தமாலை) இதோ கொண்டுவந்தேன் பெற்றுக் கொள்வீரையா ஜோதிஷரே.

(ஜோதிஷன்) நல்லது யான்சொல்லுஞ்ஜாதகபலாபலன்களை கவனமாய்க் கேட்பாய்.

(வசந்தமாலை) அப்படியே கேட்கிறேன் சுவாமி.





ஜோதிஷசுப்பையங்கார் மாதவியின் ஜாதக
பலாபலன்களை வசந்தமாலைக்குத்
தெரியப்படுத்துவது - தரு.
இ-ம்-அசாவேரி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

வசந்தமாலையில் வஞ்சிஜாதகம்
வழுத்துவேனிதை கவனியே
இசைந்ததிதிவார யோககரணமும்
இனிமையாகிய நக்ஷத்திரம்
அமிர்தயோகமே இலக்கினமதில்
அழகிலங்க உதித்தனள்
அமிர்வாசதி பாயிலங்கியே
ஐந்துவயதிற் கலம்பையும்
கையிலெடுத்திவ ளாடும்வித்தையைக்
கற்பாளென்றறி விஷயம்
பொய்யாதென்மொழி பூமியிதிலவள்
பிறந்தஜாதகத் தன்மையால்
எட்டுவயதினிற் கம்பமீதிலவள்
ஏறியாடுவ துண்மையே
செட்டுளோரொரு வணிகன்மைந்தனுந்
செவ்விழியலங் காரனும்
தீபகந்தர வடிவிலங்கிவ
குறிக்குமிதமுள ரஞ்சிதன்
பூபனபோதுள செட்டியாரையும்
பொருந்தும்பத்தாவ தாண்டிலே
அழைத்தவந்தவன் ஆஸ்திபொன்பொருள்
அன்போடிவள்பதித் தானமீன்
செழித்தபன்னிரண் டாண்டிலேறத்திட
ஜாதகமவட் கோதுதே

(வ-ம்) கேட்டாயோ வசந்தமாலை இப்படியிருக்கிறது. உன் குமாரத்தியின ஜாதகபலாபலன்.

(வசந்தமாலை) மஹா சந்தோஷமையா.

பொது - விருத்தம்.

அன்பாகவசந்தமாலை அநுதினம்மாதவிக்கு
இன்பாகத்தாளராகம் இனிமையாய்கற்கச்செய்து
வன்மையாய்பலகுரலில் வர்த்தனைகளைக்கற்று
நன்மையாய்த்தாம்பூலந்தான் நடந்திடுனர்பரியத்தோடே

(வ-ம்) கேளுங்களோ பிரசபையோர்களே இவ்விதமாகமாதவியின் ஜாதக பலாபலன்களை ஜோதிஷர் கணித்துரைக்கவே வசந்தமாலை மகா மகிழ்ந்து மாதவிக்கு சங்கீதசாஹித்யங்கள் முதலாயெதும், கற்பித்துக் கொண்டுவரும்போது காவிரிப்பூம்பட்டணத்தில் வர்த்தகர் மாநாகன் வீட்டுக்குவந்து கர்ணிகைக்குநிச்சயதாம்பூல பரியம்நடந்தும் விதங் காண்க.

(முத்துசெட்டி) மாநாகசெட்டியாரே இந்தப்பெண்குழந்தை யாருடையது.

(மாநாகன்) எனது குமாரத்தி.
(முத்துசெட்டி) என் குமாரனுக்குத் தருவீரா.
(மாநாகன்) தருகின்றேன்.
(முத்துசெட்டி) பரியமென்னகேட்பீர்.
(மாநாகன்) ஆயிரம்பொன் தரவேண்டும்.
(முத்துசெட்டி) இதோ வாங்கிகொள்வீர்.
(மாநாகன்) மகா சந்தோஷம்.
(முத்துசெட்டி) முகூர்த்தமென்றைக்கு.
(மாநாகன்) இன்றைய எட்டாந்தினம்.
(முத்துசெட்டி) நல்லது யான்போய்வருகின்றேன்.

மறுநாள் - அப்புசெட்டிவருவது.

(அப்புசெட்டி) செட்டியாரே இந்தபெண்யாருடையது.
(மாநாகன்) எனது குமாரத்தி.
(அப்புசெட்டி) எனது குமாரனுக்குத் தருகின்றீரா.
(மாநாகன்) தருகின்றேன்.
(அப்புசெட்டி) பரியமென்ன கேட்பீர்.
(மாநாகன்) ஆயிரம்பொன் தரவேண்டும்.
(அப்புசெட்டி) இதோகொடுத்தேன் முகூர்த்தமென்றைக்கு தெரிவிப்பீர்.
(மாநாகன்) இன்றைய எட்டாந்தினம்.
(அப்புசெட்டி) நல்லது யான்போய் வருகின்றேன்.



மூன்றாவதுநாள் - லிங்கிசெட்டிவருவது

(லிங்கிசெட்டி) செட்டியாரே இந்தப்பெண் யாருடையது.
(மாநாகன்) எனது குமாரத்தி.
(லிங்கிசெட்டி) எனது குமாரனுக்குக் கொடுப்பீரா.
(மாநாகன்) அப்படியே கொடுக்கிறேன்.
(லிங்கிசெட்டி) பரியமென்ன கேட்பீர்.
(மாநாகன்) ஆயிரம்பொன் தரவேண்டும்.
(லிங்கிசெட்டி) இதோ வாங்கிக்கொள்வீர்.
(மாநாகன்) மஹா சந்தோஷம்.
(லிங்கிசெட்டி) முகூர்த்தமென்றைக்கு.
(மாநாகன்) இன்றைய எட்டாந்தினம்.
(லிங்கிசெட்டி) சரி யான் போய்வருகின்றேன்.

நாலாவது நாள் - மாணிக்கசெட்டிவருவது.

(மாணிக்கசெட்டி) செட்டியாரே இந்தப்பெண் யாருடையது.
(மாநாகன்) எனது குமாரத்தி.
(மாணிக்கசெட்டி) எனது குமாரனுக்குத் தருகின்றீரா.
(மாநாகன்) தருகின்றேன்.
(மாணிக்கச்செட்டி) பரியமென்னகேட்பீர்.
(மாநாகன்) இரண்டாயிரம்பொன் தரவேண்டும்.
(மாணிக்கசெட்டி) இதோ தந்தேன். முகூர்த்தமென்றைக்கு தெரியப்படுத்துவீர்.
மாநாகன், இன்றைய எட்டாந்தினத்தில் வைத்துக்கொள்ளுவோம்.
(மாணிக்கசெட்டி) அப்படியே செய்வோம்.

பொது - விருத்தம்.

இவ்விதம்வந்தோர்க்கெல்லாம் இன்றைக்கெட்டாந்தினத்தில்
செவ்விழிபெந்தன்பெண்ணை சொந்தமாய்த்தருவேனென்று
ஔவியேபொருள்பறித்து ஓட்டினான்மாநாகன்பின்
செவ்வையாய்முத்துசெட்டி தெரிவித்தான்மணமுகூர்த்தம்

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மாநாகச்செட்டியார் பெண்ணைக்காட்டி பொருள்பறிக்குந்தன்மையாக வந்து கேட்போருக்கெல்லாம் பெண்தருகிறேன், பெண்தருகிறேனென்று ஒவ்வொருவரிடத்திலும் கொஞ்சங்கொஞ்சமாக ஆயிரம், இரண்டாயிரம்பொன்பரியம்

வாங்கி பெட்டியிலடக்கஞ்செய்துகொண்டபிறகுஇவனிடத்திலவமாங் குபோன செட்டிமார்களில் ஒருவராகிய முத்துச்செட்டி தங்களினத் தோருக்கெல்லாம் திருமணப் பத்திரிகையுடன் தாம்பூலம்வைத்துக் கொண்டேபோய் கோவிலன்தகப்பனாகிய மாச்சோட்டானுக்குந் தாம் பூலம்வைத்தபிறகு நடக்கும் அதிசயங்காண்க.

(மாச்சோட்டான்) செட்டியாரே யாருடையபெண்கிடைத்தது.

(முத்துசெட்டி) உமது அத்தானாகிய மானாகச்செட்டியாருடைய குமாரத்தியாகிய கண்ணகைக்கு எனதுகுமாரனுக்கும்நாளையசுபமுகூர்த் தத்தில் நடக்கும் திருமணமுகூர்த்தத்திற்கு தங்களிஷ்டஜன குடும்ப சமேதமாய்வருவீர்களென கோருகிறேன்.

மாச்சோட்டான்செட்டியார் கோபாவேசமாய்

முத்துசெட்டியாருக்குச் சொல்வது.

தரு-இ-ம்-தர்பார்-ரூபகதாளம்.

பல்லவி.

என்னசொன்னயடடா—முத்துசெட்டி
என்னசொன்னயடடா

அநுபல்லவி.

உன்னையார்கண்டவர் உற்றசொந்தக்கிழம்
அன்னியளல்லவென் அத்தான்மகளவள் (என்ன)

(முத்துசெட்டியார்) என்ன செட்டியாரே மிகவுங் கோபித்துக் கொள்ளுகின்றீரே அப்படியுமக்குச்சொந்தமிருந்தா லென்னிடத்தில் ஆயிரம்பொன் பரியமென்னத்திற்கு வாங்கினார் இதென்ன மோசமா யிருக்கிறதே.

மாச்சோட்டான் சொல்வது - தரு.

சரணங்கள்.

ஆயிரம்பொன் னளித்தே—னென்றுமிக
ஆங்காரமும் படைத்தே
வாயினும்பெண்ணான தாருமோபேயனே
நீயென்தந்தாயென்பின் வாயங்கேகேட்பேனே (என்ன)

(முத்துசெட்டி) நல்லது இதோ இருக்கின்றார்கேட்டுப்பாரும்.



மானாகனுக்கு மாச்சோட்டான்சொல்வது-தரு.

ஆஹா அத்தானே—பெண்யார்க்கிது
அன்பாகச்சொல்யானே
ஏதோமுன்னுனக் குறைந்ததைமறந்தாயோ
வாகோவுனக்கிது வஞ்சகநேர்மையோ (ஆஹா)

(மானாகன்) என்னடா கொஞ்சமேனும் அச்சம்பயமின்றி வஞ்சக நெஞ்சனென்று வாயில்வந்தபடியுளறுகின்றாய் இனி என்முன் நிற்பா யாகில் உன் கழுத்தைப்பிடித்துவெட்டித்தள்ளுவேன் துஷ்டா.

மானாகன்சொல்வது-தரு.

உன்றனைமறப்பனோ—அடடா
உனக்கிவ்வளகர்வமா
என்கையாலுன்சிரசை எட்டிப்பிடித்திடேனோ
உன்மார்பிலேதாங்கி உதைத்தேனடாயிதோ (உன்ற)

பஞ்சாயத்தார்கள் மானாகச்செட்டியாரையும்,

மாச்சோட்டான்செட்டியாரையும்.

சமாதானஞ்செய்வது - விருத்தம்.

என்னையாசெட்டியாரே எள்ளளவாகிலுந்தான்
சின்னவன்பெரியோனென்று சிறிதேனுமதிப்பில்லாமல்
இந்நிலத்தோர்களேச இருவருஞ்சண்டைசெய்தால்
விண்ணமாய்முடியுமையா விட்டிடுஞ்சினத்தைத்தானே

(வ-ம்) ஐயா மானாகச்செட்டியாரே உங்களுக்குள் நீங்களே ஒருவ ருக்கொருவர் சண்டைச்சரவுசெய்தால் பார்ப்பவருங்களைப் பரியாசம் செய்யார்களா? உங்களிருவருக்கும் நேர்ந்த கலகத்தைத் தெரியப் படுத்துவீர்கள்.

(மானாகன்) ஐயா! பஞ்சாயத்தாரே எனது குமாரத்தியை யாருக் காகிலுங் கொடுப்பேன் இவன் கேட்கவேண்டிய நியாயமென்ன

(பஞ்சாயத்தார்) சரி அப்படியானால் இந்தப்பெண் அழகாயிருப்ப தால் பரியபணங் கொடுப்பவனுக்கு பெண்தருவேனென் றுரைக்கி னாய் ஒருசமயம் உமது குமாரத்தி கூன், குருடு, செவிடு, ஊமையா யிருந்தால் உனது மைத்துனன் புத்திரனுக்குத்தானே கொடுப்பே னென்றுரைக்காவாய்.

பரியபணங்கொடுத்து ஏமாந்திருக்கும்
முத்துசெட்டி, அப்புசெட்டி,
வேங்கிசெட்டி, மாணிக்க
செட்டிமுதலானோர்
சொல்லுவது
விருத்தம்.

பஞ்சாயத்தார்களே பகரக்கேளீர்
பார்தனிலேவாழ்ந்திலகும் மானிடர்க்குள்
கொஞ்சுமொழிபெண்ணுடையோரொருவனுக்கு
கொடுப்பதென்றே நிச்சயமாய்க்கூறுவார்கள்
வஞ்சனையாயித்தனை பேரிடத்திற்காக
வாங்கியேமுகூர்த்தநாள்தெரிவித்திப்போ
அஞ்சியேயவர்களுக்குத் தருவதென்று
ஆலோசித்திடுமிவனை யென்னசெய்வோம்,

(வ-ம்) ஐயா பஞ்சாயத்தார்களே பெண்ணுக்குடையவர்கள் ஒருவரிடத்தில் பரியம்வாங்கி நிச்சயமுகூர்த்தம் செய்வது உலகோருக்கு வழக்கம் இவன் இத்தனைபேரிடத்திலும் பரியபணம் வாங்கியிருக்கின்றானே கடைசியில் இந்தப்பெண்ணை யாருக்குக்கொடுப்பான் கேளுங்களையா சபையோர்களே.

மாச்சோட்டான் மாநாகனுக்குச் சொல்வது
விருத்தம்

தன்பெண்ணைக்காசுக்கு விற்பாருண்டோ
தரித்திரங்களிதனைவிட வேறேயுண்டோ
பொன்விடுத்துப்பித்தளையைக் கொள்வாருண்டோ
பூவையர்கள்சொற்கேட்டுப் பிழைப்பதுண்டோ
அனியாயமோசங்கள் செய்வதுண்டோ
அடுத்தோரைவஞ்சிக்க நீதியுண்டோ
என்னஜென்மமுன்னுடைய தையோபாவி
எனபிறந்தாயெங்களிட குலத்திற்றானே

(பஞ்சாயத்தார்) சரி சரி இவருரைத்தது வெகு நீதியாயிருக்கின்றது. ஐயா மாநாகச்செட்டியாரே இத்தனைபேரிடத்தில் பரியம்வாங்கினீரே கடைசியில் உமது குமாரத்தியை யாருக்குக்கொடுப்பீர்



மாநாகன் சொல் - விருத்தம்

பஞ்சயத்தாரேகேளீர் பயந்துநான்சொல்லுகின்றேன்
வஞ்சியையிக்கரைத்து வந்தாங்களிஷ்டம்போல்
ஏஞ்சலில்லாமற்றானே எவர்க்காகிலுங்கொடுத்து
பஞ்சையாமெந்தன்குற்றம் பொறுத்தருள்புரிகுவீரே.

(வ-ம்) கேளுங்களையா பஞ்சாயத்தார்களே எனது குமாரத்தியை உங்கள்வயற்றில்பிறந்த பெண்ணைப்போலெண்ணி இங்கு அழைத்துக்கொண்டுவந்து யாருக்காகிலும் விவாகம்செய்துக்கொடுத்து என் குற்றத்தைப்பொறுத்தருளவேண்டுமையா.

(பஞ்சாயத்தார்) சரி அப்படியானால் இந்தப் பெண்ணைக்குறித்து திருவுளச்சீட்டுபோடுவோம்.

(சபையோர்கள்) சரி அப்படியேசெய்வோம்

பஞ்சாயத்தார் திருவுளச்சீட்டெடுக்குவது
விருத்தம்.

ஆலைவாய்க்கரும்புபோல அலைபுமாநாகனேகேளாய்
ஓலையிற்கர்ணகைப்பேர் ஒழுங்குடனெழுதிவைத்து
வாலையாய்மடித்துசுற்றி வல்லமையாய்குலுக்கும்
காலையிற்கோவிலர்க்குக் கர்ணகைவந்திட்டாளே.

(வ-ம்) கேளுமையாமாநாகச்செட்டியாரே இந்த திருவுளச்சீட்டில உமது மைத்துனராகிய மாச்சோட்டான்செட்டியாருடைய குமாரன் கோவிலச்செட்டியாருக்கு கர்ணகைசீட்டுவந்தமையால் இந்தப் பெண்ணுக்கும் இவனுக்கும் திருமணஞ்செய்து மனமகிழவேண்டும் உன்னுடைய கருத்தென்ன ?- தெரியப்படுத்துவாய்.

(வ-ம்) உங்களிஷ்டம்போற்செய்வீர்களையா.

கோவிலனுக்கும், கர்ணகைக்கும் விவாகமஹோற்சவ
நிச்சயமுகூர்த்தஞ்செய்வதற்கு பஞ்சயத்தார்கள்
பிராமணரை அழைத்துவருவது - விருத்தம்.

அன்புடன்பஞ்சாயத்தார் ஆலோசித்தருகிருந்த
இன்போங்குக்கோவிலர்க்கும் இனிமைசேர்கர்ணகைக்கும்
நன்மைசேர்முகூர்த்தஞ்செய்ய நாளிட்டுக்கொள்வதற்கு
தன்மையாய்வேதஞ்சொல்லந் தணரையழைத்துவந்தார்

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே கோவிலனுக்குங்கர்ணகைக்கும் விவாகமஹோற்சவ நிச்சயமுகூர்த்தஞ் செய்வதற்கு பஞ்சாயத்தார்கள் சொற்படியே மாச்சோட்டான் செட்டியார் புரோகிதராகிய பிராமணரை அழைத்துக்கொண்டுவந்தபிறகு நடக்கும்விதங்காண்க

(பிராமணர்) செட்டிமார்களே என்னையழைத்தகாரியத்தை தெரியப்படுத்துவீர்கள்.

(மாச்சோட்டான்செட்டி) ஐயா வேதியரே எனது குமாரனுகிய கோவிலனுக்கும், மாநாகச்செட்டியார் குமாரத்தி கர்ணகைக்கும் திருமணமுகூர்த்தஞ்செய்ய நாளிட்டுக்கொடுப்பீரையா பிராமணோத்தமராகிய புரோகிதரே.

(பிராமணர்) மாச்சோட்டான்செட்டியாரே நாளையதினம் அமிர்தயோகம் மூலநக்ஷத்திரம் வளர்பிறை பஞ்சமிதிதியானையால் இன்றையதினம் சாயங்காலம் பச்சைப்பந்தல்ஜோடித்து கோவிலனுக்கும், கர்ணகைக்கும் நலங்கிட்டுசிங்காரித்து கலியாணத்திற்குரியஏற்பாடுசெய்வீராகில் நாளையதினம் காலையில் பத்துநாழிகைக்குள் மிதுனலக்கினத்தில் திருமணஞ்செய்து மனமகிழ்வோம்.

(மாச்சோட்டான்செட்டியார்) அப்படியே மஹாபாக்கியமையா பிராமணோத்தமரே.

கோவிலனுக்கும், கர்ணகைக்கும்

விவாகமஹோற்சவம் - கரு.

இ-ம்- அடாணு-ஆதிதாளம்.

பல்லவி.

கலியாணவைபவக்—காட்சியையன்புடன்
காண்பீரய்யோரே (கலியாண)

அநுபல்லவி.

கலியாணச்செட்டிக | ளில்குமங்களகுண
வலிமையார்பாட்டுந் | சொல்முடியாதென (கலியாண)

சரணங்கள்.

தென்னங்கமுகுபலா வாழையாற்பந்தல்
தெருவெங்குமே கட்டி—குலோப்புலஸ்தர்
மின்னும்படியலங் காரமாயெங்கிலும்
மேன்மையுடனே மாட்டி



பன்னும்பந்துக்களிரு | பக்கமுஞ்சூழ
விளையில்லாதாளா | வீணையுந்தாள
மின்னலங்காரம் | மீட்டியேவாழ
கன்னலெனுமொழி | கட்டியக்தாழ (கலியாண)

கர்ணகைகோவிலர்க் கன்பாய்நலுங்கும்
காட்சிபோடே யளித்து—குமரிபெண்கள்
சொன்னமொழியாம்லாமெங்களம்பாடி
சோகுகூடனே புகழ்ந்து

பாவசாகரமாய் | பாலருளன்றுசூழ்ந்து
வர்மமில்லாமலே | வந்துஉட்கார்ந்து
மர்மமில்லாமலே | மாட்சிமைநிறைந்து
சர்வாடம்பரங்கள் | சகலமும்புரிந்து (கலியாண)

கோவிலர்க்கின்பா யலங்கிர்தாபரணம்
கொலுசுகாப்புக ளிட்டு—கர்ணகைக்கின்பாய்
மேவுமயிர்மாட்டி ஜடைகுச்சரப்பளி
முத்தாபரணம் பூட்டி

பூவிநலலங்கிர்தம் | பெட்புறச்செய்து
மேவுமணவறையின் | மேலுட்காரச்செய்து
கோவிலன்கையிற்றுலே | கொடுத்தருள்செய்து
தாவிகர்ணகைகழுத் | ததனிலேபெய்து (கலியாண

பென்னுமயின்னையுங்கை கோர்த்துமணவறையைப்
பெருமையுடனே சுற்றி—வந்திடும்போது
கண்ணும்அருந்ததி பார்த்தம்மியிதித்து
நற்பழமையால் புசித்து

வன்மையாய்திருமண | வைபவஞ்செய்து
புண்யபுஷ்பாரணம் | புசித்தகமகிழ்ந்து
திண்மையாய்பெரியோர் | திரேகமுங்குளிர்ந்து
மண்ணுலகோராசி | மங்களம்புரிந்து (கலியாண)

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கோவிலன் கர்ணகையின் முத்தில் திருமங்கிலியஞ்சூட்டி மனமகிழ்ந்தபின் கலியாணசபையில் (ந)டிபகச்சேரிவைப்பதற்கு ஆலோசனைசெய்யும்விதங்காண்க.

கலியாணசபையில் நடனஞ்செய்வதற்கு
மாதவியை அழைத்துவரும்படியாக
தன்னுடைய தாய்தந்தையருக்கு
கோவிலன் - சொல்வது

விருத்தம்.

அன்பாகவென்னையீன்ற அன்னைதந்தையரேயானும்
இன்பாகமகிழ்வதற்கு இச்சபைதனிற்கச்சேரி
வன்மையாய்நடத்தவேண்டும் வஞ்சிமாதவியையிங்கு
நன்மையாய்வரச்செய்தோங்கும் நடனஞ்செய்திடச்செய்வீரே.

(கோ-ன)கேளுங்களெனது தாய்தந்தையரே இந்த கலியாணசபையில் வந்திருக்கும் நமது உறவினரெல்லோரும் மனமகிழும்படியாக நாட்டியக்கச்சேரிவைக்கவேண்டும். ஆகையால் திருக்கடையூர்பட்டணத்திலிருக்கும், தேவதாசியாகிய வசந்தமாலையின் புத்திரியாகிய கொஞ்சிடுங்கிளி சுந்தரவல்லிநல வஞ்சியாகிய மாதவியெனும்மங்கையை இங்கு அழைத்துவந்து நடனஞ்செய்யும்படியாகச்சொல்வீர்கள்,

மாச்சோட்டான்செட்டியும், வர்ணமாலையும்
கோவிலனுக்குச் சொல் - விருத்தம்.

மெய்யதனுளருதெய்வம் பேனியுந்நமக்குதப்பா
வையமீதனைக்குரைத்து வழக்கிடுமகத்தில்
பொய்யிலாபணிரெண்டாண்டில் பொற்கொடிமாதவிக்கு
ஐயோநீயுமையானுல் அன்னைதந்தையென்செய்வோம்,

(வ-ம்) அப்பா எங்கள்பிள்ளைகளிநீர்க்கப்பிறந்த கோவிலக்கனிரசமிகமுழுதவாயனே நீ பிறந்தஜாதகத்தில் உனக்குப் பன்னிரண்டு வயதானபிறகு திருக்கடையூர் பட்டணத்திலிருக்கும் தேவதாசியாகிய வசந்தமாலையின் குமாரத்தியாகிய மாதவி உன்னை மயக்கி அழைத்துக்கொண்டுபோய்விடுவாளென்றிருப்பதால் நீயும் அதற்கேற்றாப்போல சொல்லுகிறாய் உன்னைப்பெற்ற தாய்தந்தையர்களாகிய யாங்களெவ்விதம் பிழைப்போம். எங்களுயிர்க்குயிரான மைந்தனே, இந்தக் கலியாணச்சபையில் நாட்டியக்கச்சேரி வைக்கவேண்டுமானால் மாதவிக்குமேலாக அழகுபொருந்திய தேவதாசிகளை அழைத்துக்கொண்டுவந்து நடனஞ்செய்யச் சொல்லுகிறோமப்பா புத்திர சத்திரமாகிய மைந்தனே.



(கோவிலன்) தந்தையே மாதவியைத்தவிர மற்றெந்ததாசிகள்வந்து நாட்டியஞ்செய்தாலும் யான்சம்மதியேன்.

(வர்ணமாலை) பிராணநாதா இதற்கென்னசெய்வோம்.

(மாச்சோட்டான்செட்டி) பெண்ணே விதியை மதியால்வெல்லக்கூடும், ஆதலின் நமது மைந்தனுக்கு புத்திமதியுரைத்து மாதவியையிங்குவரவொட்டாமற்படிசெய்வோம்.

(கோவிலன்) தந்தையே இன்றையசாயங்காலத்திற்குள் மாதவியை இங்கு வரவழைக்காவிடில் எனது பிராணனைப் போக்கிக்கொள்வேனென்றறிவீர்கள்.

வசந்தமாலைக்கு
மாச்சோட்டான்செட்டியார்
திருப மெழுதுவது - விருத்தம்.

நீதிலாமனத்தோர்போற்றும் திருக்கடையூரில்நாளும்
நீதமாய்வாழ்ந்திலங்கும் நேரிழைவசந்தமாலை
பூதலமெச்சுமுந்தன் புகழுறும்புத்ரியென்னும்
மாதவிதனையெங்கள்முன் மாட்சியாயனுப்புவாயே.

இப்படிக்கு.

மாச்சோட்டான்செட்டியார்,
காவிரிப்பூம்பட்டணம்.

(மாச்சோட்டான்) சேவகா இந்த திருபத்தை யெடுத்துக்கொண்டு போய் திருக்கடையூர்பட்டணத்திலிருக்கும் தேவதாசியாகிய வசந்தமாலைக்குக் கொடுத்துவிட்டுவருவாய்.

(சேவகன்) அப்படியே தருகிறேனையா செட்டியாரே.

சேவகர் திருக்கடையூருக்குவந்து
வசந்தமாலைதாசிக்கு திருபம்
கொடுப்பது - விருத்தம்.

ஓலையையெடுத்துக்கொண்டு ஓடியேகடையூர்வந்து
காலையிலெழுந்துண்டாட்ட கஸ்தூரியணிந்துக்கொண்டு
நூலையோதிடுந்தாசிக்குதிருபத்தைக்கொடுக்கக்கண்டு
மாலைபோதவிட்டதிற்கு மாதவிவருவாளென்றான்

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே திருக்கடையூர் பட்டணத்திலிருக்கும் தேவதாசியாகிய வசந்தமாலையும், மாதவியும் காலையிலெழுந்து நித்தியகர்மானுஷ்டான விதிகளை முடித்துக்கொண்டு அன்னம் புசித்து தாம்பூலந்தரித்து ஆடையாபரண அலங்கிர்த சிங்காரமாக கையில் வீணையை யெடுத்து மீட்டிக்கொண்டு ஸ்வரசலங்கார சங்கீத சாதகமாக பாடும்போது மாச்சோட்டான் அனுப்பிய சேவகர் நிருபக்கையெடுத்துக்கொண்டுவந்து வசந்தமாலைக்குக் கொடுத்த வுடனே அதைவாசித்துப்பார்த்து மனமகிழ்ந்து அவ்வண்ணமே சாயங்காலத்திற்கு மாதவி நாட்டியஞ்செய்ய வருவாளென்று சொல்லிசேவகனையனுப்பிவிட்டு மாதவியை சிங்காரிக்கும்விதங்காண்க.

வசந்தமாலை தனது குமாரத்தியாகிய மாதவிக்கு
ஆடையாபரணமணிந்துசிங்காரிப்பது - தரு
இ-ம்-இங்குஸ்தானி-சாபுதாளம்.

மாதவிக்கினிமைய தாகவேஸ்நானம்
மங்களமாய் செய்து—மண
மலர்களையுங் கொய்து
கோதிமுடித்ததுக் குழலதையாகக்
கொண்டையில்கு சூட்டி—முருகு
கொப்புசெவியிற் பூட்டி—கையில்
கொஞ்சுகாப்பு மாட்டி—கடவே (மாதவிக்கினிமை)
ரஞ்சிதமாகவே ரவிக்கையுமணிந்து
ரத்னதுடை மின்ன—ப்ரகாச
ரவைசேர்ந்திடும் தவ்வை
செஞ்சிலம்புடனே சிலம்பையக்குஞ்
செம்பொன்புலாக் கிட்டு—பட்டு
சேலைதனை யிடுத் கட்டி—மோதிரஞ்
செவ்விரலி லிட்டு—உடன் (மாதவிக்கினிமை)
காசினித்தன்னில் தருத்திச்சரப்பளியுங்
காசுவேபுகழ் காட்டி—காதிற்
கத்திரிபாவும் பூட்டி
பாசிதழ்சிலக்கவே பாக்குவெற்றிலையை
பத்திரிஜாதிக் காய்—ஏலக்கம்
பாதாமேலக் காய்—இன்னு
பாரில்வெகுருசிக் காய்—என (மாதவிக்கினிமை)



கோவிலனுடைய கலியாணசபைக்கு
மாதவிவருகிற - விருத்தம்.

பட்டுடையணிந்துரத்ன பணிகளாற்சிங்காரித்து
எட்டுதிக்குலகோர்மெச்சும் எழிலுடைமாதவித்தான்
மெட்டுடன்மேளவாத்தியம் மேன்மையதாய்முழங்க
நட்டுவர்கூட்டத்தோடே நடனஞ்செய்வருகின்றாளே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மாதவியை வசந்தமாலை சிங்காரித்து கலியாணக்கச்சேரிக்கு அனுப்பும்விதங்காண்க.

(வசந்தமாலை) குழந்தாய் மாதவி இந்த மை ப்ராணியை பத்திரமாக வைத்துக்கொண்டிருந்து நீநடனஞ்செய்யும்போது உனக்கிஷ்டமானவர்களை இச்சிப்பாயாகில், வெற்றிலையில் இந்த மையைத்தடவி அவர்களுக்குக்கொடுப்பாயாகில் அவர்களுன்பிறகே வந்துவிடுவார்களம்மா

(மாதவி) அப்படியேசெய்து நல்ல தனவந்தனை அழைத்துக்கொண்டுவருகிறேனம்மா.

(வசந்தமாலை) அப்பா நட்டுவர்களே நடனஞ்செய்தானபிறகு மாதவியை ஜாக்கிரதையாக அழைத்துக்கொண்டுவருவீர்கள்.

(நட்டுவர்) அப்படியே நல்லதம்மணி.

நட்டுவர்கூட்டஞ் சூழ்ந்துவர சங்கீதசாஹித்திய
மேளவாத்தியத்துடனே மாதவியானவள்
கலியாணசபைக்கு வருகிற-ஜாடித்தரு.
இ-ம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

முந்தியிதோ வந்தாள்—நாட்டியஞ்செய்ய
மாதவியிதோ வந்தாள்

அநுபல்லவி.

பாதஞ்சிரசுவரை பணியலங்காரமும்
நாதசங்கீதரச நாட்டியஞ்செய்திடும் (மாதவி)

சரணம்.

வர்ணமயிலோயென்று வாலிபர்தேடவும்
வையகரதியென வாணர்கள்பாடவும்
சொர்ணவடிவென்றே சொல்லியேகாடவும்
சோர்ந்திளைஞரெல்லாஞ் சொக்கிபின்தேடவும்

சிரித்துபரமனு ... மெரித்தகாமனும்
தரித்தமதிபுகழ் ... கரித்தியெனுந்திகழ்

பூட்டி—சிங்காரமாய்
நாட்டி—சிவ்ட்டினை
மேட்டி—யாரெனத்
க்ராட்டி—யலங்கிர்த

மிலகவேசுந்தர ... வழகுள்மாதவி
கலகலகலவெனு ... பலர்மெச்சுந்தோதவி (மாதவி)

மாதவி கலியாணசபைக்குமுன்பாகவந்து
கம்பத்தின்மீது ஏறிவிளையாடுவது.

விருத்தம்.

காவிரிப்பூவில்வந்து கலியாணச்சபையோகாண
மேவியகம்பம்நாட்டி மேன்மையோட‍தின்மீதேறி
தாவியேகாணவித்தை தாண்டியேயாடும்போது
ஆவியேதுடிதுடித்து அனைவரும்பார்க்கவந்தார்

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மாதவியானவள் சர்வாபர ணாலங்கிர்தமாகவந்து மாச்சோட்டான்செட்டியாருக்குவந்தனஞ்செய் து தக்ஷிணை தாம்பூலம்பெற்றுக்கொண்டு கலியாணக்சேரிக்குமுன்பாக கம்பத்தைநாட்டி அதன்மீதேறி தான் கற்றுணர்ந்த சிலம்பவித்தை களைச்செய்து கம்பத்தில் கால்விரலையூன்றி கரணம்போடும்போது எல் லோரும் ஓடிவந்துபார்க்கையில் சபையோர்களை இரண்டு கையாலும் கும்பிட்டு நிற்பதைக்கண்ட மாநாகச்செட்டியாரும், மாச்சோட்டான் செட்டியாரும் சொல்லும்விதங்காண்க.

மாநாகச்செட்டியாரும், மாச்சோட்டான்செட்டியாரும்
மாதவிக்குச்சொல் - விருத்தம்.

புத்தியிற்சிறந்தேயோங்கி புகழுடன்மாயஜால
வித்தையாடியபெண்மாதே விரும்பியதென்னவேண்டும்
உத்தமியுரைப்பாயாகில் உன்மனங்களிக்கயாங்கள்
சத்தியமாயளிப்போம் சாற்றுவாயெங்கள்முன்னே

(வ-ம்) கேளாய் மாதவி நீஆடிய கரணவித்தையை யாங்கள்மெச்சிக் கொண்டோம் ஆதலின் வேண்டிய வெகுமதியைக் கேட்பாயாகில் யா ங்கள் தடையின்றித்தருவோம் மாதே.



(மாதவி) கேளுங்களையா செட்டிமார்களே என்னுடன்பிறந்த இந்த பொன்னுருவிமாலையைசபையோர்முன்னிலையில்வைக்கிறேன் அதை யார் கழுத்திலிடுகின்றாரோ அவர்களை யான் அழைத்துக்கொண்டுபோய்விடுவேன் இதற்குச்சம்மதியாகில் தாம்பூலந்தாருங்கள்.

(மாநாகன்) அப்படியே சம்மதமென்றுசொல்லி தாம்பூலந்தந்தோம் பெற்றுக்கொள்வாய் மாதே.

(மாச்சோட்டான்) பெண்ணே வர்ணமாலை நமதுமைந்தனுகிய கோவிலனை வீட்டுக்குள்வைத்து தாப்பாளிட்டு அவனை வெளியில் வராம லிருக்கச்செய்வாய் பிராணநாயகி.

(வர்ணமாலை) அப்படியே செய்கிறேன் நாயகா.

(சபையோர்கள்) மாதவி நவரசலங்கார மமைந்ததிவ்வியகீதங்களை பாடி நேத்திரானந்தமாய்ப்பார்த்து மகிழும்படியாக நடனஞ்செய்வாய்.

(மாதவி) அப்படியே மகாராசர்களே.

பொது - விருத்தம்.

தாளத்தினிசைக்குத்தக்க தம்புருவீணையோடெக்
காளமுஞ்சதியுஞ்சேர்ந்து கின்னரிமுழங்கொலிக்க
மேளமும்முழக்கிநல்ல மேன்மையாய்மீட்டும்போது
ஆளன்மெச்சிக்கதயாக ஆடினாள்சபையிற்றுமின்.

கலியாணசபையில் மாதவி நடனஞ்செய்தல் - தரு.

இ-ம்-இந்துஸ்தானி-செஞ்சுருட்டி-ரூபகதாளம்

பல்லவி.

ஷிரிக்குகந்த மன்னவனே எதிரில் வாராயோ
ஒரு ... முத்தந் தாராயோ (எனக்)

அநுபல்லவி.

வாக்கினிபோல் வாய்திறந்தேன் வடிவழகா யிவ்வேளையென்
தீனக்குறையைச் செய்யவேண்டாம் காமரசமே
மதி ... முயிர் நரசமே (எனக்)

சரணங்கள்.

இத்தனை செட்டிகளுள் எவ்வொளித்தா ரென்ன னவன்
இத்தசன் கணை ... சிந்தை வாடுதே
... ... காமதே (எனக்)

வாராயோ வென்றுரையே வடிவழகலங்காரனே
மாரன்கணை யாற்களைத்து மயங்கலானேனே
சபையிற் தியங்கலானேனே (எனக்)

அழகிலகுஞ் சுந்தரியாய் அவனியிற் பிறந்தாலுமென்
பழவினையா லுன்னடியை பற்றலானேனே
மதி யற்றளானேனே (எனக்)

(கோவிலன்) ஆ ஹா என்னசிங்காரமாய்ப் பாடுகின்றனள். அம்மா கதவைத்திறந்துவிடுவாய் நான்மாதவியின்நடனசிங்காரத்தைப்பார்க்க வேண்டும்.

(வர்ணமாலை) அப்பா வெளியேபோகவேண்டாம்.

(கோவிலன்) ஆனால் இந்தத்தூணில் என் தலையைமோதிக்கொண்டென்து பிராணனை போக்கிக்கொள்ளுவேனம்மா.

(வர்ணமாலை) ஐயோ மகனே இதோ கதவைத்திறந்தேன் போய் பாராடாமகனே.

கோவிலன் சபையில்வந்துட்காருவது

(கோவிலன்) ஆ ஹா என்ன அழகாயிருக்கின்றனள்பார்த்தனையா

(சபையோர்) கோவிலா நீ ஏன் இங்கு வந்தாய்.

(கோவிலன்) நாட்டியம் பார்க்கவந்தேன்.

(சபையோர்) அப்படியானால் இவ்விடத்திற்றனே உட்கார்ந்துக் கொண்டிருப்பாய்.

(கோவிலன்) சந்தோஷம்.

மாதவி தன்னுடன்பிறந்த பொன்னுருவிமாலையை

சபையோர்மீதுவீசியெறிவது - விருத்தம்.

மாதவியாடும்போது மயங்கியேகோவிலன் தான்
நீதமாய்ச்சபையிலேக [illegible]மாலைதன்னை
நாதனார்கழுத்திற்சென்று நலமுடன்விழுவாயென்று
போதனையதற்குச்செய்து பேரவையெறிந்திட்டாளே

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே மாதவியாடிய குரவோசை கோவிலனுடைய செவியில் அமிர்தசம் பெய்திருந்தாற்போலிருக்குஞ் சமயத்தில் தன்னுடன்பிறந்த பொன்னுருவிமாலையையெடுத்துச்சபையோர்



போனஞ்செய்து என்க்குரிய மணவாளன் கழுத்தில் விழக்கடவது என்று சபையோர்மீது வீசியெறிந்தபோது அந்த பொன்னுருவிமாலை கோவிலனைத்தேடிக்கொண்டுவருகின்ற விதங்காண்க.

பொன்னுருவிமாலை கோவிலனைத்

தேடிக்கொண்டுவருகிற - தரு.

இ-ம்-அமீர்தகல்யாணி-ஆதிதாளம்.

பல்லவி.

தேடித்தேடித்திரியுதே—மாதவிமாலை
தேடித்தேடித்திரியுதே

அநுபல்லவி.

வாடிடாமற்கோவில வர்த்தகர்கழுத்திவ்விழ
நாடியவரெங்கேயென்று நாற்புரத்திலுஞ்சுழன்று (தேடி)

சரணங்கள்.

திருதிருவென்று ஜொலித்து—சபைதனில்
சிருக்கின்றோரையும் விடுத்து
பருவப்பெண்மாதவிக்கு பக்ஷமேவும்ரத்னகர்
திருவுருக்கோவிலனை நிரமாயழைத்துவர (தேடி)

கலியாணசபை நடுவே—தகதகென
புவியிதுவா மெனவே
வலியவேயுள் நுழைந்து வந்திடும்மார்தருக்குள்ளே
சலியாமலேபுகுந்து காணியோரதிசயிக்க (தேடி)

சதென்னவிந்தை யெனவே—கண்டோரிதன்
அதிதன்னமோ வெனவே
நீதமுடனேசென்று நிலைதளராமற்புகுந்து
சேதமுறுமலெங்குஞ் செல்லாமலகமகிழ்ந்து (தேடி)

மாதவியினுடைய பொன்னுருவிமாலை

சுழன்றுவந்து கோவிலனுடைய

கழுத்தில் விழுவது.

விருத்தம்.

மாலையுஞ்சுழன்றுவந்து மகிழ்ந்திடுங்கோவிலன்தன்
சேரலையாங்கழுத்தில்நன்றாய் சொர்ணமாமணிபோல்மின்னும்

ஒலியின்சுருளைப்போல ஒழுங்குடன்விழுந்தபோது
வேலைவேதிகர்த்தகண்ணுள் வேசிமாதவிவந்தாளே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மாதவியினுடைய பொன்னருவிமாலைசுழன்றுவந்து சபையோருக்குந்தோற்றுமலும், கோவிலனுக்குந்தெரியாமல்கழுத்தில்விழுந்து ஓலைச்சுருள்போற்சுற்றிக்கொண்டதைப்பார்த்த மாதவியானவள் ஆசையுடனேவந்து கோவிலனிடத்தில் வழக்காடும்விதங்காண்க.

மாதவி கோவிலனுக்குச்சொல் - தரு.

இ-ம்-இந்துஸ்தானி-செஞ்சுருட்டி - ஆதிதாளம்

பல்லவி.

செட்டியா ருனைக்காண என் னெஞ்ச மோங்குதே (செட்)

அநுபல்லவி.

அட் டியில் லாமற் றியாக மளிப்பீ ரெனக் குன்கை
தொட்டு முத்த மிட்டு சர ணிட்டு நின்றேனே (செட்)

(கோவிலன்) என் ஆசைக்கிசைந்த அதிமோக சுகானந்தமாதவியே இதோ ஆயிரம்பொன்பெறுமான இந்த சரப்பளியை உனக்கு வெகுமதிசெய்தேன் பெற்றுக்கொள்ளுவாய்.

மாதவி பொன்னருவிமாலையைக்கேட்பது-தரு.

என்னோ டுதித்தமாலை யுன்கழுத் தூற்றது
வன் மையா யெடுத் திந்த வஞ்சிகையினிற் றரும்
இன்ப சுக வன்பா மகி ழின்பா லோங்கியே (செட்)

(கோவின்) இதேது ஆச்சரியமாயிருக்கின்றது இதோகழட்டித்தருகின்றேன் மாதே.

கோவிலன் தன் கழுத்திலிருக்கும்
பொன்னருவிமாலையைகழட்டுவது.

(கோவிலன்) இதென்ன வரவில்லையே.
(சபையோர் இந்த கத்தியாலறுத்துவிடும்.
(கோவிலன்) கத்தியும் மழுங்கிவிட்டதே.

மாதவி கோவிலனுக்கு வெற்றிலைச்சுருள் கொடுப்பது-தரு

மன்மத ரூபனே மாலைதாவிட்டாலும்
உன் னிதழ் சிவந் தோங்க உந் தமனேதாம் பூலம்
என் கையாற் தரு கின்றேன் புசிப் பீரே மனாளா (செட்



கோவிலனுக்கு மதிமயக்குதல்-விருத்தம்.

மாதவிதான்... வெற்றிலை மடியகத்தே
காதலனுக்கோவிலற்கு நகைமுகத்துடனளிக்கத்தின்று
சீதனமதிமயங்கி செறிவுமறவின்றியேக
வேதனையாகச்செட்டிமுதல் வேமாய்த்தவித்திட்டாரே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மாதவியானவள் வெற்றிலையில் வசிய மையைத் தடவிக்கொடுக்க கோவிலன் அதை உணராமல் வெற்றிலையென்று தின்றது முதற்கொண்டே மதிமயங்கி மாதவியின் பின்னுஞ்செல்லும்போது மாமனும், மாச்சேசட்டானமுதலிய உற்றார் பெற்றார், உறவின்முறையாரெல்லோரும் கூப்பிடுமுறையாக வெளியிலனுப்பி... கேட்க செட்டிக்கொண்டு ஓடிவருவதைக் காண்க.

மாச்சேசட்டான்செட்டியாரும், மாமனுச்
செட்டியாரும் கோவிலனுக்கு
புத்தி சொல்லுவது.

விருத்தம்.

தூயைபோர் கோவிலைபா அன்னைதனைத்தையளித்தும்
பொய்யிலா மென்மடானை பொற்கொடிதனைவிடுத்தும்
மைவிழி வேசியான மாதவியுடனேசென்றால்
வையத்தோருனைநிதிப்பார் மைந்தனேதிரும்புவாயே.

(வ-ம்) அப்பா கோவிலனே உன்னைப்பெற்ற தாய்தந்தையரையும் வெகுஅருமையாக திருமணஞ்செய்த மனையாளையும்விட்டுது வேசியின் பின் நீசென்றால் உலகத்தாருன்னைநிந்திப்பார்கள். ஆகையால் வீட்டுக்குத் திரும்பிவருவாயடா கண்மணி.

கோவிலன்சொல் - விருத்தம்.

தந்தைதாய்சுற்றமேது தாலிகட்டியபெண்டேது
மைந்தனுக்கினிமையான் மாசுகக்கனியானென்னும்
சுந்தரவடிவமாக சுகமெனக்களிக்கவந்த
இந்தமாதவியுமயானும் இன்பமாய்வாழ்ந்திருப்போம்.

(வ-ம்) கேளுங்கள் தாய், தந்தை, சுற்றத்தாரென்னும் சந்தைக் கூட்டங்களே. - எனக்கினி தாயேது, தந்தையேது, உற்றோரேது, பெண்டேது. எனக்கு இன்பசுகந்தருவதற்காக அழகைமிகுந்த சுகா

னங்கமாயவதரித்து பெண்வடிவாகவந்து என்னையழைத்துக்கொண்டு செல்லும் இந்த மாதகியும், யானும் வாழ்ந்திருக்கால்போதும் நீங்கள் வந்தவழியைப்பார்த்துக்கொண் டோடிப்போவீர்கள். சந்தைக்கூட்ட மென்னும் பந்துக்களே.

(மாச்சோட்டான்) சுற்றத்தார்களே அவன் தலையிலெழுதிய விதியப்போலாச்சுது. இனி நாமென்னசெய்வது போகுற்போகிறான். வ்விடத்திலாகிலும் சுகமாய்ப் பிழைத்துக்கொண்டிருக்கட்டும் நாம் ீட்டுக்குப்போவோம் வருவீர்கள்.

(சுற்றத்தார்) நல்லது வருவீர்கள்.

கோவிலனும், மாதகியும் ஒருவரையொருவர்
பிரிவதில்லையென்று பிரமாணிக்கம்
செய்துக்கொள்ளுவது,

விருத்தம்.

இப்படியுரைத்துச்செல்ல இருவருமனது கந்து
கொப்பெவமுர்தலிங்கர் கோவிலினருகில்வந்து
எப்போதும்பிரியேனென்று ஏந்திழையுரைத்தபோது
அப்படியானுமுன்னை அரைக்ஷணம்பிரியேனென்றான்

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே கோவிலனுடைய தாய், தந்தை, சுற்றத்தாரெல்லோருந்தங்களாலானவரையிலும்பிரயாசைப்பட்டும் முடியாமற்போனதால் தங்களிருப்பிடம் போய்விட்டார்கள். பிறகு மாதகியானவள் கோவிலனை திருக்கடையூருக்கு அழைத்துக்கொண்டு வந்து அமுர்தலிங்கேசுர் ஆலயத்திற்சென்று கோவிலனைப் பார்த்து பிராணநாதா யான் உன்னைத்தவிர வேறுபுருஷனை இச்சிக்கமாட்டேனென்று பிரமாணஞ்செய்ததைக்கண்ட கோவிலனும் அப்படியே மாதகியைத்தவிர மற்றபெண்களை விரும்பேனென்று பிரமாணஞ்செய்து வீட்டுக்குவந்தபிறகு நடக்கும்விதங்காண்க.

கோவிலன் மாதகியின் வீட்டுக்குவந்து
கட்டிலின்மீது உட்கார்ந்தவுடனே
கட்டிலின் காலுடைந்து
கீழே விழுதல்.

விருத்தம்.

மாதகிவீட்டுக்குள்ளே மட்டிலமையுடனேசென்று
காதலன்கோவிலர்க்கு கட்டின்மேற்பாய்விரித்து



காதலனையுட்காரென்ன நலமுடனதின்மீதேறி
பாதத்தைவைப்பதற்குள் பகீரெனவிழுந்திட்டானே

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே! மாதகியானவள் கோவிலனை அழைத்துக்கொண்டுவீட்டுக்குவந்துகட்டிலின்மேற் பாயைவிரித்து உட்காருமென்ன நல்லதென்று ஆசையுடனே கட்டிலின்மீதி லேறினவுடனே கட்டிலின்காலுடைந்து திடீரெனகீழே விழுந்ததைக்கண்ட வசந்தமாலையும், மாதகியும்வோடிவந்து எடுத்துஉட்காரவைத்தபிறகு நடக்கும்விதங்காண்க.

(கோவிலன்) பெண்ணே மாதகி என்ன உடைந்ததுகட்டிலின்மீது என்னை உட்காரச்செய்தனையே.

(மாதகி) பிராணநாதா இதைத்தவிர வேறுகிடையாது. உம்முடைய திருவையிருந்தால தங்கக்கட்டில, சொர்ணக்கின்னிமுதலானவையும் செய்துகொடுப்பீர் நாயகா.

(கோவிலன்) அப்படியேசெய்துதருகின்றேனென தங்கைக்கிசைந்த அமிர்தவசனி.

(வர்ணமாலை) குழந்தாய் மாதகி உன்னுடைய பிராணநாதர் பசியாயிருக்கின்றார் சீக்கிரம் சமையலாகட்டும்,

(மாதகி) நல்லதம்மா.

மாதகி சமையல்செய்வது - தரு.

இ-ம்-சுருட்டி-சாப்புதாளம்.

பல்லவி.

சாதங்கறிசமைத்தாள்—கோவிலனுக்கு
சாதங்கறிசமைத்தாள்

அநுபல்லவி.

காதலன்பசிதீர கடுகசமைப்போமென்று
மாதகியன்புடன் மனதுமிகமகிழ்ந்து சாதங்

சரணங்கள்.

பானையிற்றண்ணீரும்—வார்த்துஉலை
டக்ஷமாயிட்டவளும்
சோனைக்காற்றுபோல சொருசாடேபுதி
காணுமரிசிடைம் கழுவியானையிற்பெய்து (சாதம்)

முக்கனி சாறுஞ்சாதம்—வடித்தபின்
முருங்கைக்காய்ப் பொரித்து
பருப்பாற்கூட்டமுதுகள் பக்குவமாய்செய்து
வருத்தாம்பலாக்காயை மாங்காய்க்குழம்புசெய்து (சாதம்)
கத்தரிக்காய்க் கருணை—கிழங்கொடு
முத்தாமுருங்கையிலை
குற்றமில்லாவரால் முற்றுஞ்சமைத்தனள்
கற்பூசணிக்காயால் பப்பளஞ்செய்தனள் (சாதம்)

மாதவி கோவிலனுக்கு அன்னமிடுவது.

விருத்தம்.

காதலனோயெழுந்திரென்று கனமுடன்ஜலங்கொடுத்து
மாதவிமனமகிழ்ந்து மாவாழையிலையிலன்பாய்
சாதமுங்கறிகள்வைத்து சாப்பிடுமென்றுரைக்க
பூகலர்புகழுமன்னம் புசித்துமகிழ்ந்திட்டானே.

(வ-ம்) கேளுங்களைய்யா சபையோர்களே மாதவியானவள் அன்ன பதார்த்தங்களனைவையாவுஞ் சமைத்தபிறகு கோவிலன் ஸ்நானஞ் செய்துகொண்டு நெற்றியில் திருவெண்ணீறணிந்து சிவபூசைமுடித்துக்கொண்டுவரச்சொல்லி வாழையிலையில் அன்னபதார்த்தம்படைக்க எனது ஆசைக்கிசைந்த அழகவல்லபனே அமுதருந்துமென சந்தோஷத்துடனே சாப்பிட்டுவிட்டபோது தாம்பூலந்தரித்துக்கொண்டு உல்லாசமாயிருக்கும்போது தன்தகப்பனாகிய மாச்சோட்டான்செட்டியாருக்கு நிருபமெழுதவிருக்கின்றான்.

மாச்சோட்டான்செட்டியாருக்கு
கோவிலன் நிருபமெழுதுவது.

விருத்தம் - சிட்டுக்கவி.

தேவரீரென்னுடைய தந்தையின்திருவடி
தெரிசித்து நிதமுநோக்கி
தெண்டஞ்சமர்ப்பித்து உன்மகன்கோவிலன்
தெரியவே யெழுதுநிருபம்
காவிரிப்பூம்பட்டினசித்திரமுக்காவடியில்
காணவேகாத்தபொருளை
கருதிடும்பணிகொண்டு கட்டல்களிலேற்றியே
கப்பலையேயனுப்பிவைக்க



தீவிரமாயெங்களுக் கன்பாகவிப்போது
தீரமாயனுப்பவேண்டும்
திருக்கடையூர்பட்டணந்தாசிமாதவியுடன்
தியங்குறேன் வறுமையாலே
ஆவிதடுமாறுதே யன்னமில்லாமலே
அன்போடு யென்னையீன்ற
அன்னைமேலபொருளனுப் பாவிடிலோயெந்தனது
ஆவிநிற்கா தெந்தையே.

இப்படிக்கு,

கோவில்செட்டியார்.

திருக்கடையூர்பட்டணம்.

(கோவிலன்) அப்பா தூதர்களே இந்தநிருபத்தையெடுத்துக்கொண்டு போய் காவிரிப்பூம்பட்டணத்திலிருக்கும் எனதுதகப்பனாகிய மாச்சோட்டான்செட்டியாருக்குக் கொடுப்பீர்களையா.

(தூதர்கள்) அப்படியே தருகிறோமையா.

தூதர்கள் காவிரிப்பூம்பட்டணத்திற்குவந்து
மாச்சோட்டான்செட்டியாருக்கு
நிருபங்கொடுப்பது.

விருத்தம்.

மாசிலாதப்பவிலாட்டும் மாச்சோட்டான்செட்டியாரே
பாசமாயுன்குமாரன் பக்ஷமாயுனக்கிப்போதே
நேசமாய் நிருபந்தன்னை நேர்மையாயுமக்களிக்க
ஆசையோடெடுத்தாரையா அன்புடன்வாசிப்பீரே

(வ-ம்) கேளுமையா செட்டியாரே திருக்கடையூர்பட்டணத்திலிருக்கும் உமதுகுமாரனாகிய கோவில்செட்டியார் உமக்குநிருபமனுப்பினார் வாசித்துப்பாருமையா.

மாச்சோட்டான்செட்டியார் கோவிலனெழுதி
யனுப்பிய நிருபத்தை வாசித்துப்பார்த்து
மனைவிக்குச்சொல் - விருத்தம்.

தந்ததோரோலையைத்தான் தாரளமாய்ப்படித்து
சிந்தையுமகிழ்ந்தோராது சீர்கப்பல்பொருட்பொன்சமான்

தந்திடமாதுமிக்குச் சாந்தினாவனுமப்பே
விந்தையாய்ச்சரக்கையேற்றி வேகமாய்வருகின்றேனே

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே கோவிலன் கையெழுத்தை மாசாத்தன்செட்டியார்கண்டவுடனேகண்ணிலொற்றிக்கொண்டு வாசித்துப்பார்த்து மாலுமியை வரவழைத்து ௰௨-கப்பலில் பொன், வெள்ளி முதலாகிய திரவியங்களும், அரிசி, பருப்பு, நெய் முதலான வைகளுமேற்றிக்கொண்டுபோய் திருக்கடையூர்பட்டணத்தில் மாதவி வீட்டிலிருக்கும் கோவிலனுக்குத் தருவாயென்றுரைக்க அப்படியே நல்லதென்று மாலுமி சாமான்களைக் கப்பல்களி லேற்றிக்கொண்டு வரும்விதங்காண்க.

மாலுமி கப்பலோட்டிக்கொண்டு

திருக்கடையூருக்கு வருகிற

ஏலப்பாட்டு.

ஏலேலோ ஏலலேலோ—பரபலோ
ஏலேலோ ஏலலேலோ
சீர்பெருவுந்திருக்கடையூர்—மாதவி
சிந்தைமகிழ் தேவியவள்
நேர்மையுடன்கோவிலர்க்கு—அனுப்பும்
கீர்த்தியுள்ள சரக்குகளாம்.

முடுகு.

| | |
|---|---|
| அத்தர்புனுகுடன் | சுத்தப்பன்னீரும் |
| அரிசிபருப்புங் | கறிசாமான்களோடும் |
| அன்பாகுங்ஜாதிக்காய் | இன்பாகுந்தேனும் |
| அதிமதுரம்சோப்புக்கு | சதிரானதாரும் |
| அம்புவியோருக்குத் | தெம்பாகத்தோணும் |
| அணிதிகள்பணிதிகள் | துணிமணிகள்தானும் |
| அருமையாம்பொன்வெள்ளி | பெருமையாய்க்கூடும் |
| அமுதினைக்கண்டோர் | பிழையில்லாவோடும் |

இன்ன விதசாமானை கன்னையமா யேற்றி
மின்னற் திருக்கடையூர் சன்னகடை தாசி
உன் னதமே வீடதனை பன்னவும் பேச
வன்மையாய்க்கப்பலிதோ வந்ததையாசாமி



கோவிலனுக்கு மாலுமிசொல்வது.

விருத்தம்.

சந்தோஷமாகத்தானுன் தந்தையுன்கிருபைகண்டு
உந்தனுக்கினிமையான உயர்ந்தபொன்மணிபட்டாடை
விந்தையாயுனக்குகந்த விசித்ரமாஞ்சரக்கையேற்றி
அந்தமீராறுகப்பல் அனுப்பினாருமக்குத்தானே

(வ-ம்) கேளுமையாகோவிலசெட்டியாரே உமது தகப்பனாருமக்கு நவமணி, பொன், வெள்ளிமுதலாகிய பொருள்களும், அரிசி, பருப்பு, முதலானவைகளும் ௰௨-கப்பல்களிலேற்றியனுப்பியிருக்கிறார். பெற்றுக் கொள்வீரையா.

(கோவிலன்) அப்படியே இதோ வருகிறேனையா.

கப்பலிலிருக்கும் சரக்குகளை

கோவிலன் இறக்கிக்கொண்டுவந்து

மாதவிக்குக்காண்பித்துச்சொல்வது-விருத்தம்

மாலுமியோதக்கேட்டு மகிழ்ந்துகோவிலனுஞ்சென்று
காலுமன்றுருங்கப்பல் சுற்சரக்கனைத்துமிறக்கி
சீலமுத்திரை திறந்து சீக்கிரமகத்துள்ளே வி
பாலுறமொழியாளுக்குப் பக்ஷமாய்க்காட்டினாரே

(வ-ம்) மாலுமிசொன்னதைக்கேட்ட கோவிலன் வெகுசந்தோஷத் துடனே ௰௨-கப்பலிலிருக்குஞ்சாமான்களை இறக்கிக்கொண்டுவந்து மாதவிக்குக்காண்பித்து பெண்ணே உனக்கெனனவேண்டுமோ அவை களைதெரிவித்தாயாகில் ஒரு நொடியிற்செய்துதருகிறேன் எனதாசை மிகுந்த அமிர்தமொழியேயென்றுரைத்ததைக்கேட்ட மாதவிசொல் லும்விதங்காண்க.

மாதவிமெத்தைவீடு கட்டிக்கொடுக்கவேண்டும்

என்றுகேட்டதையுணர்ந்த கோவிலன்

முனிசிப்பிடத்திற் தெரிவித்து

௰௨-காணிநிலமைவாங்குதல்.

விருத்தம்.

பணிபெண்டு நடுக்குமெத்தை பணிமிகுந்தகட்டிடப்பின்னும்
சனிவெண்ணையிதைபொல்றொ சாப்பிடமனையமைத்து

பனிபோலுக்கென்றல்வீசும் பஞ்சணையறையும்வேண்டும்
முனிதீப்பினிடத்திற்காணி முன்னான் குவாங்குவீரே

(கோவிலன்) அப்படியேவாங்கி உன் பேரிலெழுதிவைக்கிறேன் பிராணநாயகி,

(மாதவி) மஹாசந்தோஷம்.

(கோவிலன்) ஐயா முனிதீப் பிட-காணிநிலத்திற்கு கிரயமென்ன தெரிவிப்பீர்.

(முனிதீப்) உ௲-டிவராகன்.

(கோவிலன்) இந்தா தந்தேன் கிரயத்தை வாங்கிக்கொண்டு நிலத்தை மாதவிபேருக்கு எழுதிவிடும்.

(முனிதீப்) அப்படியே எழுதினேன் விக்கிரயச் சீட்டைபெற்றுக் கொள்வீர்.

(கோவிலன்) மஹா சந்தோஷம்.

கோவிலன் சிற்பாசாஸ்திரிகளையழைத்து
அலங்காரமாகிய மெத்தைவீடு
கட்டும்படியாக சொல்வது

விருத்தம்

சிற்பரேயிவ்விடத்திற் சிங்காரமெத்தைவீடு
அற்புதக்காக்ஷியாக அவனியோர்மதிக்கப்பெற்று
சொற்படியதிவிநோத சுந்தரபளிங்கினாலே
நற்படிசெய்தீராகில் நாணயபொன்னீவேனே

(வ-ம்) சிற்பசாஸ்திரிகளே எனது ஆசைக்கிசைந்த மாதவி மனமகிழும்படியாக அலங்கிர்தமான மெத்தைவீடுகட்டித்தருவீராகில் உங்களுக்கு நாணயபொன் தருவேன்.

(சிற்பாசாஸ்திரிகள்) அப்படியே நல்லதையா,

சிற்பாசாஸ்திரிகள் மெத்தைவீடுகட்டுதல்,

தரு-இ-ம-இக் தல்தாளி-நாலக்ஷர.

சிற்பிகள் மெத்தைவீடன்புடனினக்குஞ்
சிங்காரம் பாரே—செப்புஞ்
சித்ரவேலைபின் நேரே



கற்படியாயறை சொற்படியாகவும்
காற்புறமதி லெழுப்பி—சுற்றி
நற்பொன்முத்து பரப்பி—செம்பொன்
நாணயமேல் நிரப்பி—நல்ல (சிற்பிகள்)

படுக்கையறையிற்றென்றற் காற்றுவீசும்படி
பளிங்கினால்முத் திழைத்து—நாற்சதுர்
பக்கமெலாஞ் செழித்து
அடுக்கடுக்காயறை முடுக்காயலங்கிர்த
அதிசய மண்டபமும்—குளிக்க
அழகுள மண்டபமும்—சொகுசாய்
அமைத்தனர்மண்டபமும்—நல்ல (சிற்பிகள்)

சுற்றிலுஞ்சுவரெங்கும் பற்றியசித்திரம்
சுத்தபொம்மை யெழுதி—பதுமை
சுயரூபம்போ லெழுதி—ரத்ன
கற்களாலெங்கிலும் பொற்பிரகாசங்
காணவேமகிழ்ந் தோங்கி—கோவிலன்
கருதிடும்படி யோங்கி—முத்து
கனகத்தெருவி யோங்கி—நல்ல (சிற்பிகள்)

சிற்பாசாஸ்திரிகள் கோவிலனுக்குச்சொல்வது.

விருத்தம்.

கோவில்ச்செட்டியாரே கோருமுன்மனதைப்போல
ஆவியுமகிழும்வண்ணம் அழகானமெத்தைவீடும்
மேவியேகுளிக்கும்வீடும் மேன்மையாய்புசிக்கும்வீடும்
பூவிலிலதிசயிக்க புகழுடன்செய்தோமையா.

வ-ம் கேளுமையா கோவிலசெட்டியாரே நீர் சொன்னபிரகாரம் சமைக்கும்வீடும், குளிக்கும்வீடும், புசிக்கும்வீடும், படுக்கைவீடும், வெகுவிநோதமாயிணைத்து பன்னிரெண்டடுக்கு மெத்தைவீடு கட்டி முடித்தோம், வந்துபார்வையிட்டுக்கொள்ளுமையா.

கோவிலன் ஆ ஹா ஹா வெகுஅழகலங்காரசிங்காரமா யிருக்கிறது சிற்பாசாஸ்திரிகளே நீங்கள் மிகவும்கெட்டிக்காரர்கள் ஆகயால் உங்களுக்கு நாணயபொன் தருகிறேன்பெற்றுக்கொள்ளுவீர்கள்.

(சிற்பசாஸ்திரிகள்) அப்படியே மஹாபாக்கியமையா.

கோவிலன் மாதவிக்குச்சொல்வது.

விருத்தம்.

சத்தினக்கற்களாலும் சவைமுத்துச்சொர்னத்தாலும்
மெத்தைவிடுவனக்காயிற்று மெல்லிமாதவியேகேளாய்
சித்திரியுந்தன்வீட்டுச் செலவுக்குதினமென்வேண்டும்
உத்தமியெனக்குரைத்தால் உளமகிழ்ந்திருவேனே

(வ-ம்) எனது ஆசைக்கிசைந்த அழகலங்கிர்த அதிரூபசிங்காரியாகிய மாதவியெனும் மனோரஞ்சிதமே உன்னிஷ்டப்படியே பனிரெண்டடுக்கு மெத்தைவீடுகட்டிமுடித்தேன் ஆதலின் இனிநமக்குயாதொருகுறைவுமில்லை. நினந்தோறமுமுன்னுடைய வீட்டுச்செலவுக்கு எவ்வளவுபொன்வேண்டும் தெரிவிப்பாயாகில் தருகின்றேன மாதே.

(மாதவி) அப்படியே தெரிவிக்கின்றேன் கவனிப்பீர் பிராணநாதா

(கோவிலன்) கவனிக்கின்றேன் நாயகி.

கோவிலனுக்கு மாதவிசொல்வது - தரு.

இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

வீட்டிச்செலவதை—விளம்புகிறேனன்பாய்க்
கேட்டிடுவீரெனக்கு

அநுபல்லவி.

மேட்டிமைவிளங்கிடும் தாஷடீகபுஜபல
காட்டும்வீரனுதர் கோட்டிடீஸ்வராயுள (

சரணங்கள்.

காலைக்கடைச்சிலவு காற்மரக்காற்பொன்
கட்டியேதர வேணும்—பகற்சிலவும்
மாலைக்கடைச்சிலவும் வாங்கவேயொன்னரை
மரக்காற்பொன்தரவேணும்

பாலிதழ்சிவக்கும் பாக்குக்காயிரம்பொன்
நாவிதழ்வெற்றிலை நாகரவாயிரம்பொன்
கோலைபுகையிலை கொள்ளவாயிரம்பொன்
சிலமாயிருவீர் செப்பியவண்ணமென் (வீட்டி)

(வ-ம்) நாதா கவனித்தீரா.

(கோவிலன்) கவனித்தேன், நாயகி இன்னமென்னென்னவேண்டும் தெரிவிப்பாய்.



மாதவிசொல்வது - தரு.

குத்தினிபாவாடை சல்லாரவிக்கைக்
குங்குமப்பாசரிகை சேலை—ஒட்டியாணமும்
ரத்தினஜடையில்லை மயிர்மாட்டிகொப்பும்
ரவைசேர்பொன்னோலை

முத்திறுக்கட்டிய மூக்குத்திவேணும்
உத்தமியென்செவிக் கொளியெனபூணும்
சுத்திரிபாவனுங் கணையாழிவேணும்
சித்தசனேசெய் இடுவீர்காணும் (வீட்டி)

(கோவிலன்) இன்னமென்னென்னவேண்டுந் தெரிவிப்பாய் மாதே.

மாதவிசொல்வது - தரு.

பஞ்சணையலங்கிர்த மாசவேஜோடிக்க
பன்னீராயிரம் பொன்னும்—இரெண்டுே
கொஞ்சியினியாடி மகிழ்வாயிரம்பொன்
கொடுத்தருள்வீ ரின்னும்

வஞ்சியென்நாட்டிய சிலவுக்காயிரம்பொன்
செஞ்சொற்சுதிசேர் சுத்திக்காயிரம்பொன்
அஞ்சாதென்னன்னை யவளுக்காயிரம்பொன்
வஞ்சனையில்லா மற்தரவேணுமென் (வீட்டி)

(கோவிலர்) ஆ எனது ஆசைக்கிசைந்த அழகலங்கிர்த அமிர்தமொழியே இந்த மரக்கப்பல் திரவியங்களையும் வைத்துக்கொண்டு உனக்கிஷ்டமானபடி செலவுசெய்வாய் நாயகி.

(மாதவி) அப்படியே மஹா சந்தோஷம் எனது ஆசைநேசராகிய அழகலங்கிர்த அத்தானே.

பொது - விருத்தம்.

சொன்னமாமணிபட்டாடை சோர்விலாதிவரலித்த
வன்னமாமயிலைப்போல வஞ்சிமாதவியும்பூண
மின்னலாமொளியைப்போன்ற மேன்மைசேர்கோவிலன்தான்
அன்னவட்கடிமைவேலை அனுதினஞ்செய்கின்றானே.

(வ-ம்) சேனுக்கனையாசபையோர்களே மாச்சோட்டான்செட்டியார் 'திரைகடலோடியுந் திரவியந்தேடு,, என்னும் பழமொழிப்படியே அநேக தீவாந்திரங்களிலுங் கப்பலேறிச்சென்று வர்த்தகஞ்செய்து

௯, ௨, ௲, ௯, ௰, ௱, ௲, ௰௲, ௱௲ மாக பணஞ்சம்பாதித்து அதைச் செலவழித்துப்புசிப்பதற்குத்தெரியாமல், வயிற்றுக்கும், நாவுக்குந்துரோகஞ்செய்துசேர்த்துவைத்திருந்த ஆஸ்திகளையெல்லாம் அழிப்பதற்குப் பிறந்த புத்திரசிகாமணியாகிய கோவிலனென்பவன் தன் தகப்பன் அனுப்பிய ௭௨-கப்பல் திரவியங்களையும் மாதவியென்னுந்தாசிக்கு ஆடை ஆபரண முதலாகியதுஞ் செய்துகொடுத்து. நட்டுவனுக்கும், மேளககாரனுக்கும், வாத்தியகாரனுக்கும், தாய்க்கிழவிக்கும் கைகொண்டமட்டும் வாரி வாரிகொடுத்து செலவுசெய்துக்கொண்டிருப்பதுமல்லாமலும், மாதவிக்கு தினந்தோறும் அடிமைத்தொழில் செய்துக்கொண்டிருக்கும் விதங்காண்க.

மாதவிக்கு கோவிலன் தினந்தோறம்

அடிமைத்தொழில்செய்வது-தரு.

இ-ம்-தேவமனோஹரி-ரூபகதாளம்.

பல்லவி.

அன்பாய்க்கோவிலன்தானே—மாதவிக்கு
அடிமைசெய்கின் றானே

அநுபல்லவி.

வன்மையாகடித்து மகிழ்ந்துவிட்டுக்குவர
இன்பமாய்திரேகத்தை இளைப்பாறலேசெய்து (அன்பா)

சரணங்கள்.

பாடியிளைப்பாறல்—பசுவின்பால்
பக்ஷமாகத்தருவார்
நாடுஞ்சதங்கைகள் கழுவியவிழ்த்தாலே,
வாடுறதெடுத்ததை வரிந்தவட்டணிவாரே (அன்பா)
கோதனுகாதிலகும்—மாதவியின்
கொண்டையில்மலர்சூடி
ஜோதியாமுகத்தினிற் ஜொலிக்கும்பொட்டணிகுவார்
காதிற்பிரகாசமாய் கம்மலும்பூட்டுவார் (அன்பா)
பூம்பயிர்த மென்ன—குசியிதுந்
தாம்பூலமுந்தின்ன
சோம்பாமடித்திவர் சொகுசானரஞ்சித
மாம்புகழிதழானே பருந்துவாயென்றன்பாய் (அன்பா)



பொது - விருத்தம்.

இவ்விதம்கோவிலன்தான் இசைந்தமாதவியோடன்பாய்
ஒவ்வியதிமாரன்போர் லோகியேவாழும்போது
செவ்விழிகர்ணகைக்குஞ் சென்றதுயிளமைரூபம்
ஒளிவிபயில்லாமற்றான் அனுதினம்வாக்கின்றாளே.

(வ-ம) சேனுங்களேயாசபையோர்களே இவ்விதமாய் கோவிலனும், மாதவியும் ஒருவரையொருவர்பிரியாமல் இரவும், பகலும்போல சகமாய்வாழ்ந்திருக்கையில், காவிரிப்பூம்பட்டணத்திலிருக்கும் கர்ணகை நாளுக்குநாள்வளர்ந்துவருஞ்சமயத்தில் தன்கழுத்திலுமங்கிலியமிருக்க வேண்டியகாரணமென்னவென்று அதிசயித்து தனது தாதிகளை விசாரிப்போமென்று வருகிறவிதங்காண்க.

கர்ணகைவருகல் - ஓரடித்தரு,

இ-ம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி,

கர்ணகைவந்தனளே—முகப்ரகாச
கர்ணகைவந்தனளே

அநுபல்லவி.

வர்ணமுகத்திலொளி வளர்பிறைமதியென
சொர்ணமணியிலகுஞ் சுந்தரவிதியென (கர்ணகை)

சரணம்

கூறைபுடவை தரித்து—பாதமிளை
குவளையமெய்கு மெட்டி
காலறதண்டொட்டி களும்—பூச்சிகூடுங்
காதிலணிக் கிலுங்கும்
மஞ்சள்குங்குமம்பொட்டும் மகிழும்நெற்றியணிந்து
மிஞ்சுகஸ்தூரிஜவ்வா திலகுவாசமுகந்து
அஞ்சுகமாமிவள் ஆச்சர்யமுப்புனைந்து
எஞ்சலிலாதிப்படி எவர்கள்செய்தாரென்று

கினைந்து—அதிசயம்
புனைந்து—கழுத்திலே
துணிந்து—தாலியு
மணிந்தோ—சிரமனெ

கேட்டு வேயென
மேட்டிமை யாகவே
கூட்டிய ஜனத்திரள்
காட்டிலன் பாகவே (கர்ணகை)

வ-ம் தோழிப்பெண்களே என்மனதிலொரு சந்தேகமிருக்கின்றது.

(தோழிகள்) அம்மணி யாதுகாரணம் தெரிவிப்பீர்.

(கர்ணகை) என் கழுத்தில் மங்கிலியங்கட்டியிருக்குங்காரணத்தை எனக்கு விபரமாகத் தெரிவிப்பீர்கள்.

(தோழிகள்) அம்மணி உன்னுடைய அத்தையின் மைந்தனாகிய புனித மணவாளன் உனக்கு திருமங்கிலியங்கட்டினாரம்மா,

(கர்ணகை) அப்படியானால் இது வரையிலும் எங்குசென்றார்,

(தோழிகள்) அம்மணி அவரிருக்குமிடத்தை யுமது மாமியைக் கேட்டால் தெரியுமம்மா,

(கர்ணகை) நல்லது அப்படியே விசாரிக்கின்றேன்.

கர்ணகி தன்னுடைய மணவாளன்
எவ்விடத்திலிருக்கிறாரென்று
தனது மாமியாராகிய
வர்ணமாலையைக்
கேட்பது - விருத்தம்,

எந்தனுக்கு நமாமி என்கழுத்ததனிற்றாலி
சந்தோஷமாமணிந்த சரசனென்புருஷனெங்கே
சிந்தையுமகிழ்ந்திப்போது சீக்கிரமவரையிங்கே
வந்திடச்செய்வாயானும் மகிழுடன்பார்க்கவேண்டும்

(கர்ணகை) மாமி என் கழுத்தில் திருமங்கிலியங்கட்டிய என்னுடையமணவாளன் எவ்விடத்திலிருக்கின்றார் அவரையான்காணவேண்டுமென்று ஆசையாயிருப்பதால் அவரையிங்குவரவழைப்பீர்,

வர்ணமாலை கர்ணகைக்குச்சொல்வது,

விருத்தம்,

கர்ணகையமிர்தமென்னும் கனிரசவிதழிலங்க
சொர்ணமாம்பணிகள்பூண்டு சொருகுடனெமுன்வந்த
வர்ணமாமயிலென்றேதாம் வஞ்சியேயுன்மணாளன்
மாமமாயிலகுச்தாசி மாதவியுடனேசென்றார்



(வ-ம்) என் மருமகளென்னுஞ் சுந்தரலங்கிர்த சிங்காரக்கர்ணகைக் கனியமுதென்னும் மின்னற்கொடியேஉன்னுடையமணவாளன்,உனக்குமங்கிலியங்கட்டிய மூன்றாந்தினமே கலியாணசபையில்நாட்டியஞ்செய்யவந்த திருக்கடையூர்தாசியாகிய மாதவியுடனேபோய்விட்டார் ஆகலின், தாசிவீட்டுக்குப்போனவனை அழைத்துக்கொள்ளவேண்டால் எங்களுக்குச்சரியொத்த வர்த்தகர்கள் மதிக்கமாட்டார்கள். ஆகையால் உனக்கிஷ்டமிருந்தால் நீ உன் புருஷனை வரவழைத்துக்கொள்ளுவாயம்மா.

(கர்ணகை) அப்படியே வரவழைக்கிறேன் மாமி.

---

கர்ணகை தன் புருஷனாகிய
கோவிலனுக்கு நிருபமெழுது.
விருத்தம் - சீட்டுக்கவி.

தேவரீரென்பிராண நாயகர்திருவடி
தெரிசித்து வெழுதகிருபம்
தேன்மொழியலங்காரி புன்மயிலியானுமே
தெளிவற்று உயிர்கன்று
காவிரிப்பூநகர் மயானவழியேகவே
காலமின்றேடாச்சுதென்
கணவனேயிவ்வேளை வந்தெனதுகாவிதுங்
கையினால் தானிதீர்த்தம்
ஆவிபோகாதுமுன் னீகுவாயென்றனது
அன்போங்கும் கர்ணகைத்தான்
அழைத்தேன்நாயகா பிரியமாயிவ்வேளை
ஆவிரைவி லோடிவந்தால்
பூவிதழாளென்முகம் பார்த்திடுவீரல்லது
பூவிலெனை காணமாட்டீர்
புகழிலங்கிடுமலங் காரனேவடிவழக
புண்யகுண சம்பன்னரே.

இப்படிக்கு,
உமது பிராணநாயகி
☞ கர்ணகை.
காவிரிப்பூம்பட்டணம்.

(கர்ணகை) தூதர்களே இந்த நிருபத்தையெடுத்துக்கொண்டுபோய் திருக்கடையூர்பட்டணத்திலிருக்கும் தேவதாசியாகிய மாதவியிட்டி லிருக்கும் எனது மணவாளராகிய கோவிலசெட்டியாருக்குத் தருவீர்.

(தூதர்கள்) அப்படியே தருகிறோமம்மா.

தூதர்கள் திருக்கடையூருக்குவந்து
கோவிலசெட்டியாருக்கு
நிருபங்கொடுப்பது.

விருத்தம்.

கோவிலச்செட்டியாருங் கொம்பனைக்கர்ணகைத்தான்
மேவியேநிருபமொன்று மேன்மையாயுங்களுக்கு
தாவியேயெழுதித்தந்தாள் தாராளமாகநீரும்
நிவிரமாய்ப்படிப்பீர் திருமுகமுகுள்ளானே

(வ-ம்) கேளுமையா கோவிலசெட்டியாரே உமது மனைவியாகிய கர்ணகையம்மாள் உமக்கு நிருபமெழுதியனுப்பினாள் இதை வாசிப்பீரையா செட்டியாரே.

கோவிலன் நிருபத்தைவாசித்துப்பார்த்து
கர்ணகையைநினைத்து துயரப்படுவது
விருத்தம்.

கைபிறனுனக்குத்தாலி கட்டியில்லையயிது
ஐயமின்றிலகியாமும் அன்புடன்வாழ்ந்திடாமல்
பொய்யுறவாகுந்தாசி பொற்கொடியிடையாளென்னும்
மைவிழிமாதவியின்வீட்டில் வந்துயான்கலங்குறேனே.

(வ-ம்) கர்ணகா! உன்னை யான் திருமணஞ்செய்து மனமகிழ்ந்து வாழ்ந்திருக்காமல் எனது மூடத்தன்மையால் வேசியாகியமாதவியின் வீட்டில்வந்து உன்னை நினைந்துருகி விசனப்படலானேன் நாயகி.

கோவிலனவன் கர்ணகையைநினைந்து
துயரப்படும்போது மாதவிவந்து
விசாரிப்பது - விருத்தம்.

துடித்தழும்பிராணநாதா துலங்குமுந்தனையிப்போது
அடித்தவரெவரோசொல்லும் அவர்களைகம்பத்தோடே
பிடித்திணைத்திறுக்கிக்கட்டி பிரம்பினாலடித்தன்னோரை
இடிக்கிறேனுலக்கையாலே இசைதனைத்தெரிவிப்பீரே.



(வ-ம்) ஆ என்னாசைமிகுந்த அத்தானே நீர் இவ்வண்ணங்கலங்கி துயரப்படும்படியாக உம்மை அடித்தவரைத்தெரிவிப்பீராகில் அவர்களை இந்தத்தூணிலிணைத்துக்கட்டி பிரம்பினாலடித்து அவர்களெலும்பு பொடிய இந்த உலக்கையா லிடித்து அவர்களுயிரை எமபுரத்திற்கு அனுப்புகிறேன்.

தனது மனையாளாகிய கர்ணகையைப்
பார்த்துவிட்டு வருகிறேனென்று
கோவிலனவன் மாதவிக்குச்
சொல்வது-கொச்சகம்.

அன்பேரங்குமாதவியே ஆதிராட்கர்ணகைக்கு
இன்போடுதாலிகட்டி இங்குவந்தேனவளும்
துன்போடுயிரிழக்க துயர்களுமஞ்செய்வதற்கு
பொன்போலிதழாளே போய்வருவேன்ரஞ்சிதமே.

(வ-ம்) என் அன்பிற்கிசைந்த மாதவி. ஆதிகாலிலெனதுஅம்மான் குமாரத்தியாகிய கர்ணகைக்குயான் மங்கிலியந்தரித்து மூன்றுதினமே பிரிந்து வந்துவிட்டேனென்றுமனவியாகுலமாய் இறந்துபோகுந்தருணத்தில் எல்லோரும் தவசிருந்ததாலும் உயிர்நீக்காமலெனைப் பார்க்கவேண்டுமென்று ஏக்கங்கொண்டிருப்பதால் நான்போய்ப்பார்த்துவிட்டுவருகிறேன் நாயகி.

கோவிலனுக்கு மாதவிசொல்வது.
கட்டளைக்கலித்துறை.

ஆசைக்கினியாருசிதயாகும் அமிர்தமொழி.
பூசைக்கினியவளாகியமாதவி பூவையொடு
நேசக்கனியெனமுதந்தங்கொடுத்த நெஞ்சினுமம்
பாசக்கனியெனுமாசையின்றோடே பறந்ததுவோ.

(வ-ம்) ஆ என் அன்பேரங்கும் மங்கள குணாகர சிங்காரங்கிர்த அத்தானவர்களே. நீர் இப்போது சொல்லியதைக்கேட்க வெகு ஆச்சரியமாயிருக்கின்றதே. ஆதிகாலில் நாம் இருவரொருவர்விட்டுப் பிரியோமென்று மகிழ்ந்துவாழ்ந்திருந்த ஆசையெல்லாம் இன்றோடே பறந்துபோய்விட்டதோ.

மாதவிக்கு கோவலன் சொல்வது.

கலிவிருத்தம்.

சுந்தரமேவிய சந்திரமேனியே
உந்தனையானும் பிரிவேனென்றெண்ணாதே
எந்தனம்மனையானைப் பார்த்துயானிங்குனாம்
வந்திடுவேனெந்தன் வஞ்சிமாதவியே

(வ-ம்) பெண்ணேமாதவி யானுன்னைப்பிரிவேனென்று கனவிலும் நினையாதே யான்சென்று கர்ணகையைப்பார்த்துவிட்டு உடனேயிங்கு வந்துசேருகிறேன் பிராணநாயகி.

(மாதவி) அப்படியானுலும்மைப்போலொருபொற்பதுமை செய்து வைத்துவிட்டுப்போவீரானுல் உம்மைப்பார்த்தாற்போலதைப் பார்த்துக்கொண்டிருப்பேன் என் ஆசைக்கிசைந்த அத்தானே.

(கோவிலன்) அப்படியே உனது இஷ்டம்போலபொற்பதுமையை செய்துக்கொண்டுவருகிறேன் பிராணசகி.

கோவிலன் பொற்பதுமைசெய்வதற்கு
கம்மாளனிடம் வருகிற - தரு.
இ-ம-மத்தியாவதி-சாபுதாளம்.

பல்லவி.

கோவிலன் வந்தானே—சந்தோஷத்தோடு
கோவிலன் வந்தானே

அநுபல்லவி.

தாவிபொற்பதுமையுந் தன்னுருபோலவேசெய்ய
மேவிகன்னரைத்தேடி மேன்மையாயெகதிதுருப்ப (கோ

சரணங்கள்.

சொர்ணக்கணந் தியத்தில்—தங்கம்பூவிசை
சேரதெருத்தமுத்தில்
வர்ணவைகூடம்வைப்பும் வடிவிலங்கவேசெய்து
கர்ணகையைக்காண கசிவிடனமகிழ்ந்து (கோ
மிதியடிகாலுக்கிட்டு—கரதிரம்பித்தன்
மின்னும்படியணிந்து
திருவெண்ணீறழகுடன் திருமுகத்தணிவிட்டு
மதிக்கும்பட்டுருமாலை மார்மீதுதாரிட்டு (கோ)



அட்டாளுஞ்சொக்கரென—திருக்கடையூர்
ஆமூர்தலிங்கேசரென
பட்டணத்தோரெல்லாம் பார்த்துதுதித்திட
ஆட்சனங்கன்னர்கள் அகத்திலமதித்திட (கோ)

பொற்பதுமை செய்துக்கொள்வதற்குவந்த
கோவிலனை சொக்கலிங்கேஸ்வரரென்று
நினைத்து கன்னர்கள் வரங்கேட்குதல்.

விருத்தம்.

பதுமைசெய்யுவதற்காக பட்டணத்தேகும்போது
புதுமையாயெவருங்கான பூசித்துகன்னரெல்லாம்
சதுராகவந்திவர்க்கு சாஷ்டாங்கதெண்டனிட்டு
மதுரைவாழ்சொக்கலிங்கா வரந்தாருமெமக்கென்றூரே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே மாதவியின் இஷ்டத்தைப் போல பொற்பதுமைசெய்வதற்காக கன்னாரவீதியில்வரும் கோவிலனை கண்டவரெல்லோரும் நாம்செய்த புண்ணியவசத்தினுல் சொக்கலிங்கேஸ்வரர் வருகிருரென்று ஓடிவந்து பாதத்தைப்பிடித்துக்கொண்டு சுவாமி பக்தரக்ஷக பரமதயாளா சொக்கலிங்கேஸ்வரா எங்களுக்கு சாயுஜ்ய பதவி தாருமையாவென்று ஸ்துதிசெய்வதைக்கண்ட கோவிலன் இதென்னவிந்தை பரமேஸ்வராவென்று கன்னர்களைப்பார்த்து சொல்லும்விதங்காண்க.

)(*)(*)(*)(

தன்னுருவைப்போல பொற்பதுமை
செய்துகொடுக்கவேணுமென்று
கோவிலன் கன்னர்களுக்கு
சொல்வது - விருத்தம்.

மிக்கவேபக்தியோடு விழுந்தெனை துதிக்கின்றீரே
சொக்கலிங்கேசனல்ல செட்டிகோவிலனுனையா
பக்குவப்பருவப்பெண்ணுள் பாவைமாதவிக்குயானும்
தக்கதாய்ப்பதுமைசெய்து தருகுவீர்கொடியிற்றுனே

(வ-ம்) கேளுங்களையாஆச்சாரிகளே நான் சொக்கலிங்கேஸ்வரரல்ல வைசியகுலத்திற்பிறந்த கோவிலசெட்டியார் எனது ஆசைக்கிசைந்த மாதவிக்கு என்னைப்போல் பொற்பதுமை யொன்று வேண்டியதாம்

ஆகவின் சீக்கிரத்திற்செய்துதருவீராகில் உங்களுக்குவேண்டிய வெகுமதிசெய்து மனமகிழச்செய்கிறேனையா.

கோவிலனுக்குகன்னார்கள்சொல்வது.

விருத்தம்.

அப்படிதானேசெய்வோம் அறுதியொருவாரத்தான்
செப்பமாய்ப்பதுமைசெய்ய செல்லுமேசீக்கிரத்தில்
எப்படிசெய்வோமையா எங்கள்முன்னதிசயிக்க
இப்படியுரைப்பீரானால் இருப்பிடமேகுவீரே

(வ-ம்) கேளுமையாசெட்டியாரே பொற்பதுமைசெய்வதற்கு எட்டு நாட்செல்லுமே ஏனென்னில் முதல்நாள் கருவுகட்டி பொன்னையுருக்கி வார்த்துப்பார்ப்போம் எவ்விடத்திலாகிலும் சொட்டையாயிருந்தால் மறுபடியுமிப்படியேசெய்து கடைசியில் சரியாகவந்தபின்பு உமக்குப் பதுமையைக் கொடுப்போமே யல்லாமல் நீர் அவசரமாகச்செய்துக் கொடுக்கவேணுமென்றால் எங்களால் முடியாதைய.

(கோவிலன் சொல்வது) அப்படியானால் கருவுகட்டி தங்கத்தை யுருக்கிக்கொண்டுவாருங்கள் யானே அச்சுவார்க்கிறேன்.

(குட்டிஆச்சாரி) சரி! உமது சொற்படியே கருவுகட்டினேனையா.

(குள்ளப்பஆச்சாரி) ஐயா! செட்டியாரே இதோ தங்கத்தை யுருக்கிக்கொண்டுவந்தேனையா.

பொது - வசனம்.

கேளுங்களையாசபையோர்களே கன்னார்கள் பதுமைக்கிசைந்த கருவமைத்து தங்கத்தையுருக்கிக்கொண்டுவந்தவுடனே கோவிலன் கர்ணகியை நினைத்து எனதுபிராணநாயகி இந்தபொற்பதுமைசரியாகவிளங்கும்படிசெய்வளாகில் இதை மாதவிக்குகொடுத்துவிட்டு வந்துவிடுகிறேன் பதிவிரதாசிரோன்மணியேயென்று தன் கையினாலே உருக்கிய தங்கத்தை அச்சில்வார்க்கும் விதங்காண்க.

உருக்கியதங்கத்தினால் கோவிலனைப்பொற்

பதுமைசெய்வது - தரு.

இ-ம் கலியாணி - அட - தாளம்.

பல்லவி.

பதுமைசெய்தாரே—சொர்ணமயமே
பதுமைசெய்தாரே



அநுபல்லவி.

சதுராயக்கினிமூட்டி தங்கத்தையுருக்கி
சாற்றுங்கருவோட்டி சாட்டமாய்பெருக்கி (பதுமை)

சரணங்கள்.

நாடிபுகழ்பெருநீர்—செம்பொன்கரு
ஓடியுருகுது பார்
கூடியபதுமை குற்றமில்லாமலே
வாடிடாமலொளி பாவிமலக்கவே (பதுமை)

காதுங்கையுமுகமும—கண்புருவம்
பாலெனுஞ்செவ் வுதடும்
சிலமுடனெட்டு திசையுமோர்புகழ்சிறப்பி
நாலதற்கொப்பாக பாலசொருபம்போல் (பதுமை)

கோவிலனைப்போலும்—தனிவாய்
மேவியுஞ் சிங்காரம்
பூவிலிதனுக்கொப் பாகதென்றேயோது
தாவியேசெய்தனர் தங்கமாமாக (பதுமை)

(கன்னார்கள்) ஐயாசெட்டியாரே இதோ பதுமைசெய்துவிட்டோம்.

(கோவிலன்) ஆச்சாரிகளே இதோ உங்களுக்கு ஐம்பது பொன் தருகிறேன் பெற்றுக்கொள்வீர்களையா.

(கன்னார்கள்) அப்படியே மெத்தசந்தோஷமையா கோவிலசெட்டியாரவர்களே.

கோவிலனவன் பொற்பதுமையை எடுத்துக்

கொண்டுவந்து மாதவிக்குக் காண்பித்து

காவிரிப்பூம்பட்டணத்திற்குபோய

கர்ணகைக்குஉரிய கருமாதிகளை

செய்துவிட்டுவருகிறேன்

என்று சொல்வது.

விருத்தம்.

அன்னமேதேனேமானே அழகுமாதவியுன்சொற்போ
லென்னையேபொற்பதுமைசெய்து பெரித்துவந்தேனிப்போது
உன்னிடமிந்தவிருத்தி ஓடியான்கர்ணகைக்கு
பன்னியகருமஞ்செய்து பசுமையாய்வருகுவேனே.

(வ-ம்) எனது ஆசைக்கிசைந்த அதிமோக சுகானந்தமெனும் மாதவி உன்னிஷ்டப்படியே என்னைப்போல் பொற்பதுமை செய்துக்கொண்டு வந்தேன் ஆதலின் இதை உன்னிடத்தில்வைத்துக்கொண்டு என்னை யனுப்புவாயாகில் அதிசீக்கிரத்திற்சென்று கர்ணகைக்குரியஉத்தரிமை யாவும் செய்துவிட்டுவருகிறேன் பிராணநாயகி.

(மாதவி) இது என்னுடன் பேசிக்கொண்டிருக்கும்படி செய்வீராகி லும்மை அனுப்புகிறேன் பிராணநாதா.

(கோவிலன்) நல்லது அப்படியேபேசச்செய்கிறேன் ரஞ்சிதலங்கார சிங்காரியெனும் மாதரசே.

கோவிலனானவன் பொற்பதுமைபேசச்செய்வது-தரு

இ-ம்-மோகனம்-சாப்புதாளம்.

கண்ணிகள்.

பதுமையின்நெற்றித்துப் பொற்பிட்டுகர்ணகை
 பதிவிரதையானு வித்த—சிலை
 அதிரவேபேசுமென் றந்த—தாசி
புதுமையோயிதுவென மதித்திடக்கோவிலர்
 புகழோங்கி நின்றிருந் தாரே.

மாதவியினுடன் பொற்பதுமைபேசுதல் - தரு.

ஆஹா மதனியென் னண்ணனுக்குப்பதில்
 ஆள்துணையுனக் காவேன்—உண்மை
 ஆகுமுனைவிட்டுப்போகேன்—மாதே
ஓஹோ இவரையிங்கில்லாம லிப்போதே
 ஓட்டுவாய்சீக்கிரந் தானே (ஆஹா)

மாதவிபேசாதிருந்தமையால் பதுமைகோபித்து

பிரம்பாலடிக்குதல் - தரு.

வன்மையாயென்முன்னே பேசினதுன்னிட
 வாய்முத்ததிருமோ மாதவி—உன்னை
 வாட்டுகிறேன்பாராய் மாதவி—இந்த
பொன்பிரம்பாலுந்த னங்கந்தழும்பேற
 பொற்கொடியிப்போதே ஜாடுவேன் (வன்மை)



மாதவி பிரம்படிக்குப்பயந்து கோவிலரையனுப்புவது

விருத்தம்.

பதுமைமாதவியின்மேற்கோ பாவேசங்கொண்டெழும்பி
உதைகுத்து அடிகளென்னும் உச்சிதவெகுமானந்தான்
இதமுடன்கொடுத்தபோது எங்கிருந் யந்தப்போதே
மதியுள்ளசெட்டியாரே மனம்போற்செல்லென்கின்றாள்.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பொற்பதுமைகோபாவே சங்கொண்டு மாதவிக்கு உதையும், குத்தும் போதுமட்டுங் கொடுத்த வுடனே மாதவிபயந்து கோவிலனை போய்வாருமென்றனுப்பியபிறகு நடக்கும்விதங்காண்க.

கோவிலன் வழியில் வரும்போது

சித்திரை வந்தபடியினால்

சித்திரமுகச்சாவடியில்

படுத்துறங்குவது.

விருத்தம்.

கோவிலச்செட்டியாருங் கோதைமாதவியளித்த
மேவியவிடையையேற்று மேன்மையோடன்பாய்வந்து
தாவியேபுகழுஞ்சித்ர சாவடிதன்னிற்சென்று
பூவினிலெவருமெச்ச போய்படுத்துறங்கினாரே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கோவிலனானவன் மாதவி யினிடம்உத்திரவுபெற்றுக்கொண்டு கர்ணகையைக் காண்பதற்குவரும் போது வழியில் மூதேவி ஓடிவந்து இழுத்துக்கொண்டுபோய் சித்திர முகச்சாவடியில் சயனித்துக்கொள்வதற்கு ஆக்ஞாபித்ததைக் கண்டு நித்ராணந்தமாய கும்பகர்ணனைத்தூக்கத்திலெனக்கு நிகரில்லையென்று நித்திரைசெய்யும்போது நடக்கும்விதங்காண்க.

கர்ணகை அஞ்சனம்போட்டுப்பார்த்து

பதுமைக்கு சாபங்கொடுப்பது.

விருத்தம்.

அப்படியவருறங்க அஞ்சனம்போட்டுப்பார்த்து
செப்புகர்ணகையின்முன்னே சேர்விலர்தனமாதோடு
ஒப்பியங்கதாவந்தோத ஒளியுற்றபதுமைசாக
இப்படிசாபந்தந்தாள் இருந்தகேதிலேநலந்தி

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கோவிலன் சித்திரமுகச் சாவடியில் சயனித்துநித்திரைசெய்யும்போது கர்னகை அஞ்சனம் போட்டுப்பார்த்து மாதவியினிடத்திலிருக்கும் பொற்பதுமை இறந்து போகும்படி சாபங்கொடுத்தபிறகு நடக்கும்விதங்காண்க.

பொற்பதுமையிறந்ததைக்கண்ட
மாதவி விசனப்படுவது.

விருத்தம்.

நொய்யலேபதுமைசாக நோக்கியகர்னகைக்கு
பொய்யிலாதுயரமோங்கி புரண்டழுதேங்கிவிம்மி
ஐயையோசிலைமாண்டிறந்தே அம்மணியென்வயற்றில்
கையினாலடித்துக்கொண்டு காலனார்போவேனென்றாள்.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கர்னகைசாபத்தால பொற்பதுமையிறந்து திடீரென்று பூமியில்விழுந்ததைக்கண்ட மாதவி திகைத்திட்டு வயற்றிலடித்துக்கொண்டு துயரப்படும்போது நடக்கும்விதங்காண்க.

வசந்தமாலை கோவிலனுக்கு நிருபமெழுதுவது.

சீட்டுக்கவி.

மகராஜராஜஸ்ரீ யென்னுஞ்சிறந்திசி
  பெருமகன் கோவிலர்க்கு
மனமதசொரூபமா யோகதியோதனகனம்
  மாகுமியோ டேசங்கில்லா
புகழோங்குமாமியா ரசீர்வதித்தினி
  புகலுமோர் விண்ணப்பமே
புனிதமனையுன்மனைவி மாதவியிறந்தனள்
  பொற்கொடியா ளென்னசெய்வேன்
ஜெகமீதுநீயன்றி யாரெனக்குத் துணை
  செட்டியா ரையையறோ
செங்கமலபிரகாச மோகவிலக்கிவ்வேளை
  செல்விமாதவி தன்னையே
நிசம்மாயனத்தினிடை சேர்த்துக்கொளுத்தியே
  நீருக்னி செய்துகருமம்
நிலையுடன்செய்தபின் னேகுவீரயாளினி
  நிர்ப்பாக்ய வதியானவே.

இப்படிக்கு,
வசந்தமாலை.
திருக்காவேரிப்பூம்பட்டணம்,



(வசந்தமாலை) தூதர்களே! இந்த நிருபத்தை எடுத்துக்கொண்டு போய் கோவிலசெட்டியாருக்குக்கொடுத்து அவரை சீக்கிரமாயழைத்துக்கொண்டு வருவீர்கள்.

(தூதர்கள்) அப்படியே நல்லதம்மணி.

தூதர்கள் கோவிலனுக்கு நிருபங்கொடுப்பது.

விருத்தம்.

பூமிலெங்கிலுஞ்சிறந்த புகழுடன்கீர்த்திபெற்ற
கோவிலச்செட்டியாரே கொம்பனைவசந்தமாலை
மேவியநிருபமொன்று மேன்மையாயெழுதித்தந்தாள்
தாவியேயிதிலிருக்குஞ் சங்கதிவாசிப்பீரே

(வ-ம்) கேளுமையா கோவிலசெட்டியாரே உனது மாமியாராகிய வசந்தமாலையுமக்கு நிருபமெழுதித்தந்தனள் இதனை வாசிப்பீரையா

கோவிலன் நிருபத்தைவாசித்துப்பார்த்து
விசனப்படுவது

விருத்தம்

ஐயையோவென்னசெய்வேன் அழுதுலிக்கேசாமிந்த
வையமீதினிலெனக்கு வந்திடுங்காலமேதோ
பொய்யிலாயெனதன்பாகும் பொற்கொடியழகிலங்கும்
சையொமொழியாளான சாவியும்மடிந்திட்டாளோ

(வ-ம்) அரஹரா! கைலாசவாசா யானென்செய்வேன் எனதாசைநேச விசுவாச மிகுந்த சுகானந்த மோகனலங்கிர்த மாதவியுமிறந்தனளோ? ஆ எமதூதர்களே யானில்லாத சமயம்பார்த்திருந்து ஒருதாக வந்து மாதவியைப் பிடித்துக்கொண்டு போகலாமா?

கோவிலன் கர்னகையை நினைந்து
விசனப்படுவது.

விருத்தம்.

காதலியென்னசெய்வேன் கர்னகாயுனக்குயானும்
தீதியாய்க்கருமஞ்செய்ய நிகழுமாகவந்தும்
பாதியாமவழிக்குள்ளாக பகன்றிடும்வழக்குக்கோர்த்து
வாதிதோவந்ததாலே வஞ்சியேதவிக்கின்றேனே

(வ-ம்) ஆ கர்ணகா உனக்கு உபசாரிமைகருமஞ்செய்வதற்காகவரும் போதுவழியிலிவ்வித இடையூறுசேர்ந்தமையால் என்மனக்கிலேசத்தை யாருக்குச்சொல்லுவேனென் நாயகி.

வசந்தமாலையனுப்பியதூதர்கள் வசனம்.

செட்டியாரே காலதாமதம்செய்யாமல் சீக்கிரமாய்ப் புறப்படுவீராக ஐயா.

(கோவிலன்) இதோ வருகின்றேனையா

கர்ணகையனுப்பியதூதர்கள் வசனம்

செட்டியாரே எங்களுக்கென்ன சொல்லுகின்றீர்.

(கோவிலன்) ஐயா இந்த ஐம்பது பொன்னையும் வாங்கிக்கொண்டு போய் கர்ணகையின் ஆபரணங்களை மெல்ல வைத்திருப்பதால் இரகசியத்தை சவுக்கியப்படுத்துவீர்கள்.

கோவிலன் திருக்கடையூருக்குவரும்போது

மாதவியைநினைத்துவருத்தப்படுகிற-தரு.

இ-ம்-முகாரி-ஆதிதாளம்.

கண்ணிகள்.

சுந்தரமோகினி மெத்தவுக்கன்பாவ — மாதவியே-எந்தன்
சுகலீலாசஞ்சித சிங்காரியென்செய்வேன் — மாதவியே

எந்தனைவிட்டுப் பிரியவுந்தன்மனம் — மாதவியே-உனக்
கெப்படிவந்ததோ தப்பிதகாலமோ — மாதவியே

பஞ்சணைமீது படுத்துறங்கும்போது — மாதவியே-ஐயோ
பாவியெனைநினைந்து பரதவித்திருந்தாயோ — மாதவியே

செஞ்சொற்கிளியேபான்சென்றேனென் றுன்மனம் — மாதவியே
சோர்ந்துவருந்தி சிவலோகம்போனாயோ — மாதவியே

அரஹராசிவசிவா ஆகிரேனவிதிதானோ — சொக்கநாதா-மிக்க
அழுதுள்ளகங்கரி ஆவிபொழிந்தாளோ — சொக்கநாதா

தரணியிற்கர்ணகைதானிறந்தாலுமே — சொக்கநாதா-என்
தாசிமாதவியும் சாவதற்குண்டோ — சொக்கநாதா

கோவிலன் வீட்டுக்குவந்தபிறகு மாதவியைப்பார்த்து

அதிசயித்துச்சொல்வது.

விருத்தம்.

அன்னமேமயிலேகேளாய் அழகுமாதவியேநீயும்
முன்னமேயிறந்தாயென்று மோசமாயெழுதியுந்தன்



அன்னையும்கிருபத்தன்னை அனுப்பியதென்னவிந்தை
பன்னுவாயிதையெனமுன்னே பதறமோசம்செய்தேனே

(வ-ம்) பெண்ணே மாதவி யான்கொஞ்சநாளைக்கு முன்பே நீ இறந்துவிட்டாயென்று உன் தாயார் மோசமாக எழுதியனுப்பினாளம்மா ? இதென்ன ஆச்சரியம்

கோவிலன்வந்தசங்கதியை வசந்தமாலைக்கு

மாதவி தெரியப்படுத்துவது

விருத்தம்.

சித்தசன்மகனைக்கொப்பாய் சிங்காரமிகுந்தபெருந்தன்
அத்தானும்வந்தாரம்மா அவரையான்செய்வதென்ன
உத்தமியுரைத்தபாலுன்னுடைமனக்கிருப்தியாக
இத்தருணம்செய்வேனம்மா இசைவுடனே தெரிவிப்பாயே

(வ-ம்) அம்மணி எனது ஆசைமிகுந்த அழகலங்கிர்த அத்தான் இதோ வந்துவிட்டார் இவரை என்னசெய்யவேண்டுமென தெரியப்படுத்துவாயம்மா.

வசந்தமாலை மாதவிக்குச் சொல்வது.

விருத்தம்.

நல்லதென்மகளேகேளாய் நாட்டில்வாழ்மாந்தர்தம்மிலே
சொல்லுமிவ்வேசிவீட்டில் சேர்ந்தவர்பிழைப்பதுண்டோ
இல்லமையாகச்சென்று வர்த்தகனுடம்புமற்ற
எல்லைபோகமெல்லாம் எடுத்தெனமிருந்திலாராய்

(வ-ம்) எனது அருந்தவப்புத்திரியே தாசிவீட்டுக்குவந்து தப்பிப் பிழைத்தவர்களிந்தத்தரணியிலுண்டோ ? ஆ இதென்னவிந்தை யும் [illegible] தச்செட்டியாரை சும்மா விடக்கூடாது ஆதலின் அவன் இரகசியத்தில் [illegible]விருக்கின்றஆபரணமுதலானவையாவையும் பிடுங்கிக்கொண்டு வருவாயம்மா.

(மாதவி) நல்லது அப்படியே செய்கிறேனம்மா.

கோவிலனுடைய ஆபரணங்களை

மாதவிவாங்கிக்கொள்வது-தரு

இ-ம்-அசாவேரி-ஏகதாளம்.

கண்ணிகள்.

அத்தான்போலப்பார்த்திருந்த — அடியாள்மனந்தேற
ஆண்டவனேஅழகா — அணிபணிகள்தாரும்

(கோவிலன்) இதோ தந்தேன் வாங்கிக்கொள்வாய். கனிமொழியே.

மாதவி சொல்வது - தரு.

தாம்போலப் பார்த்திருக்க — பாக்குபையைத்தாரும்
ஆசைமுருகுடனே தகவே — யாழியதைத்தாரும்

கோவிலன்) இதோ தருகிறேன் என்மனோரம்மிய மாதவிக்கிளியே

மாதவி சொல்வது - தரு

சந்தவஸ்திரமும் — உருமாலையுந்தாரும்
அம்போலிலகுமனைக் — குட்டையதைத்தாரும்

(கோவிலன்) இதோ தந்தேன் பெற்றுக்கொள்வாய் பெண்மயிலே

தரு.

— தந்திரகூலியாலும்
காடியுன்பேரெப்பார்த்திருப்பேன் — காதாதலேனும்

(கோவிலன்) இதோ சிறைத்துக்கொடுத்தேன் வாங்கிக்கொள்ளு
ப் அழகலங்கிர்த பிரகாசரஞ்சனி

மாதவி சொல்வது - தரு

அங்குரியானன்னைமிகச் — சந்தோஷமாய்நாடும்
உத்தரவழிவழிகையெனக் — குண்மையுடன்தாரும்.

கோவிலன்) இதென்ன ஆச்சரியம் இனி உன்னிஷ்டப்படியே செய்
க்கொள்ளுவாய் மாதே.

முராதகையிலகப்பட்ட பூமாலையைப்போல
மாதவி கோவிலனை கசக்குவது.

விருத்தம்.

சத்தியினுப்பல்லாத்தை காதலாய்சாண்டிக்கொண்டு
சித்திரப்பாவையின்மேற் கிடத்திகம்பளியைமூடி
சித்தமுங்கலங்கிசோர்ந்து சிந்தனையிபர்வையெல்லாம்
சுத்தமாய்சொம்பிலேந்தி சுகமுடனெடுத்துவந்தாள்

மாதவி வசந்தமாலைக்குச் சொல்வது

கலிவிருத்தம்

அம்மணிகோவில அந்தானைப்பார்த்தையா
செம்மையதாய்புகழ் சிங்காரலங்கிர்த
நம்மிடம்வந்தயென் நாயகரஞ்சித
இம்மனுக்கின்னமுந் திட்டமென்சொல்வாய்



வசம் அம்மா அந்தானைப்பார்த்தனையா அணிபணியாடையாவும்
ந்த இருப்பது இம்மனைப்போலிருக்கிறார் இவருக்கின்னமென்னென்
ா தண்டனை விதிக்கலாமம்மா.

வசந்தமாலை மாதவிக்குச் சொல்வது

விருத்தம்

அடியெந்தன்மகளேகேளாய் அந்தவிம்பனைக்கிணற்றில்
கொடிக்குள்ளேதள்ளிவிட்டு கோக்குங்கற்பாறைமூடி
மடித்தவனுயிரைவாங்கி மயானத்தின்வழியைக்காட்டி
அடித்திடச்செய்தோமானால் தாசியென்பதுமெய்தானே.

மாதவி அப்படியே செய்கிறேனம்மா

மாதவி கோவிலனுக்குச் சொல்வது

விருத்தம்

சித்தனைநான்பொறுத்து எந்நேரமுநாண்பதம்மை
அத்தானேயுனதங்கையால் அன்புடன்கிணற்றுநீரை
சுத்தமாய்முகந்தெனக்கு சுகமுடன்தருவீராகில்
இத்தினியானந்தம் இன்புடன் மகிழுவேனே

கோவிலன் அப்படியே தருகிறேன் பிராணநாயகி

மாதவி கோவிலனை கிணற்றில் தள்ளுவது

விருத்தம்

சொம்பதில்கயிற்றைமாட்டி சொகுசுடன்படியிறங்கி
வம்பிமாதவியுமெச்ச வகையுடன்கிணற்றுநீரை
ஐம்பமாய்முகந்தபோது ஜாடையாய்க்கிணற்றில்தள்ள
சம்போமாதேவாவென்று சாய்ந்தியேவிழுந்திட்டானே

கோவிலன் கிணற்றில்விழுந்து தத்தளித்து

மாதவியைநினைந்துயரப்படுவது-தரு,

இ-ம்-பியாகடை-சாப்புதாளம்

கண்ணிகள்.

கிளிமொழியமிர்தமே — கேணியில்யான்விழ
கிலேசப்பட்டிருந்தாயோ — மாதவியே

களிகூர்ந்தநுதினமும் — காண்பேர்மனமகிழ
கலங்கா திருந்தோம் — மாதவியே

காயும்வெய்யிலிற்பட்டு கரைந்துருகும்மெழுகுபோல்
கிணற்றில்விழுந்திட்டாயோ மாதவியே

கீழிறங்காற்புளி கிளைக்குமோமண்மீது
கிளியைசெய்ந்தேனே மாதவியே

{ மாதவியை நினைந்து துயரப்படும் கோவிலன் கண்ணகியைக்
{ கொழுந்து உயிர்போகுங்காருணத்தில் கண்ணகையைநினைப்பது

பத்தாதும்பத்தினியே பழுதாகாரத்தினமே
பத்தாயானுமாகுகிறேன் கண்ணகையே

உத்தமியானிங்கே உயிரிழந்தாலுனக்கு
உற்றசேதியார்சொல்வார் கண்ணகையே

தாலிகட்டியுந்தனை மூலைவீட்டிலில்வைத்து
தாசிவீட்டில்வந்தேனே கண்ணகையே

நீலவிழியாளே பாலமுதேயெந்தன்
கெட்டுயிர்சோருதே கண்ணகையே

கோவிலன் கிணற்றிலிருந்து தப்பித்துக்கொண்டு
மாதவியின் வீட்டுக்கு வருவது,

விருத்தம்.

உத்தமிபேரைச்சொல்ல உற்றதோர்கங்கையதுசி
சித்தமுமகிழ்ந்துநீரை சீராகப்பொங்கச்செய்தாள்
பித்தனுஞ்செட்டியாரும் பிழைத்தோமென்றேங்கிவாயால்
சத்தியேகூவிக்கொண்டு கணிகைமுன்வந்திட்டானே.

கோவிலன் மாதவிக்குச்சொல்வது.

விருத்தம்

என்னையுங்கிணற்றில்தள்ள எப்படிமனந்துணிந்தாய்
பன்னுவாயடியென்றுன்னே பசுதமோகமிடுசெந்தேனே

மாதவி கோவிலனுக்குச்சொல்வது.

விருத்தம்.

பொன்னைத்தானுனையெடுக்கப் போயழைத்தேன்ஆரானை
என்னத்தான்சொன்னலுந்தான் எவர்களும்வருமேனென்றார்.

வசனம் எனதுஆசைமிகுந்தஅத்தானே நீர்கிணற்றில் சரக்கி விழுந்
ததைக்கண்டு என் மனந்தாளாமல் இந்த ஆராளைப்போ யழைத்தேன்



எவர்களும வராமற்போயென் றுனைக்கதிலுல் யான் துயரப்பட்டுக்
கொண்டிருக்கும்போது எனது பதிவிரதா தருமத்தினுல் பிழைத்து
வந்தீர் இச்சங்கதியை என் தாயாரிடத்தில் சொல்லிவிட்டுவருகிறேன்
நீரிந்தப்பஞ்சணையின்மீது உட்கார்ந்துக்கொண்டிருப்பீர் நாயகா.

கோவிலன் நல்லது அப்படியேதெரியப்படுத்துவாய் என்ஆசைக்
கிசைந்த அன்போங்கும் நாயகி.

மாதவி அம்மணி கிணற்றில் விழுந்த கோவிலசெட்டியார் எப்படி
யோ பிழைத்துக்கொண்டுவந்தாரம்மா.

வசந்தமாலை அப்படியானுல் ஆற்றிலேதள்ளிவிடு அப்படியேயிறந்
துபோய்விடுவானம்மா

மாதவி அப்படியே செய்கிறேனம்மா.

மாதவி கோவிலனுக்குச் சொல்வது

கொச்சகம்.

அத்தானென்றுஞ்சிதமே அழகிலங்குநாயகமே
எத்தனைநாட்சென்றிடுமோ எத்திசையானாலும்
சித்தமகிழ்ந்தேயனுசிதத்திலைனைத்தேய்ந்தன்பாய்
இத்தருணம் என்னோடு இன்புடனேசெய்வீரே.

வசனம் எனது ஆசைமிகுந்த அத்தானே ஆற்றுக்குவாரும் ஸ்நானஞ்
செய்துக்கொள்ளுவீர்.

(கோவிலன்) அப்படியேமகாசந்தோஷமன்ன தாசைமிகுந்தமாதவிநீ
ஜுடன் பந்துமாக என்ற சித்திரையில் என்னெனவே துக்கிவிடு
துப்பதுமாக என்து சித்திரைவில் என்னெனவோ துக்கிவிடு
கன்தோற்றுகிறது ஆதலின் உனது ஆசைதீர உன்னையால் என் தலை
யில் என்னைதேய்த்து எனக்கு ஸ்நானஞ்செய்துவைப்பாய் அழகலங்
கிர்த கதாஞ்சலி.

மாதவி அப்படியே மகாசந்தோஷம். எனது ஆசை தேசவிசுவாச
அழகலங்கிர்த அத்தனே.

மாதவி கோவிலனுக்கு எண்ணெய்தேய்க்குதல் - தரு

இ-ம-அடாணு-ஆதிதாளம்.

பல்லவி.

அன்புடனெண்ணெய்—யுன்தலையதனில்
அனிந்திதோ தேய்க்கின்றேன்

அநுபல்லவி.

இன்பசுகானந்த — மிலகிடுமாரா
என்மனமகிழும் — எழிற்குணதீரா — அன்புட

சரணங்கள்.

உச்சிதந்தேப்பதிகோ உன்செவிக்கண்ணே
உபதிபாயிட்டேனே — கன்னிகளிதோ
கச்சிதமாய்ச்செரிக் குச்சிதரீரை
க்கசக்கியடித்திட்டேனே

மெச்சுமுர்தன் திரு — மேனியைத்தொட்டு
இச்செகமீதில்ப — இனியவைகூட்டு
மிச்சமயப்புரி — இல்லாறுபாட்டு
தக்கிடதீத்மென — தாளங்கள்போட்டு — அன்பும்

மாதவி வசனம்.

எனது ஆசையிருந்த அத்தானே உனக்கு என்னையும், சீயக்காயும் தேய்த்துவிட்டேன இனி இந்த ஆற்றில் இறங்கி ஸ்நானஞ்செய்துக்கொள்ளுவீர்.

கோவிலன் எனது அன்புக்கிசைந்த ஆசைகாமினி ஆற்றில்வெள்ளம் புரண்டு இருகரையும் பெருகியோடுதே இச்சமயம் ஜலத்திலிறங்கினால் மயானத்திற்கனுப்பிவிடுமேயென்று பயமாயிருக்கின்றதே காமினி

மாதவி நாதா பயப்படவேண்டாம் இந்த ஒறுசெடியைகமது இடுப்பில் கட்டினேன், அஞ்சாமல் ஜலத்தி லிறங்குவீர் ஒருவேளை ஆற்றில் மூழ்கிவிட்டாயில் கரையிலிழுத்துவிடுகிறேன்

(கோவிலன்) அப்படியானால் இதோ ஆற்றிலிறங்கினேனென்று முழுகலின்த சந்தர்ப்பம்,

கோவிலனை ஆற்றில் அடித்துக்கொண்டுபோவது தரு.

இராகம்-இங்குலீஷ்-தாளம்-ரூபகம்.

ஆற்றிற்கோவிலனும் அன்பாயிறங்கவே
அச்சமயந் — தன்னில் — மாதவி
அருத்தாள்செடி தன்னை
சாற்றியமோகத் — தாசிவனமுநி
சரக்கெயற்றில் — விழுந் — தவறி
ஜலத்தனிலே — முழுகி — இலதி
சலத்திவனும் — மார்க — செய்து



அலையிற்றுரும்புபோ — லலைகியவன் கட்டைய
அக்கணமெலேர் — இடவே — கண்டு
ஆசைமாதவி — யெனவே
விலைகாவெள்ளம்புரண்டு கிலந்தோடிவனைசேர்க்க
நிகரிலாசெந் — தேனே — கர்லுமவென்
இலைக்குகமதிற்ந் — தானே — யுயிரோன்
கலத்தென்றுகாண் பேனோ — வென்று — ஆற்றில்

கர்லகாகர்லகா — கர்லகாவென்றிவன்
கதறிக்கதறி — யழுவே — கண்ணாக
கண்டிமகிழ்க் — இடவே
தர்மமாய்ப்போகுமென் — றவட்கனிடைக்கு
தன்னிஞன்கரை — மேலே — இவனுக்
தயக்கிமென — மேலே — அருந்த
தத்தளித்தோய்க் — இடவே — புரண்டுருண் — டாற்றில்

கோவிலன் அத்திமரமீதேறியுட்கார்ந்து

பழம்பறித்துண்பது.

விருத்தம்.

கரையின்மேற்சேர்ந்துவிழுந்து கிளைத்தியவன்பயமாலேசய்ந்து
இரைதேடிமேத்திபோல இன்புடன்மரத்திலேறி
பரப்புடனேயத்தி பழந்தனையருந்தும்போது
தரணியில்வாழும்பெண்கள் தண்ணீர்க்குவந்திட்டாரே

ஆற்றுக்குவந்த கன்னிகையின்தோழிகளிலொருத்தி
பழம்பறிப்பதற்கு அத்திமரத்திலேறி
கோவிலனைக்கண்டுபயந்து
மற்றப்பெண்களுக்குச்
சொல்லுவது

விருத்தம்.

கருப்பிசாசுதானோ கண்டாயோமரத்தின்மீது
இருப்பதுராக்கென்றேறாள் இம்மரம்வந்துட்கார்ந்து
இருப்பதால்பயந்து இறங்கினேன்கண்ணேயிதோகண்டு
சருக்குடன்விட்டுப்போவோம் தானிதுயாமறிவீரே

சுந்திரம் மாத்திலிருக்குங்கோவிலனை
உற்றுற்றுப் பார்த்து மற்றுந்
தோழிப்பெண்களுக்கு
சொல்லுவது

விருத்தம்

குரங்கிதுவல்லகண்டாய் கோவிலனிவர்தானம்மா
காந்தாந்கர்னகைக்குத்தாலி கட்டினராதிகாலில்
பரத்தையின்வீட்டிற்கேகி பணமெலாமழித்திப்போது
மரத்திலுட்கார்ந்துகொண்டு மந்திபோற்தவிக்கின்றாரே

(வ-ம்) கேளுமம்மா பெண்களே இவர்தான் கர்னகையின்மணவாளனாகிய கோவிலசெட்டியார் மாதவியென்னும் வேசியின்மயக்கத்தால் தாய் தந்தையரையும், பந்துக்களையும், மனையாளையும் விட்டேபிரிந்து தனப்பொருளையெலலாம் தாசியினிடத்தில் காரைவார்த்து வயற்றுப் பசியாற்களைத்து அத்திப்பழம் பறித்துத்தின்கிறார் ஆதலின் இந்தசங்கதியை கர்னகைக்குத் தெரியப்படுத்துவோம் வருவீர்கள்.

கோவிலன் பசியினால் அத்திமரத்தின்மீது
உட்கார்ந்து பழம்பறித்துத்தின்பதை
தோழிப்பெண்கள் கர்னகைக்குத்
தெரியப்படுத்துவது

விருத்தம்

கர்னகையம்மாஉந்தன் கணவனும்பிராணநாத
பன்னகங்கோவிலனும்வந்து மரத்திலுட்கார்ந்துகொண்டு
அன்னமில்லாமலேயோ அரும்பசியுடனேவந்து
பன்னருந்துயராயத்திப் பழந்தனைப்புசிக்கின்றாரே.

(வ-ம்) கேளுமம்மா கர்னகா ஆதிகாளிதனக்கு மங்கிலியஞ்சூட்டிய உனது மணவாளனாகிய கோவிலசெட்டியார் வேசியாகிய மாதவியினிடத்தில் ஆஸ்தி, பூஸ்திதி, பொன்பொருள்யாவையும் தாரைவார்த்துவிட்டு வயற்றுக்கும் அன்னமில்லாமல்பசியாற்களைத்து அத்திமரத்தின்மீதிலுட்கார்ந்துகொண்டு பழம்பறித்துண்கிறாரம்மா.

(கர்னகை) ஆமணவாளா! உமக்கிப்படியும்வந்ததா? என துதோழிகாள் நீங்கள் அதிசீக்கிரமாகச்சென்று அவரை பச்சைப்பல்லக்கிலேற்றிக்கொண்டு ஆடை யாபரண சிங்காரலங்காரமாக அழைத்து வருவீர்கள்



(தோழிகள்) அப்படியே அழைத்துவருகிறோமம்மா.

(தோழிப்பெண்கள் பல்லக்கைசிங்காரித்துக்கொண்டுவருவது)

(தோழிகள்) ஐயா மரத்தின்மீதிருக்குஞ்செட்டியாரே கீழிறங்கி வருவீரையா.

(கோவிலன்) அம்மா வஸ்திர மிழந்து வருத்தத்துடன் மரத்தின் இலைமேல்மறைந்திருக்கும் யானுங்களுடன் எப்படிவருவேனம்மா.

(தோழிகள்) இந்த வஸ்திரத்தை யணிந்துகொண்டு ரத்னதனிட்டிக்கவந்து இந்த பல்லக்கில் உட்காருவீர்

(கோவிலன்) அப்படியே மகாசந்தோஷம்.

(தோழிகள் கோவிலனை பல்லக்கிலேற்றிக்கொண்டு வருவது)

(தோழிகள்) அம்மா கர்னகா இதோ உன் மணவாளனை அழைத்துக் கொண்டு வந்தோம்.

கர்னகை கோவிலனுக்குச் சொல்வது

அன்போடெனக்குத்தாலி யணிந்தநாதனே
இன்போடுசென்றீரோ எதென்னகோலமானீர்,
துன்போடவளுனக்கு துயரதுசெய்திருந்தால்
என்முன்னேசொன்னீரானால் எரித்திதஞ்செய்குவேனே

(வ-ம்) பிராணநாதா ஆதிகாளியெனக்கு மங்கிலியஞ்சூட்டியபிறகு நடனகச்சேரிக்குவந்து நாட்டியஞ்செய்த மாதவியின் பின்னாலேயோடிப்போய் கண்டகாட்சியிதுதானோ? ஐயோ உம்மைப்பார்க்க என்மனமெரியுதே ஆ! நாதா அந்தமாதவி உமக்குச்செய்த கொடுமைகளை எனக்குத்தெரிவிப்பீரேயில் அந்தப்பாவியை என துகோபமென்னும் நெருப்பாலெரித்தகுஞ்செய்குவேன்.

கோவிலன் கர்னகைக்குச்சொல்வது

கொச்சகம்.

எந்தன்மனையாளே எதிழைமேயிப்போது
சேர்ந்திருக்குமென்பசியோ கோக்கிடவும்போகாது
சிந்தைமகிழ்ந்தன்னம் சிறப்போடேயான்புசித்து
சுந்தரியாள்சேதியெல்லாம் சொல்லுகிறேன்பெண்மயிலே

(கர்னகை) ஆ! பிராணநாதா உமக்கு அவ்வளவு பசியாயிருக்கின்றதோ இதோ அரை நொடியில் சமையல் செய்கிறேன் நாதா.

கர்ணகை சாதஞ்சமைப்பது - தரு.

இ - ம் - அபுரூப உசேனி - ஆதிதாளம்.

கண்ணிகள்.

சாதஞ்சமைத்திடவேயந்த மாதுகர்ணகையுமே
தங்கக்குடந்தானெடுத்து தாதியுடன்சென்றாள்
பத்தினியாள் முன்னடக்க பாவையர்பின்னேகி
பவளக்கட்டுத்திருக்குளத்தில் பண்பாய்நடந்தேகி
மூழ்கநீர்ஜலந்தனிலிறங்கி முருகாசரஸ்வதியே
முன்னவனேகாருமென்று முழுமனதாய்ப்பணிந்தே
உத்தமியின்பெருவிரலால் உருட்டிஜலந்தன்னை
உறுதியாகக்காணக்கொணர்ந்து உலையிலிட்டாள்பின்னை
சீரகச்சிறுமணியரிசி சிறப்புடனேசமைத்து
தோராமுருங்கைப்புடலை தோரணங்கெய்யாற்பொரித்து
வாழைக்காயும்பூசனிக்காய் வழுதலங்காயுடனே
வள்ளிக்கிழங்குகொடிபீர்க்கையும் வகையாய்சமைத்துடனே
வார்த்தல்புளித்தல்துவர்த்தல் கைப்புதித்திப்புவர்ப்பும்
கருதும்அறுசுவையுடனே களித்துசமைத்தனளே

கோவிலனுக்கு கர்ணகை அன்னம்படைப்பது

விருத்தம்.

அன்னமும்பதார்த்தமெல்லாம் அன்புடன்சமைத்தபின்பு
பன்னும்நல்ஜலங்கொதித்து பாங்கியருபசரிக்க
நன்மையாய்குளித்திலங்கும் நல்வாழையிலைவிரித்து
இன்புடன்கறிசாதங்கள் இனிமையாய்ப்படைத்திட்டாளே

கோவிலன் அன்னம்புசிக்க ஆசனத்தில்
உட்கார்ந்தவுடனே மாதவியை
நினைத்துக்கொண்டு அயர்ந்
திருப்பது - விருத்தம்.

ஆசையோடமுதளிக்க அன்புடன்கோவிலன்தான்
பூசைசெய்தேவெண்ணீறு புகழுடனணிந்துட்கார்ந்து
வாசமாயன்னங்கையில் மகிழுடனெடுக்கும்போது
பாசமாதவியையெண்ணி பதுமைபோலிருந்திட்டானே

(வ-ம்) கேளுங்கனையா சபையோர்களே கோவிலனானவன் ஸ்நானஞ்செய்து நெற்றியில் திருவெண்ணீறணிந்து தனது இஷ்டதெய்வ



மாகிய பரசிவனைபூசித்து ஆசனத்திலுட்கார்ந்து வாழையிலையில் வட்டித்திருக்கும் சாதமும், பருப்பும், நெய்யுடன்கலந்து பிசைந்து புசிப்பதற்கு கையிலெடுத்தவுடனே மாதவியைநினைத்துக்கொண்டு எடுத்த சாதத்தை இலையில்வைத்துவிட்டு ஒன்றுந்தோன்றாமல் திகைத்திருப்பதைக்கண்ட கர்ணகை விசாரிக்கும் விதங்காண்க.

அன்னம்புசியாமல் திகைத்திருக்குங்

கோவிலனை கர்ணகைவிசாரிப்பது.

விருத்தம்.

என்னிடபிராணநாதா ஏங்குவதேனோகையில்
அன்னத்தையெடுத்துண்ணாமல் அயர்ந்தலுத்திருமக்கு
கர்ணகைசாதமுன்னைக் கசக்குமவேம்பாச்சோவெந்தன்
முன்னதையொளியாமற்றுன் மொழிகுவீருண்மையாக

(வ-ம்) ஆ! என் பிராணநாதா இதென்ன விபரீதம். உமது கையிலெடுத்த சாதத்தை வாயிற்கொள்ளாமல் தியங்குங்காரணம் யாதோ? உமது மனையாளாகிய கர்ணகை வேம்போ? என்னையால் சமைத்த சாதம் கசப்போ? யாது காரணத்தால் அன்னம்புசியாமலிருக்கிறீர் தெரிவிப்பீர் நாதா.

கோவிலன் தந்திரமாக கர்ணகைக்குச்சொல்வது.

விருத்தம்.

கர்ணகைவேம்பல்லாவுன் கைச்சாதங்கசப்புமல்ல
மின்னல்மாதவிக்குயானும் மரக்கால்பொன்கொடுக்கவேணும்
அன்னமேமயிலேமானே அழகிலங்கிளிசெந்தேனே
பொன்னதைத்தந்தாயானால் புசிக்கிறேனறுதிப்போது

(வ-ம்) பெண்ணே கர்ணகா நீ வேம்புமல்ல நீ சமைத்தசாதம் கசப்புமல்ல வேசியாகிய மாதவிக்கு யான் ஒரு மரக்கால்பொன் கொடுக்கவேணும். ஆகலின் எப்படியாகிலும் நீ தருவாயாகில் அன்னம் புசிப்பேன் நாயகி.

கர்ணகை கோவிலனுக்குச் சொல்வது - தரு.

இ-ம்-இந்துஸ்தான் செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

பொன் னேதென் னிட மேது மனை துரையே (பொன்)

அநுபல்லவி.

அன்னப்பட்சியாமன் அயர்ந்தநிலைக்கின்றீர
பொன்னே தங்கக் குன்றும் புகழ் மன்னு பன்னுவீர் (பொன்)

(கோவலன்) கர்ணகா! இந்த உலகத்தை விலைமதிக்கும்படியான உனது காற்சிலம்பை தருவாயாகில் இதை விக்கிரயஞ் செய்தாகிலும் அந்த மாதவி கடனைத் தீர்ப்பேன் நாயகி.

கர்ணகை சொல்வது - தரு

சரணங்கள்.

என் காற்சிலம்புனக் செவ்வண்ணமீவது
பன்னுறுங்கண்டக்காரன் பார்த்திலன்தட்டானும்
மன்னு மிதற் குன்றுக் திருகாணியில்லையே (பொன்)

(கோவலன்) பெண்ணே! பதிவிரதைகளுக்கு இது ஒரு பெரிய காரியமா நீ இந்த சிலம்புக்குத் திருகாணியுண்டாகவேணுமென்று நினைத்தால் உடனே நிறைவேறாதோ?

கர்ணகை சொல்வது - தரு.

பரமேஸ்வராயாலும் பதிவிரதாவெனில்
பட்சமாயிதற்குள் பண்பாய்திருகாணி
இட்சணமே யுச்சி தமா யோங்க செய்யுமே (பொன்)

பொது - வசனம்.

கேளுங்களையா சபையோர்களே கர்ணகையின் காற்சிலம்புக்குத் திருகாணியுண்டாகவே சந்தோஷத்துடனே தன்மணவாளன் கையிற் கொடுப்போமென்று கழட்டும்போது அந்தச் சிலம்பு துயரப்படும் விதங்காண்க

சிலம்பு கர்ணகைக்குச் சொல்வது

கொச்சகம்.

அன்பாயென்னைகழட்டி ஆண்கையிற்றான்கொடுத்தால்
இன்பாய்மதுரை இவரென்னைக்கொண்டுசென்றால்
துன்பம்வினைதவரும் துஷ்டர்களால்மாளவரம்மா
என்பேச்சைபொய்யாகா தேக்கிழையேசொன்னேனே

(வ.ம்) கேளுமம்மா கர்ணகா நீ என்னைக்கழட்டி உன் மணவாளன் கையிற்கொடுத்தால் அவர் எடுத்துக்கொண்டு மதுரைக்கு சென்று அங்குள்ள துஷ்டர்களால் வெட்டுண்டிறந்துவிடுவார் ஆகையால் என்னைக் கழட்டவேண்டாமம்மா.



கர்ணகை கோவலன்கையில் சிலம்பைக்கொடுத்து

புத்தி சொல்வது விருத்தம்.

மதிமிகுமிச்சிலம்பு வழுத்தியத்திற்கிட்ட கோ
பதியெனுமதுரைக்கேகா பகர்மாயவரங்குற்றாலம்
கதிதருங்கும்பகோணம் காஞ்சிதஞ்சாவூர்தேசி
சதிருடனிதனைவிற்று தாசியின்கடனைத்தீர்ப்பீர்

(வ-ம்) பிராணநாதா! சிலம்புசொன்னதைக் கவனித்தீரா! ஆகையின் நீரிந்தச் சிலம்பையெடுத்துக்கொண்டு மதுரைக்குப் போகாமல் குற்றாலம், குறநாடு, மாயவரம், கும்பகோணம், காஞ்சிபுரம், தஞ்சாவூர் முதலிய தேசங்களிற்சென்று இந்தச் சிலம்பைவிக்கிரயஞ்செய்து வேசியாகிய மாதவியின் கடனைத்தீர்ப்பீர் நாதா.

(கோவலன்) என்ன ஆச்சரியம்! என்னுடைய பொருளையானெடுத்துச்சென்றால் யாரென்ன செய்யக்கூடும் இதோ யான் மதுரைதேசத்திற்கே போகிறேன் உத்திரவுகொடுப்பாய் நாயகி.

கர்ணகை நாதா யாரென்ன சொன்னபோதிலும் என் வார்த்தையை மறுத்து ஒரே பிடிவாதமாய் மதுரைக்குப்போகிறேனென்கிறீர் ஆதலின் என்னையும் அழைத்துச்செல்வீர் நாயகா.

(கோவலன்) நான் வியாபாரஞ்செய்யப் போகுமிடத்தில் நீயுந் தொடர்ந்துவந்தால் என்னைப்போன்ற வர்த்தகர்பரிகாசிப்பார்கள். ஆகையின் நீ வரவேண்டாம் யான் துரிதத்திற்சென்று சிலம்பை விக்கிரயஞ்செய்துவிட்டு சாயங்காலத்திற்குள் வந்துசேருகிறேன் மாதே.

கர்ணகை அப்படியே போய்வருவீர் நாயகா.

கோவலன் போகும்வழியில் கர்ணகையின் சாபத்தால்

பத்தினிபோல் பொய்ப்பதுமை விளங்குவது

விருத்தம்.

பன்னுமாங்கல்ய பூர்வாழும் பாவைமாதவியென்னும்
மின்னலாம்முகம்போற்கைகால் மேனியும்வடிவாய்ந்த
கன்னியைப்போலேகுத்து கல்லதுசமையவேலாடி
மன்னியசாபமீபமா தவ்போலவருதங்கே

(வ.ம்) கேளுங்களையா சபையோர்களே கோவலன் சிலம்பை விற்கிரயஞ்செய்வதற்கு போகும்போது வழியில் கர்ணகையின் சாபத்தினால் பொய்ப்பதுமையொன்று மாதவியைப்போலாக வடிவலங்கார

சிங்காரமாக நின்றிருப்பதைக் கண்ட கோவிலன் விசாரிக்கும் விதம் காண்க.

கோவிலன் கற்சிலையை மாதவியென்று மதித்து
இங்குஏன்வந்தாயென்றுவிசாரிப்பது-தரு.
இ-ம்-இந்துஸ்தானி-பலறு லெம்-ரூபகதாளம்.

பல்லவி

மாதவியிங்கேன்வந்தாயோ மழுத்துவசய்மானே
குயில் மிகுந்த செக்கேனே (மாதவி)

அநுபல்லவி.

நீதமாயுன்கடனெழுக்க நேரிழைசிலம்பெடுத்துன்
நாதனிதோவந்தேனடி நடனசிங்காரி
மிக வடிவலங்காரி (மாதவி)

சரணங்கள்.

திருக்கடையூர்விட்டிவ்விடம் நீரமுடன்வந்தேனோ
ஒருக்குடனேஅவாயென்முன் சுகந்தரஞ்சனி
அழ கமாரகரஞ்சனி (மாதவி)
வெய்யனிலுங்கானநிலும்வேகமாயிங்கேன்வந்தாயோ
துய்யமலர்பல்லொளியுந் துலங்குஞ்சொர்ணமே
புக ழிலங்கும்வர்ணமே (மாதவி)
கொஞ்சுங்கிளிமொழியே கோதையேயுன்வாய்திறந்து
செஞ்சொல்மொழியாயோ யென்செவியில்நில்லென
இந்த புவியிலநில்லென (மாதவி)

கர்ணகையின் சாபந்தால் மாதவியைப்போலிருந்த
பொய்ப்பதுமை குத்துக்கல்லாய்விளங்கியதை
கோவிலன் பார்த்து ஆச்சரியப்படுவது.

விருத்தம்.

இவ்விதமதிமருண்டு இன்புமோகமிகுசெக்கேனே
எவ்வர்ணவடிவேயிங்கு ஏன்வந்தாயென்றுகேட்க
செவ்விழிகர்ணகைத்தான் சீறியேசாபமிய
ஒளியில்லாமற்றுன் அழகிலாக்கல்லாயிற்று



(வ-ர்) கேளுங்கோயா சபையோர்களே கோவிலன்போகும்போது வழியில் மாதவியைப்போலிருக்கும்பொய்ப்பதுமையைக்கண்டுமோகாகாரமாய் ஆசைவார்த்தைகளைப்பேசிக்கொண்டிருக்கும் இவன்கண்ணுக்குப்புலப்படாமல் பின்பேவந்த கர்ணகைக்கோபாவேசங்கொண்டு இந்த பொய்ப்பதுமை குத்துக்கல்லாய் விளங்கட்டுமென்று சபித்தபோது கோவிலன் ஆச்சரியப்பட்டு இது கனவோ நினைவோவென்று யோசித்துக்கொண்டு நடக்கும்போது பின்பே வந்த கர்ணகையைத் திரும்பிப்பார்த்து கோபித்துக்கொள்ளும் விதங்காண்க.

கோவிலன் கர்ணகைக்குச்சொல்வது

விருத்தம்.

சொர்க்கமுதலைத்தருசிங்காரிகர்ணகாபரன்
பேருஞ்செய்யேசமிருந்தே பெண்ணேநீவந்தாயோ
காருஞ்சேரெனறுடோத்த வர்த்தகர்புதுத்திடாமே
தூரஞ்சோடவியக்காய் துலையுதாடந்துவாராய்

(வ-ம்) கர்ணகா! நீ ஏன் என்னோடு தொடர்ந்து வந்தனை! புருஷாள் வர்த்தகஞ்செய்யப்போகுமிடத்தில் ஸ்திரீகள் வரலாமா! இந்த அனிவர்த்தகஞ்செய்யப்போகுமிடத்தில் ஸ்திரீகள் வரலாமா! இந்த அனியாயத்தை என்னைப்போன்றவியாபாரிகள் கண்டு என்னை ஏளனஞ்செய்யமாட்டார்களோ! நீ தொடர்ந்ததினாலே இது அநியாயக்காரனு! சரி இவ்வளவு தூரம் வந்துவிட்டாய்; இனியுது என்னோடு தொடர்ந்துவருவாய் மதுரைக்குப்போவோம் நாயகி.

(கர்ணகை) அப்படியே வருகிறேன் நாயகா.

கோவிலன் கர்ணகையை அழைத்துக்கொண்டு
மதுரைக்குப்போகும் வழிநடைப்பதம்.
இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

அன்னமே சொர்ணமே கர்ணகாகாமினி
அன்பாகச் செல்லுவோம் வாராய்—இந்த
மின்னும்பொற் சிலம்பை விற்க மதுரைக்கு
மேன்மையோடே குவோஞ் சீராய்

அநுபல்லவி.

பன்னும்புகழுள்ள பாரவனம்பாரு
கன்னலிதழே கண்காணிதேரு

மின்னற்கொடியே மதுரைவந்தோஞ்சீரு
சொன்னேயுன்னிட சோர்வைமெல்லாந்திரு
அதிகந்தரி அஞ்சாதே
வடிவோங்குரு சிங்காரி
படிமீதி விதைசிற்று
கொடியேபோதிற் செல்வோமே (அன்னமே)

கர்ணகை தண்ணீர் வேண்டுமென்று

கோவிலனுக்குச் சொல்வது

கொச்சகம்

நாதன் மணவாளா நாத்தினமயாமொந்தனுக்கு
சேர்ந்திடவேகைகநாடம் நாவறட்சியாகிறதால்
சிக்கைமகிழ்ந்தெத்தனுக்கு ஜில்லெனுஞ்ஜலங்கொடுத்தால்
சுந்தரியுயிர்பிழைக்கும் சுகமிலைகுமென்னுசா

(வ-ம்) பிராணநாதா காம் வெகுதூரம் நடந்துவந்தமையால் எனது திரேகமதிகர்த்து கைகாலெல்லாம் வலிக்கின்றது நாவறட்சியும் அதிகமாயிருக்கின்றமையால் ஜலங்கொண்டுவந்து கொடுப்பீரேயில் என்தாகவிடாய் தீர்ந்து எனது ஆவி நிலைக்கும் நாயகா.

கோவிலன் கர்ணகைக்குச் சொல்வது.

விருத்தம்.

கணவனாய்வனிதைதெய்வ கவலைநாட்டோருக்கு
பெண்சாதியின் காய்யுதே பெருமைசேர்கட்டுசாதம்
இன்னுயாம்பாரமென்று தெரிந்தவருரைக்குஞ்சேதி
உண்மைதான்பெண்ணே தண்ணீர் உனக்கிதோகொண்டுவாரேன்

(வ-ம்) கர்ணகா! உன்னை அழைத்துக் கொண்டுவந்ததே தப்பிதம் போலிருக்கின்றதே! "கட்டுசாதமும், கைக்குழந்தையும், பெண்ஜாதியும் வழிப்போக்குக்காகாது" என்பது சரியாயிருக்கின்றதே. நீ இந்த மரத்தினிழலில் உட்கார்ந்துக்கொண்டிருப்பாயாகில் நான் ஆற்றுக்குச் சென்று ஜலங்கொண்டு வருகிறேன் நாயகி.

கோவிலனில்லாத சமயத்தில் திருடர்கள் வந்து
கர்ணகையை மிரட்டி ஆபரணங்களைக்
கழட்டித் தருவாயென்பது

விருத்தம்.

சன்னையாந்திருடருக்குத் தம்பியும்மரத்திலேறி
மின்னொளுதுனைப்பார்க்க விரைவுடனிகுவந்த



கள்ளர்களாறுபேரும் கர்ணகைமுன்னிவந்து
உன்னதோர்நகைகளெல்லாம் தருக்குடனருவாயென்றார்

(வ-ம்) சேனுங்களேபா சபையோர்களே கோவிலன் தண்ணீர்கொண்டுவரப்போகும் சமயத்தில் அவ்வழியாகவந்த ஏழு திருடர்களில் ஒருவன் மரத்தின்மேலேறி ஆள் வரவு பார்த்துக்கொண்டிருக்கும்போது மற்ற ஆறு திருடர்களும் கர்ணகைமுன்பாகவந்து உன் ஆபரணங்களைக் கழட்டித்தருவாயென்று மிரட்டும்போது நடக்கும் விஷயங்கள்.

கர்ணகை தானணிந்திருக்கும் ஆபரணங்களை
கழட்டித் திருடர்களுக்குக்கொடுப்பது.

விருத்தம்.

கர்ணகைபயந்து காதோலைமுதுகுகத்தாம்
மின்னுமட்டிகைமூக்குத்தி மினுக்கொளியொட்டியாணம்
பன்னுங்கொப்புடன்புலாக்கு பாடகந்தண்டைமிஞ்சி
நன்மையாய்க்கழட்டித்தந்து நடுவுங்கொன்று காத்தாள்

(வ-ம்) சேனுங்களேபா சபையோர்களே திருடர்கள் மிரட்டியதால் கர்ணகை பயந்து தானணிந்திருந்த ஆபரணங்களையெல்லாம் கழட்டி அவர்கள்கையில் கொடுத்ததை மரத்தின்மீதிருந்து பார்த்துக்கொண்டிருந்த திருடன் மற்ற ஆறுபேரையும் நோக்கி ஓ அண்ணமார்களே அந்த ஆபரணங்களில் அரக்கு கலந்திருக்கும், மாற்றுக்குறைவாயிருக்கும். ஆகலின் மங்கிலியத்தைக்கழட்டித்தரும்படி கேட்பீர்களென்று சொன்னதையுணர்ந்த மற்ற ஆறுபேரும் கர்ணகையை மறுபடியும் மிரட்டி மங்கிலியத்தைத் தருவாயென்று கேட்க அவர்களுக்கு சாபங் கொடுக்கும் விஷயங்கள்.

கர்ணகை திருடர்களுக்குசாபங்கொடுப்பது.

விருத்தம்.

ஆவியோடெனதுநாதன் அவனியிலுயிர்த்திருக்க
பாவிகாளெனதுதாலி பறிபோகக்கேட்டீர்கள்
மேவியேஉருத்துக்கல்லாய் மரத்திலேவெளவாலாக
போவீரேயெனதுசாபம் பொய்யாதுபலிக்குந்தானே

(வ-ம்) அட்டா திருடர்களே என்னுடையமணவாளன் உயிருடன் இருக்கும்போதே மனந்துணிந்து என் மங்கிலியத்தைக் கேட்டமையால் நீங்களாறுபேரும் குத்துக்கல்லாகவும், மரத்திலிருப்பவன் வவ்வாலாகவும் சபித்தேனடா துஷ்டர்களே.

(கோவிலன்) பெண்ணே இதோ ஜலங்கொண்டுவந்தேன், இதென்ன காக்கெதிரில் மனிதரைப்போல் குத்துக்கல் தோற்றுகிறதே,

(கர்ணகை) நாதா இவர்களென் ஆபரணங்களைக்கேட்டார்கள் அப்படியே கொடுத்தேன் மறுபடியும் மரத்திலிருப்பவன் சொற்படி என் மங்கிலியத்தைக்கேட்டார்கள் ஆகையால் இவர்களாறுபேரையும் குத்துக்கல்லாகவும், மரத்திலிருப்பவனை வவ்வாலாகவும் சபித்துவிட்டேன் நாயகா.

(கோவிலன்) நாயகி இவர்கள்செய்த குற்றத்தை மன்னித்து இவர்களை எழுப்பிவிடுவாய் பதிவிரதாசிரோன்மணியே என்றார்கள்.

(கர்ணகை) அப்படியே மஹாபாக்கியம் பிராணநாதா

கர்ணகை கள்வரை எழுப்புவது.

கலி.

கள்வர்களெல்லாங் கடுகென்றிப்போ
தெள்ளாதுயிர்பெற் றெழுந்துவாரீர்,

திருடர்கள் கர்ணகையை ஸ்தோத்திரம்செய்வது.

தேவாரம்.

அம்மணிதாயேயெங்கள் அன்னையேபோற்றிபோற்றி
செம்மைசேரிளகுமுந்தன் செங்கமலடிகள்போற்றி
எம்மவர்செய்தகுற்றம் எல்லாவைபொறுப்பாய்போற்றி
இம்மயிலடியார்தம்மை இரட்சிப்பாய்போற்றிபோற்றி

(கர்ணகை) அடா கள்ளர்களே இன்றுமுதலுங்கள் திருட்டுத்தொழிலை யொழித்துவிட்டு நாட்டார்களாகவும், உப்பரவர்களாகவும் சஞ்சீவனஞ்செய்து பிழைத்துக்கொண்டிருப்பீர்களாக போங்கடா,

(திருடர்கள்) அப்படியே மஹாபாக்கியம் அம்மா.

கோவிலன் கர்ணகையை அழைத்துக்கொண்டு
மதுரைக்குபோவது - தரு.
இ-ம்-ஸெப்ரா-ஆதிதாளம்.

கண்ணிகள்.

எழுந்திருப்பாயெந்தன் எந்நிலமதுரைக்கு
ஏகுவோமென்பின்னே வாராய் பெண்ணே
கொழுந்துவெய்யலுங்காற்றுங் குளிர்ந்துவிகுதேயமுங்
கொஞ்சிநடந்தேகுவோம் வாராய் பெண்ணே



தாமரைப்பொய்கை தடாகமுந்தோற்றுது
தையலரேயிதை பாராய் பெண்ணே
பாமதுரையருகில் மாகூடிபுடனேவந்தோம்
மாதேயாலயம்பேசிவோம் வாராய் பெண்ணே
பிட்டுக்குமண்சுமந்து பிரம்பினலடியுண்ட
பித்தன்சொக்கரிவர்தான் பாராய் பெண்ணே
எட்டுதிசைபுகழும் பூலகும்மீனாக்ஷியை
எம்பிந்துதிசெய்வோம் வாராய் பெண்ணே
மருந்தில்லாப்பிணிதீர்க்கும் மாகூஷினாதசுவாமி
வைத்தீஸ்வராலயம் பாராய் பெண்ணே
தருமசொரூபமாய் தானேவளர்ந்தெழுந்த
தாயுமானஸ்வாமியை பாராய் பெண்ணே
சம்புலிங்கேஸ்வர ராலயம்மிகஞானந்
சமைந்திலகுபழமை பாராய் பெண்ணே
அப்புவியரசாளும் ஆறாயிரம்பாண்டியர்
அரண்மனைதெரியுது பாராய் பெண்ணே

பொது-வசனம்.

கேளுங்களையா சபையோர்களே கோவிலன் தம்பதிகளாக நாயகியுடன் மதுரைக்கு வந்து தேவாலயமகிமையைப்புகன்றபின்னர் இருவரும் வைகையில் ஸ்நானஞ்செய்து ஆலயத்தைத் தரிசித்து அர்ச்சகரால் கிடைத்த தேவராதனைப் பிரசாதத்தையுண்டு தாம்பூலந்தரித்து வசந்தமண்டபத்தில் உட்கார்ந்து இளைப்பாருஞ்சமயத்தில் கர்ணகையெழுந்திருந்து கணவர்முன்பாகவந்து ஆருடங்கேட்கும் விதங்காண்க.

கர்ணகை விநாயகரை ஆருடங்கேட்பது.

விருத்தம்.

ஜோதிபேசுடரேஞான சுபப்பிரகாசமுதாய்நிற்கும்
ஆதிவிக்னேஸ்வரவெந்தன் அன்னிய மதுரைதன்னில்
நீதிபரய்சிலம்புவிற்றால் நிகழ்ந்தினிமலாபநஷ்டம்
ஓதிடுமெந்தன்முன்னே ஓம்பிரணவசொரூபா

(வ-ம்) ஆதிமத்யாந்தரஹிதா, அனுகாரஹிதா, ஆதிவிக்னேஸ்வரா வேதவிநாயகசொரூபா. என்னுடையகணவன் இந்தமதுரையில் சிலம்பு விற்கச்சென்றால் ஏதாவது இடையூறுண்டாகுமோ அல்லது லாபம் கிடைக்குமோ. இந்த சந்தேகந்தீரவுனது திருவாய்மலர்ந்தருளவேண்டும் சுவாமி.

கணேஸர் மௌனமாயிருப்பதைக்கண்டு
கர்னகை கோபாவேசங்கொள்வது

விருத்தம்.

அருட்டுஞ்சொல்லுமென்றால் அறியாதபிள்ளைபோல
இருட்டிலுட்கார்ந்தன்பாய் இரிக்கின்றீரென்னைக்கண்டு
பாருமுன்கரத்தைப்பற்றி பாதுமாயிழுத்தலைத்தேன்
கேருமாருட்டுஞ்சொன்னால் கேரிமைவிடுவேனையா

கணேஸர் கர்னகைக்கு அருட்டுஞ்சொல்வது—தரு.

இ-ம்-அசாவேரி-அடதாளம்.

கண்ணிகள்.

எதுகர்மமோ என்னவம்பிது — என்னைவிட்டிடு கர்னகா
ஓதவேனுனக் காரியக்கமும் — ஒழுக்காய்ச்சொல்குவே னருட்டும்
மன்னவுனது மணவாசகன் — மதுரைக்கேகிடி லங்கைநாக்
கங்கபணிசெய்யுர் கட்டாளனென்பவன் — தாயாதிமுறை கொள்ளுவான்
மூத்ததமையனூர் பிள்ளையென்றிவர் — முன்வைத்தழைத்தவ னெதிவே
ஆக்கிரத்துடன் சமையல்செய்யென — அரிசிகரிவகை தந்தபின்
சாதஞ்சமைத்திவ ருண்ணும்வேளையிற் — சாற்றுமிவனுட் பெண்ஜாதியும்
தேடின்றியே சேர்த்தினைத்திவர் — மிஞ்சுகாதிகை தன்னிலே
சிலம்புதிருடிய கள்ளனென்றுமே — இராஜன்முன் கொண்டுபோய்
கலக்கமின்றியே சொல்லும்போதினிற் — கருதுகெற்பிலா பாண்டிய
வெட்டியிவனையே கண்டமசெய்திடு — வேருமனைரயு முந்தனுக்
அட்டியில்லாயுஞ் சொன்னேனுன்முனே — அறிகுவாயினி கர்னகா

(வ-ம்) கர்னகா யான் சொல்லிய அருட்டத்தைக்கவனித்தாயல்லவோ இனியாகிலும் என்னை விடமாட்டாயா.

(கர்னகை) ஆம் கணேஸரே விதியைவிலக்க யாராலுமாகாது வரும் விதிவந்தால் அனுபவித்துத்தானே தீரவேண்டும். இனி நீர் ஆலயத்தில் வீற்றிருப்பீர் சுவாமி.

பொது-விருத்தம்.

கணபதிசொன்னதெல்லாம் கர்னகைகேட்டுவந்து
கன்னவனுக்கெடுத்துரைக்கக் கலவிக்யாசக்தன்றால்
பின்னுக்குடன்செவியிற்கொள்ளா பெற்றியகோவிலன்தான்
வனக்கமாய்மனையாளுக்கு வார்த்தையொன்றுரைத்தவாறே



(கோவிலன்) கர்னகா யான் மதுரைக்கேகும்போது நீயுந்தொடர்ந்துவருவது யோக்கியமல்லவே. இதற்குயான் என்ன செய்வேன் நாயகி.

(கர்னகை) அப்படியானால் நீர் வருகிறவரையிலும் யார்வீட்டிலாகிலும் என்னை விடுத்துச்செல்வீர் நாதா.

கோவிலன் கர்னகைக்குச்சொல்வது - தரு.

இ-ம்-ஜம்டை-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

வேல்பொருதங்கண்ணாளே — வேளாளர்தன்னிலே
வேண்டியுனை தான்விடவோ — மேன்மையாய்ச்சொல்லாய்

கர்னகை கோவிலனுக்குச்சொல்வது-தரு.

வேளாளர் தன்மனையில் — வேல்கண்தானெத்தனுண்டு
வேணபொருளிருந்தாலும் — வேளைதஞ்சிவார்க்கார்

கோவிலன் கர்னகைக்குச்சொல்வது-தரு

வஞ்சியுனையன்புடனே — வன்னியர்கள்தன்னிலே
வைப்பதற்குச்சம்மதமா — வருந்தாமலிப்போதே

கர்னகை கோவிலனுக்குச்சொல்வது-தரு.

நாதனேயிவ்வன்னியர்கள் — நல்லேருழும்போது
நாற்றுநடவாவென்று — சாற்றுவரோநாதா

கோவிலன் கர்னகைக்குச்சொல்வது-தரு.

கொஞ்சுமொழிகர்னகையே — கோமுட்டியர்கள்தனிலே
கொண்டாந்துனைவைத்தேகுதற்கு — கோரினேன்சம்மதமா

கர்னகை கோவிலனுக்குச்சொல்வது-தரு.

கணவனேகோமுட்டிகள் — கடையிலேபோயாம்போது
சருகுமணிக்கெடுத்துவைத்து — காட்டுவாயென்றுரைப்பார்

கோவிலன் கர்னகைக்குச்சொல்வது-தரு

செங்கமலமுகவதனி — செட்டிமார்கள்தனிலே
செல்வமாயிருப்பாயோ — செஞ்சொல்மொழிமாதே

கர்னகை கோவிலனுக்குச்சொல்வது-தரு.

செட்டிமக்கள்வீட்டினிலே — செல்வமிகுந்திருந்தாலும்
சேர்ந்தழுகம்பாரர்க்கள் — சோறுமிடார்நாதா

கோவிலன் கர்னகைக்குச்சொல்வது-தரு.

செல்வியேயொருதரமே சேனியாகந்தனிலே
செம்மையுடனேயிருக்க சம்மதமோமாதே

கர்னகை கோவிலனுக்குச்சொல்வது-தரு

காரிலக்கசேணிரக்கன் நகிபூட்டிப்போதென்னாபு
க்கபடி நாவிழைக்க சாற்றுவர்களாதர்

கோவிலன் கர்னகைக்குச்சொல்வது-தரு.

இன்னமுமெவரக்கத்தனிலே இருப்பதற்குச்சம்மதமோ
பன்னுவாயென்முன்பாக பசுங்கிளிகர்னகையே

கர்னகை கோவிலனுக்குச்சொல்வது-தரு.

இடைச்சியாகத்திருந்தால் இளைத்துபசியாறுவும்
இன்பொடுபால்தயிரும் இளையாதுண்பேனே

(கோவிலன்) அப்படியே உன்னிஷ்டப்போல் இடைச்சி வீட்டிலே உன்னைவிடுத்துச்செல்கிறேன் வருவாய் நாயகி.

(கர்னகை) அப்படியே வருகிறேன் நாதா.

கோவிலன் கர்னகையை அழைத்துக்கொண்டு
வரும்போது சொக்கலிங்கேஸ்வரர்
இடைச்சி ஸ்துதித்தல்.

தேவாரம்

கவ்புனிதிவிசனேற் றக் கம்பானைக்காபோற்றி
அம்மறுத்தாருஞ்சோதி அமுர்தலிங்கேசாபோற்றி
பவமதையொழிக்குஞ்ஞான பரமனேபோற்றிபோற்றி
சிவசிவசொக்கலிங்கா சித்தித்தேனுன்றாள்போற்றி

(ஸ்-மி) சிவசிவா, சங்கரசவசா, கருணைகட்டலே, சொக்கலிங்கேஸ்வரா உமது திவ்யதிருவடிகளைத்தொழுத இந்த கலகமிருக்கை யென்னத்தென் எனக்கு சயுந்பதவி தந்தருளும் பரமேஸ்வரா.

(கோவிலன்) அம்மணி யான் சொக்கலிங்க மல்ல, வைசியகுலத்திற் பிறந்த மாச்சேட்டன் செட்டியார் மைந்தன் கோவிலசெட்டியாராகிய னது வேசியின் கடனைத்தீர்ப்பதற்காக என்னுடைய மனையாளாகிய கர்னகையின் காற்சிலம்பைவிற்கிர யத்துக்கொண்டுவரும்பொருட்டு இம்மதுரைக்குவந்தேன் இக்கைக்கு அஸ்தமனமாயிருதால் இவிடத்தில் தங்கியிருப்பதற்குவந்தோமம்மா.

(இடைச்சி) சுவாமியா செட்டியாரே.



(கோவிலன்) கர்னகா எனக்குமெத்தப்பசியாயிருக்கின்றது சீக்கிரம் சமையல்செய்வாய்.

(கர்னகை) நாதா என்கையில் அரைக்காசுமில்லையே யானெவ்விதமாக சமையல்செய்குவேன.

(கோவிலன்) பெண்ணே இந்த இடைச்சியினிடம் அரிசிமுதலானவைகளைவாங்கி சமையல்செய்வாய்.

(கர்னகை) அம்மணி என்மணவாளன் மெத்தபசியாயிருக்கின்றார் அமுதுபடி தாருமம்மா.

(இடைச்சி) அப்படியே உன்னிஷ்டப்போல் அரிசி, பருப்பு, காய்கறி, நெய், மிளகா, புளி, சீரகம், கடுகு, உப்பு, இலை, விறகுமுதலானவையாவுந்தந்தேன் சமையல்செய்வாயம்மா.

(கர்னகை) அப்படியே மகாபாக்கியமம்மா.

கர்னகை சமையல்செய்வது - தரு.

இ-ம்ஸ்ரீராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

நானே சாதஞ்சமைக்க லானேன்

அநுபல்லவி.

பானைக்கழுவியுலே பக்ஷமாயிட்டு
சோணையாகவடுப் பூதிதீமூட்டி (நானே)

சரணங்கள்.

சன்ன சம்பாவரிசி குத்தி
முன்னம்மதைக்கழுவி யுலையினிலிட்டு
நன்னயமாக சமைத்தேனன்பாய் (நானே)

மாங்காய் முருங்கை வாழக்காயும்
தேங்காய்க்கறியுந் தெளிவுடனேநல்
பாங்கெனகுழம்பும் பக்குவமாக (நானே.

அத்தி விறகையடுப் பேற்றி
தித்தித்தினித்திட திகழ்பசும்பாலும்
உத்தமிகாய்ச்சி யுருக்கினேனெய்யும் (நானே)

கர்ணகை அன்னம்படைக்க

கோவிலன் புசிப்பது.

விருத்தம்.

அன்னமுஞ்சமைத்தமர்ந்து அன்புடன்ஜலங்கொடுக்க
நன்மையாய்க்கோவிலன்தான் நலமுடன்ஸ்நானஞ்செய்து
பன்னும்பூசைகண்முடித்து பாலன்னந்துரையாதுண்டு
இன்பமாய்ப்பொடியும்போட்டு இனிமையாயெழுந்திட்டாரே,

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே கர்ணகை சாதஞ் சமைத்து வெந்நீர்காயவைத்ததந்தபிறகு கோவிலன் ஸ்நானஞ் செய்து பூசை முடித்துக்கொண்டுவந்தவுடனே கர்ணகைபால் வட்டித்தஅன்னபதார்த்தம்யாவும்புசித்து பசிதணிந்து இளைப்பாறி சந்தனங்கஸ்தூரி முதலிய வாசனைதிகளை திருமேனியிலணிந்து தாம்பூலந்தரித்து வாசனைப்பொடியை நாசிக்குளேற்றி கைதிமிரியெழுந்திருந்து காற்றுவாடைக்காக திண்ணைமீதுவந்துசயனித்துக்கொள்ளவும கர்ணகையும் அமுதருந்தி இளைப்பாறி நித்திரைசெய்து விடியற்காலையி லெழுந்திருந்து திண்ணையின்மீது நித்திரைசெய்யுங்கோவிலனை எழுப்பியபிறகு நடக்கும் விதங்காண்க.

கோவிலன் கர்ணகைக்குச்சொல்வது

விருத்தம்.

அன்னமேமானேதேனே அமிர்தசொற்கிளியேமாதே
கர்ணகாயானுமிப்போ கனமுடன்மதுரைக்கேகி
மின்னுமிச்சிலம்பைவிற்று மேன்மையாய்வருவதற்கு
உன்னிடவாய்திறந்து உத்திரவளிப்பாய்பெண்ணே

(வ-ம்) கர்ணகா யான் மதுரையிற்சென்று இந்த சிலம்பை விற்கிரயஞ்செய்துவருகிறேன்ஆதலின் உன் முத்தான வாயினலோருத்தாரந்தருவாய் கிளிமொழியே.

(கர்ணகை) நாதா நீர் வருகிறவரையிலும் என்னை இடைச்சியிடம் அடைக்கலமாக வைத்துவிட்டுச்செல்வீர்.

கோவிலன் இடைச்சிக்கு சொல்வது

விருத்தம்.

கர்ணகையென்னுமாதை களிவுள்ளவென்தாய்போன்ற
அன்னையேயுன்னிடத்தில் அடைக்கலஞ்செய்தேனம்மா



மின்னுமென்சிலம்புவிற்று மேன்மையாய்வந்தபின்பு
என்னிடபெண்மர்தனை என்முனேயனுப்புவாயே

(இடைச்சி) அப்படியே மஹாசந்தோஷம் போய்வருவீரையா.

(கர்ணகை) நாதா நீர் சிலம்பை விக்கிரயஞ்செய்து வருகிறவரையிலும் உமது உயிர் நீங்காமலிருக்கிறதென்று யான் நம்புவதற்கு எதாவது அடையாளம்வைத்துவிட்டுச் செல்லுவீர்.

கோவிலன் கர்ணகைக்கு அடையாளங்கொடுத்து

அதின் விபரமுந்தெரியப்படுத்துவது

விருத்தம்.

என்றைக்கென்னுவிபோமோ எந்தவழுபக்காலத்தில்
நின்றிடுந்திருவிளக்கு நிகழ்செம்புதணணீர்குன்றும்
மனனுமல்லிகையுமவாடும மாங்கனியழுகிப்போகும்
தின்னுந்தேங்காயுடைந்து தீயுஞ்சந்தனமுந்தானே

(வ-ம்) கர்ணகா என்னுயிர் நீங்கும்போது இந்தப் பெட்டி படீரென்று உடைந்துபோகும் இதற்குள்ளிருக்கிற திருவிளக்கு நின்றுவிடும், செம்பிலிருக்கின்றஜலங்குறையும், மல்லிகைப்பூ உலர்ந்துவிடும மாங்கனியழுகிப்போகும், தேங்காயுடைந்துவிடும், சந்தன முலர்ந்து தீய்ந்துவிடும அப்போது யோசித்துக்கொள்ளுவாய் மாதே.

(கர்ணகை) நாயகா நீ சொல்லும்போதே எனக்கு மிகவும் பயங்கரமாயிருக்கின்றதே வரும்விதியை விலக்க நம்மாலாகுமோ ஆதலின் சொக்கலிங்கேஸ்வரரை தியானித்துக்கொண்டுபோய்வாரும் நாதா.

பொது-விருத்தம்,

கலங்கியேதுடிதுடித்து கர்ணகைவிடையளிக்க
பலம்புகழ்மதுரைக்கேக பதைக்குதென்னெஞ்சமென்று
சிலம்பதைத்தோளில்வைத்து சிவமேயென்றேகும்போது
நிலைபுகழ்கோவிலர்க்கு நிகழுந்துர்ச்சகுனம்பாரீர்

———:():———

கோவிலன் போகும்போது வழியில் துர்ச்சகுனங்கண்டு

மாதவியைநினைந்து அயரப்படுவது - தரு.

இ-ம்-ஆகிரி-ரூபகதாளம்,

கண்ணிகள்

வரும்போதேசிரமீது வாசற்படியிடிக்க
வருத்தங்களாகுதே கருத்தமயங்குதே

மாதவியே என்ன
மாதவியே

பல்லிபலபலென்று சொல்லுறென்செய்குவேன் — மாதவியே-இதோ
பனைமரத்திலாந்தைப் பதறியேசீறுதே — மாதவியே
குட்டியின்றபூனை குறுக்கேவந்தேகுதே — மாதவியே-காய்கள்
குலைத்துவழியினை கலைத்துமடக்குதே — மாதவியே
எருமுட்டைதலைமொட்டை எதிராகத்தோணுதே — மாதவியே-யாவும்
வரும்வழியிலொற்றைப் பார்ப்பானெதிரானான் — மாதவியே
நரிகுறுக்காச்சே ஒஹோ யிதாகாதே — மாதவியே-ஆடு
ஒருமிக்கமந்தையாய் ஓடிதேகுறுக்காக — மாதவியே
வாமாக்குமரியும் மீறிட்டுவிளிகொண்டு — மாதவியே-இதோ
வந்தாளெதிரினில் சிந்தைகலக்குதே — மாதவியே
எண்ணைக்குடங்களும் ஏணியுஞ்சாணும் — மாதவியே-இதோ
எதிராய்வந்திடநெஞ்சம் ஏங்கிதுடிக்குதே — மாதவியே
கட்டுச்சுருணைபோலே கையற்பிடித்திதோ — மாதவியே-என்முன்
கணக்கனும்வந்திட கலங்குதைய்யாமனம் — மாதவியே
மதுரைக்குப்போனாலோ மாண்டிடுவேனென்னை — மாதவியே ஒரு
மாதுநற்றைக்குர லோங்கியழுகிறாள் — மாதவியே
தனிமதுரையினைத் தளராமலேவிற்று — மாதவியே-யான்
சந்தோஷமாய்வந்து தையலுனைக்காண்பேனோ — மாதவியே

(வ-ம்) ஆ! மாதவி யான் சிலம்பையெடுத்துக்கொண்டுவரும்போதே வழியில் அனேக அவசகுனங்கள்தோற்றுதே என்ன விபரீதமாய்முடியுமோ அறிகிலேனே.

கோவிலன் மதுரைமாநகரத்தில்வந்து சொக்கலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நின்று பிரார்த்தனைசெய்வது.

விருத்தம்.

மதுரைவாழ்சொக்கேசாயென் மணிசிலம்பிக்கேவிற்றால்
சதிராகசெங்கற்கோவில் சாற்றுடுக்கருங்கல்லாலே
புதுமையாயெவருமெச்சும் புகழ்விளங்கிடுஞ்சிங்கார
பதுமைபோற்கட்டிவைப்பேன் பரமனேதுணைசெய்வாயே

கோவிலன் சிலம்பு விற்பது - தரு.

இ-ம்-இந்துஸ்தானி - காபி - ரூபகதாளம்.

பல்லவி.

சித்ரபார்வை — ஸ்திரீகாந்தனை
சிலம்போ சிலம்பு — சிலம்பு சிலம்பு (சித்ர)



அநுபல்லவி.

பவளமேவும் — பச்சையோங்கும்
பளபளெனவே — பார்க்குளோங்கும்
பணியை மணியை — அணியும் கனியே (சித்ர)

சரணங்கள்.

கற்புடைய — கமலரூபி
கண்ணகையின — காற்சிலம்பு
கொள்வீர் கொள்வீர் — கொள்வீர் கொள்வீர் (சித்ர)

இம்மதுரை — இலகும் ஸ்திரீகள்
இன்பாவிலையை — இதற்களித்து
வாங்கும் வாங்கும் — வாங்கும் வாங்கும் (சித்ர)

தாசிமரும் — தாற்றிகைத்து
நயமற்சிலம்பை — விற்கவந்தேனே
வாரும வந்து — பாரும் கோறும் (சித்ர)

காவிரிப்பூங் — கப்பலோட்டும்
கனமுடைய — வர்த்தகன்யான்
வந்தென் சிலம்பை — வாங்கிப் பாரும் (சித்ர)

(சிந்தாமணிதாசி) ஐயா செட்டியாரேஅந்தச் சிலம்பைக்காண்பிப்பீர், எனக்குச் சம்மதமாகில் அதன் கிரயந்தந்து பெற்றுக்கொள்ளுகின்றேன்.

(கோவிலன்) இதோ பார்த்தனையா.

சிலம்பு சிந்தாமணிதாசிக்குச்சொல்வது

கொச்சகம்.

சிந்தாமணிதாசி சித்திணியேபெண்மயிலே
எந்தனையுமன்பாக எடுத்துனக்குவிற்பாரேல்
உந்தனதுகாலில் உறவியொடுநீயணிந்து
வெந்திடுவாய்தப்பாது வேசியெனும்ரஞ்சிதமே

(வ-ம்) அம்மா சிந்தாமணி இவர் வார்த்தையைக்கேட்டு வேசியாகிய நீ என்னைவாங்கி உன் காலிலணிவாயாகில் அக்கினியால்வெந்து எரிந்துப்போவாய் ஆதலின் என்னைத் தொடவேண்டாம்.

சிலம்பு சொன்னதைக்கேட்டு ஆச்சரியப்பட்டுசிந்தாமணி தாசி கோவிலனுக்குச்சொல்வது விருத்தம்.

சிறந்கழ்மாகரத்ன சிலம்பெனுமிதனையந்த
பார்வதிபோடவேணும் பரமனேபார்க்கவேணும

பார்மகிழ்தாசியாளும் பாதத்திற்போடொணாது
நேர்மையோடெடுத்துக்கட்டும் நேர்ந்தபொன்யானேதாரேன்

(வ-ம்) ஐயா இந்தச் சிலம்பை பரிசுத்த ஜோதிமயமாய் விளங்கும் பார்வதிகாலிலணிந்து பரமசிவமே பார்த்து மகிழவேண்டுமல்லாமல் கேவலமாகிய என்னைப்போன்ற வேசிகள் இதனைப் பார்க்கலாகாது ஆதலின் உமக்குவேண்டியதிரவியம் யான் தருகின்றேன்இதனை எவர்களுக்கும் விற்கிரயஞ்செய்யவேண்டாம் செட்டியாரே.

(கோவிலன்) தாசியாகிய நீ யாசகமாய்கொடுத்தால் யான் வாங்கிக்கொண்டுபோவது சரியல்ல ஆதலின் இந்தச் சிலம்பை இராஜவீதியிற் கொண்டுபோய் விற்று இதன் கிரயத்தைப் பெற்றுக்கொளமேகுவேனென்றறிவாய் சிந்தாமணி,

வஞ்சிபத்தன் பிள்ளைகள் கருடன்குஞ்சுகளை கழுத்தை முறித்துக்கொன்று போடுவது

விருத்தம்.

குருடிபோல்முத்துமாலை முளைக்கீரையறுக்கச்சென்று
நெருடிமுள்காலிற்றைக்க நேரிழைபுலம்பும்போது
திருடர்போலவட்குமாரர் திரமாய்மரத்திலேறி
கருடனார்குஞ்சைக்கொல்ல கதறியேதுடித்ததங்கே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே வஞ்சிபத்தன் மனையாளாகிய முத்துமாலை முளைக்கீரை பறிப்பதற்கு புறக்கடைக்குப்போகும்போது காலில் முள் தைத்தமையால் குய்யோ முறையோவென்று கூச்சலிட்டுக் கதறியழுத ஓசையைக்கேட்டு அவளுடைய பிள்ளைகள் ஓடிவந்து அன்னையே யாதுகாரணத்தால் அழுகின்றனை தெரியப்படுத்துவாயென்றுகேட்க. மைந்தர்களே "கருடனுக்கிடங்கொடுக்க காலில் முள்தைத்தது" அந்தக் கருடப்பட்சியானது தன் குஞ்சுகளுக்கு ஆதரவாக மரத்தின்கிளையில் முள்ளுகளால் கூண்டுகட்டியதால் அதிலொரு முள்ளுகீழேவிழுந்திருந்தமையால் யான் அதனைப் பாராமல் மிதித்துவிட்டேனப்பாவென்றழுதுகொண்டிருக்கையில் உடனே அந்த துஷ்டப்பிள்ளைகள் மரத்தின்மீதிலேறி கூண்டைக்கலைத்து குஞ்சுகளைப்பிடித்து கழுத்தைமுறித்துக் கீழேயெறிந்துவிட்டுப்போய் விட்டார்கள் அச்சமயம் கருடன் இரையெடுத்துக்கொண்டு ஓடிவந்து குஞ்சுகளைக்கொன்ற பழிக்குப் பழி வாங்காமல் இவர்களை விடுவதில்லையெனறிருக்கும்போது நடக்கும் விதங்காண்க.



வஞ்சிபத்தன் வீட்டுச்சுவரின்மீது வைத்திருந்த
கோவிலிங்கி சிலம்பை கருடனெடுத்துக்
கொண்டுபோவது.

விருத்தம்.

தாவியேசிலம்பின்சொட்டை தனைநிமிர்த்திடுவாயென்று
கோவிலிங்கியுரைக்க கொப்பெனச்சீர்திருத்தி
மேவியசுவர்மேற்காய வைத்தனன்கருடன்வாயால்
பாவித்துக்கௌவியோடி பாம்பிடம்வைத்தேகிற்றே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே இராஜபத்தினியாகிய கோவிலிங்கியின்காற்சிலம்பு சொட்டையானதால் அதைத் தட்டானாகிய வஞ்சிபத்தனிடங்கொடுத்து சீர்திருத்திக்கொண்டு வருவாயென் றுரைக்க அவனும் நல்லதென்று சம்மதித்து சிலம்பை வாங்கிக்கொண்டுவந்து சொட்டையைத்தட்டி சீர்திருத்தஞ்செய்து சுவரின்மீது காயவைத்தனன். அச்சமயத்தில் தன் குஞ்சுகளைக்கொன்ற பழிக்குப்பழிவாங்குவதற்கு இதுதான்தருணமென்று கருடன் ஓடிவந்து சிலம்பையெடுத்துக்கொண்டுபோய் திருப்பாற்கடலருகில் ஆயிரம் கன்னிபுத்துக்கு அதிகாரமாயிருக்கும் ஐந்துதலை நாகேந்திரனிடத்தில் வைத்துவிட்ட பிறகுநடக்கும் விதங்காண்க.

---

பொது-வசனம்.

ஒருநாள் பாண்டியன் தன் மனையாளைப்பார்த்து பெண்ணே உனது காற்சிலம்பு எங்கேயென்று வினவ சொட்டை நிமிர்த்தும்பொருட்டு தட்டானாகிய வஞ்சிபத்தனிடங்கொடுத்தேன் அவன் கொண்டுவரவில்லையென் றுரைக்க அரசன் கோபித்து வஞ்சிபத்தனை வரவழைத்து சிலம்பெங்கேயென்றுகேட்க அவன்திகிலடைந்து நடுநடுங்கிவாய்குளறி ஐயனே நாளையதினம் எவ்விதமாகிலுங்கொண்டுவந்து தருகிறேனென் றுரைத்த குறிப்பையுணர்ந்தஅரசன்வெகுண்டு இவன் போக்கடித்துவிட்டானென்று மதித்து தட்டானைப்பார்த்து அடா மட்டிப்பயலே நாளையதினம் சிலம்பைக் கொண்டுவாராவிட்டா லுன்னைவெட்டிப்போடுவேனென்று திட்டஞ்செய்தனுப்ப அவன்வீட்டுக்குவந்து இராஜசமுகத்தில்நடந்த சவிஸ்தாரங்களையெல்லாம் தன் பெண்சாதியாகிய முத்துமாலைக்குத் தெரிவிக்கும்விதங்காண்க.

——(0)——

வஞ்சிபத்தன் முத்துமாலைக்குச்சொல்வது.

விருத்தம்.

அன்னமேமுத்துமாலை அழகிலங்கிடுஞ்சிங்காரி
பண்ணுமிச்சிலம்புக்காக பாண்டியரென்னைக்கொல்ல
என்னையமுத்தன்தாலி நாளைக்கேயறுக்கலாகும்
என்னநான்செய்வேன்பெண்ணே என்மனந்துடிக்குதையோ

பொது-வசனம்.

இவ்வண்ணமாகவஞ்சிபத்தன் மனைவிமைந்தரிடஞ்சொல்லியழுதுக் கொண்டிருக்கையில் நடக்கும் விதங்காண்க.

கோவிலன் சிலம்பை விலை கூறிக்கொண்டு
இராஜவீதிக்கு வருவது - தரு.
இ-ம்-சவாய் ரூபகதாளம்
கண்ணிகள்.

இந்தரணியிலுள்ள உத்தமஸ்திரீகளா
இலகுமிதனையுற்றுப் பாரீர்—நாக.
ரத்னசிலம்பினை சித்தமகிழவே
தந்திரம்போல்வாங்க வாரீர்

(கோவிலிங்கி) பெண்களே! அதென்ன ஓர் சத்தங்கேட்கிறது கவனிப்பீர்கள்.

(தோழிகள்) நல்லதம்மணி.

கோவிலன் சொல்வது - தரு.

சத்திபக்தவதிடா புத்திரியோங்கலங்கார
சகிகாளிதையுற்றுப் பாரீர்—என்
பத்தினிசிலம்பிது ரத்னஞ்சொலிக்குது
பக்ஷமாயின்றுவாங்க வாரீர்

(தோழிகள்) அம்மணி எவனோ சிலம்புவிற்கின்றுற்போல் தெரிகிறது.

கோவிலன் சொல்வது - தரு.

ஜோதிவிதற்கொப்பெல் நகையாகாகத்தின
உச்சிதசிலம்பிது பாரீர்—இதை
பாரிடம்விற்பேனே அப்புவிமாந்தரே
யாராகிலும்வாங்க வாரீர்



(கோவிலிங்கி) பெண்களே அவன்குரலோசையே இவ்வளவுசிங்காரமாயிருக்கின்றதே அவன் விலைகூறுஞ்சிலம்பு எவ்வளவு அலங்காரமாகயிருக்குமோ ஆகையின் யான்காணவேண்டும் அவனை வரவழைப்பீர்கள்.

(தோழிகள்) ஐயா செட்டியாரே இராஜகன்னிகை உம்மை அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தனள் வருவீரையா.

கோவிலன் சொல்வது - தரு.

முதலிரண்டாம்படி மூன்றும்படிதனைத்தாண்டி
முகமலர்ச்சியாகவும் வந்தேன்—பாதமும்
இதனையின்கேவித்து இதன்விலைபெறுதற்கு
இன்போடிக்குவந்து சேர்ந்தேன்

(தோழிகள்) அம்மணி இதோ அழைத்துக்கொண்டுவந்தோம்.

(கோவிலிங்கி) பெண்களே! எங்களிருவருக்கும் மத்தியில் திரைச்சீலைகட்டுவீர்கள்.

(தோழிகள்) நல்லதம்மணி.

கோவிலிங்கி கோவிலனுக்குச் சொல்லுவது.

விருத்தம்.

ஆரையாசெட்டியாரே அணிசிலம்பெடுத்துவந்து
ஓரதாய்க்கொள்வீரென்று சிறப்புடனிருக்குமுந்தன்
பேரையுஞ்சொல்விரும்மைப் பெற்றதாய்தந்தையாருடன்
ஊரையுமெந்தனுக்கு உண்மையாய்தெரிவிப்பாயே

(ஷ-ம்) ஐயா செட்டியாரே நீர் வசிப்பது எந்த நாடு உமது தாய் தந்தையின் நாமதேயமென்ன யாது காரணத்தால் இந்த நகரத்தில் வந்து சிலம்பை விலைகூறுகின்றீர் இவையாவும் எனக்கு விபரமாகத் தெரியப்படுத்துவீர்.

கோவிலன் தனது சவிஸ்தாரங்களை
கோவிலிங்கிக்குத் தெரிவிப்பது

விருத்தம்.

காவிரிப்பூம்பட்டினம் கனத்திசழ்கோவிலன்யான்
மேவுமென்மனையாளின்பேர் மேன்மைசேர்கண்ணகைத்தாய்
நாவுமென்னன்பிலக்கு தாசியாதகிக்கு யானும்
பூவிலிச்சிலம்பைவிற்றுப் பொருள்தரவந்தேனம்மா

(வ-ம்) அம்மணி காவிரிப்பூவில் கப்பல் வர்த்தகஞ்செய்யும் மாச்சொட்டான்செட்டியார் எனதுதந்தை. வர்ணமாலைஎனதுதாயார். என் பெயர் கோவிலன். எனது மனையாளின்பெயர்கானகை. எனதுஆசையிருந்த தாசியாகிய மாதவிக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காக என் மனையாளின் காற்சிலம்பை விலைகூறவந்தேன் ஆகலின் நீங்கள் இதனை வாங்கிக்கொள்வீரம்மா.

கோவிலிங்கி சிலம்பை வாங்கிப்பார்த்து விசனப்படுவது.

கொச்சகம்.

ஐயோவெந்தன்மகளே அன்றீன்றவுந்தனையான்
வைகையிலேவிட்டு வயிறெரிந்தேனப்போது
பையரவப்பொற்சிலம்பை பார்த்தேயானின்றனில்
கொய்யுதடியென்மனது கெரிஞ்சியென்புத்திரியே

(வ-ம்) எனது அருந்தவப்புத்திரியே நீ பிறந்தநாளில் உன்னைப் பெட்டியில்வைத்து வைகையாற்றில் விடுத்து வயிறெரிந்தேன் இப்போது உன் காற்சிலம்பைக்கண்டு ஆறாத்துயரங்கொண்டு துயரப்படலானேன் என் செல்வக்களஞ்சியமே.

(தோழிகள்) அம்மணி துயரப்படவேண்டாம் உனது குமாரத்தி எங்கேனும் உயிருடன் பிழைத்திருந்தால் போதுமம்மா.

(கோய்லிங்கி) ஐயா செட்டியாரே நீர் இந்நகரையில் பிரவேசித்தால் இங்குள்ள துஷ்டர்களானுனக்குத் துன்பஞ்செய்யும் ஆகலின் உனக்குவேண்டிய திரவியத்தை ஆனமட்டும் ஈந்தனுப்புகிறேன் நீ உன் இருப்பிடஞ்சென்று உனது மனையாளுடன் வாழ்ந்துகொண்டிருப்பாய் கோவிலச்செட்டியாரே.

(கோவிலன்) அம்மணி இந்தச் சிலம்பை எவர்களுக்காகிலும் விற்கிரயஞ்செய்துவிட்டுப்போவேனேயல்லாமல் ஒருவரிடத்திலும் யாசகம் வாங்கமாட்டேனம்மா.

கோவிலன் வருவதைக்கண்டு சொக்கலிங்கசர் வருகிறாரென்று வேதவாத்தியார் தோத்திரஞ்செய்வது.

தேவாரம்.

அரஹராசொக்கலிங்கா அன்னவேலவனையுமோரும்
சரவணபவனையீன்ற சதாசிவாயானுமிந்த



தரணியில்பிறந்துலாபந் தானில்லையெனக்குமோக்ஷம்
பரமனே தருவாயுன்கன் பாதத்தைப்பணிந்தேனையா

(கோவிலன்) எழுந்திருமையாவாத்தியாரே நான்சொக்கலிங்கமல்ல யான் வைசியகுலத்திலுதித்த கோவிலச்செட்டியார் தாசியின் கடனைதீர்ப்பதற்காக எனதுமனையாளின் சிலம்பைபெற்றுக்கொண்டுவந்து இந்த மதுரையில் விலைகூறுகின்றேனையா.

(வேதவாத்தியார்) ஐயா இந்தப் பட்டணத்திலுள்ள துஷ்டர்கள் ஏதேனுந் தொடுவழக்குகோர்த்து உம்மை வருத்தப்படுத்துவார்கள் ஆதலின் இந்த பசுவையாகிலும்விற்று உமக்கு வேண்டிய திரவியந் தருகிறேன் இப்போது நீர் பசியாயிருப்பதால் இந்த பலகாரங்களைப் புசித்து இளைப்பாறுவீரையா.

கோவிலன் பலகாரம் புசிக்குந் தருணத்தில் வஞ்சியத்தன் பிள்ளைகளாகிய சுந்தரலிங்கனும், சோமலிங்கனும் வாத்தியாருக்குச் சொல்வது.

விருத்தம்.

மெய்யனேயெங்களன்னை வேகாதஅன்னமிட்டாள்
பையவேயிருவருந்தான் பதறியேபுசித்துவிட்டோம்
ஐயனேயிப்போது அலகுதுமலபாதைக்கு
துய்யனேசென்றுவாரோம் துரிதத்திலனுப்புவீரே

(வேதவாத்தியார்) சீக்கிரம்போய்வருவீர்கள்.

சுந்தரலிங்கனும், சோமலிங்கனும் வஞ்சியத்தனுக்குச்சொல்வது

விருத்தம்.

தந்தையேயொன்றுகேளும் தக்கதோர்சிலம்பெடுத்து
வந்ததோர்வணிகன்தன்னை வரவழைத்துறவுபூண்டு
சொந்தமிட்டவனைக்கட்டி நோக்கும்பாண்டியர்முன்விட்டாற்
றொந்தரைவிலகிதுன்பந் தொலையுமென்றறிகுவீரே

(வ-ம்) தந்தையே கோவிலச்செட்டியாரென்னும் ஒரு வர்த்தகன் சிலம்பு விற்கிரயஞ்செய்யும்பொருட்டு வந்திருக்கின்றான் அவனை தந்திரமாக நமது வீட்டுக்கு அனுப்புகிறோம் நீங்கள் உபாயமாக சொந்தம் பாராட்டி சிலம்பைப் பிடுங்கிக்கொண்டு அவனைப் பிடித்து பின் கட்டாகக்கட்டிக்கொண்டுபோய் பாண்டியராஜன்முன்விடுத்து திருட-

ன் அகப்பட்டானென்று தெரியப்படுத்துவீராகில் அவனைக்கொன்று விட்டு உங்களுக்கு வெகுமதிசெய்தனுப்புவாள்.

(வஞ்சிபத்தன்) மைந்தர்களே அப்படியே செய்வோம் அவனை சீக்கிரமாக அனுப்புவீர்கள்.

பொது-வசனம்

கேளுங்களையா சபையோர்களே கோவிலசெட்டியார் வேதவாக்கியாருடையவார்த்தையையும் மறந்துவிட்டு மறுபடியும் சிலம்பைவிலை கூறிக்கொண்டு வரும்போது வழியில் வஞ்சிபத்தன்பிள்ளைகள்வந்து ஐயா செட்டியாரே இந்த தட்டாரவீதியில் செல்வீராகில் இந்த சிலம்பை யாராகிலும் வாங்கிக்கொள்வாரையா.

(கோவிலன்) அப்படியே செல்கிறேனப்பா.

கோவிலன் சிலம்பை விலைகூறிக்கொண்டு

தட்டாரவீதியில் வருவது - தரு.

இ-ம்-கலியாணி-அடதாளம்.

பல்லவி

சிலம்புவாங்குவீரோ—ரத்ன
சிலம்புவாங்குவீரோ

அநுபல்லவி.

உலகிலிதற்கிணை எங்குங்கிடையாது
நலமாகயானிப்போ நவில்வதுபொய்யாது (சிலம்பு)

சரணம்.

கர்னகைகாற்சிலம்பு—இதற்கிணை
இன்னகர்தன்னிலுண்டோ
என்கரத்திற்பொரு ளீத்தெவராகிலும்
நன்மையாய்வாங்குவீர் நாட்டிலுள்ளோர்களே (சிலம்பு)

சிலம்பைவிலைகூறிக்கொண்டுவரும் கோவிலனை

வஞ்சிபத்தன் நயவஞ்சகமோசஞ்செய்ய

ஓடிவந்து ஆசையாய்ப் பேசுவது

விருத்தம்.

ஐயனேகோவிலையா அழகுநன்மணியேவாடா
வையகம்புகழுஞ்சொர்ன மரகதசொரூபாவாடா



துய்யவென்குலத்துதித்த துரைசிங்காரமேவாடா
செய்யவென்னண்ணன்பெற்ற செல்வனேமகனேவாடா

(வ-ம்)எனது தமையனாருக்குதவப்புத்திரனாகிய கோவிலையா நீ சிறுவனாயிருக்கும்போது பள்ளிக்கூடத்தில் வாத்தியாரடித்தாரென்று பயந்து தேசாந்திரஞ்சென்று இத்தனைநாள் பொறுத்துவந்தனையே வீட்டுக்குவருவாய் மகனே.

(கோவிலன்) இவன் சொல்லுவதைப் பார்த்தால் சந்தேகமாயிருக்கின்றதே நல்லது பிறகு விசாரிப்போம்!

(வஞ்சிபத்தன்) பெண்ணே இதோ பார்த்தனையா! எனது தமயனார் புத்திரனாகிய கோவிலன் வந்திருக்கிறான்.

(முத்துமாலை) அப்பா கோவிலையா இந்த நாற்காலியின்மீது உட்காருவாய் மைந்தனே!

(கோவிலன்) நல்லதம்மா:

(முத்துமாலை) கோவிலையா அன்னம் புசித்து எத்தனை நாளாயிற்றோ? எவ்வளவு பசியாயிருக்கின்றனையோ? இந்த ஜலத்தினால் கால் கை, முகம், சுத்திசெய்துக்கொண்டு வருவாயப்பா அன்னம் படைக்கின்றேன்.

(கோவிலன்) அம்மணி யான் உமது வீட்டில்புசிக்கலாகாது.

(வஞ்சிபத்தன்) பெண்ணே எனது தமயன் சைவமாகையால் எப்பொழுதாகிலும் நமது வீட்டுக்குவந்தால் அரிசி, பருப்பு, நெய், காய்கறிபதார்த்தமும், பித்தளைசாமானுங்கொடுத்தால் அவரதைவாங்கி புறக்கடையிற்சென்றுசமையல்செய்து சாப்பிடுகிறவழக்கமானதால் இவனுக்கும் அப்படியே தருவாய் மாதே.

(முத்துமாலை) மைந்தா கோவிலையா உனது சிறியதந்தையுரைத்தவண்ணமே, அரிசி, பருப்பு, நெய், காய்கறி பதார்த்தமும் பித்தளைசாமானும் இதோ தந்தேன் வாங்கிக்கொண்டுபோய் புறக்கடையிற்சென்று சமையல்செய்து புசிப்பாயடா மகனே.

(கோவிலன்) நல்லதம்மணி.

(வஞ்சிபத்தன்) மைந்தா உனது ஆணிமணிகளை இவ்விடத்தில் வைத்துவிட்டுச்செல்வாய்.

(கோவிலன்) அப்படியே இதோ வைத்துவிட்டேன்.

(வஞ்சிபத்தன்) மைந்தா உன் கையில் வைத்துக்கொண்டிருக்கின்றுவை அதென்ன?

(கோவிலன்) சிலம்பு.

(வஞ்சிபத்தன்) இதை என்னிடத்தில் கொடுத்துவிட்டுச் செல்வாய் மைந்தா.

(கோவிலன்) இதோ தந்தேன் இதை பத்திரமாக வைத்துக்கொண்டிருப்பீரையா.

(வஞ்சிபத்தன்) என்னிடமிருந்தால் எங்கும்போகாது நீ சீக்கிரமாய் வருவாயப்பா.

(கோவிலன்) அப்படியே மகா சந்தோஷமையா.

கோவிலனை வஞ்சிபத்தன் வஞ்சக
மோசஞ்செய்வது.

விருத்தம்.

எத்திவிப்படியுரைக்க ஏமாந்தகோவிலன் தன்
புத்தியாற்சமைத்தசாதம் புசித்திவன்சிலம்புகேட்க
சித்தமுங்கலங்கக்கட்டி சிறியேயுலக்கையாலே
முத்துமாலையுமடிக்க மூர்ச்சித்துவிழுந்திட்டானே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கோவிலன் சாதஞ்சமைத்துப்புசித்தபிறகு வஞ்சிபத்தனிடம்வந்து சிலம்பைக் கொடுவென்று கேட்க உடனே கோவிலனை கயிற்றினாற்பிணைத்துக்கட்டிய சமயத்தில் முத்துமாலை ஓடிவந்து உலக்கையினாலோங்கி கோவிலன் மண்டையிலடிக்கவே அவன்மூர்ச்சித்து விழுந்து துடிக்கவும் மற்றும் இளைப்பாற்றி கட்டினைகட்டோடே இராஜசபைக்கு அழைத்துக் கொண்டுவருவதைக் காண்க.

வஞ்சிபத்தன் கோவிலனை அழைத்துக்கொண்டு
இராஜசபைக்குவரும்போது சொக்கநாதர்
வருகிறாரென்று பாண்டியர்கள்
தோத்திரஞ்செய்வது.

தேவாரம்.

சொக்கலிங்கமுதேநுால சொரூபமேகைலைவாழ்வே
சிக்கிலாவேதத்தேடும் சிவக்கொழுந்தரசேபோற்றி
அக்கராகரங்கடந்த அம்மைபாங்கரையிலேதி
எக்காலுஞ்சிறந்துவாழ்க எங்களுக்கருள்வாய்போற்றி



பொது-விருத்தம்.

அதித்தபாண்டியர்கள்பாதம் தொழுதுகட்டானுஞ்சொல்வான்
மதித்தவுங்கட்சிலம்பை மறைத்தெடுத்தோடிப்போன
கதித்திடுங்கள்ளனென்ன காவலுர்வெட்டச்சொன்னார்
கொதித்திடுமமைச்சரெல்லாம கொலைசெய்வதடுக்காதென்றார்.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பாண்டியராஜாக்கள் கோவிலனைக் கண்டவுடனே சொக்கநாதர் வருகிறாரென்று தோத்திரஞ்செய்யும்போது இவன் உங்கள் சிலம்பு திருடிய கள்ளனென்று வஞ்சிபத்தன் சொன்னதைக்கேட்டு பாண்டியர்கள் ஆலோசித்து இவனைக் கயிற்றால் கட்டியிருப்பதையும் இவன் மண்டையிலடிபட்டு உதிரம் பெருகுவதையுங்கண்டு திருடனென்று மதித்து சிரசாக்கினைசெய்யும்படி கட்டளையிட்டதையுணர்ந்த மந்திரிகள் உண்மையாய் விசாரணை செய்யாமல் தண்டிப்பது நீதியல்லவென்று மறுத்து இராஜகன்னியிடத்தில் சிலம்பைக் கொடுத்தனுப்பி இது யாருடையதென்றுவினவ அன்னவள்கண்டுவிசயித்து இந்த காகாதனசிலம்பு என்னுடையதல்லவென்று சொல்லியனுப்பியதையுணர்ந்தமந்திரிகள் வர்த்தகன்கையில் சிலம்பைக் கொடுத்துவிட்டு வஞ்சிபத்தனைத் தண்டித்தல் நீதியென்றுரைக்க வஞ்சிபத்தன் சபையோரைப்பார்த்து இவனுடைய சிலம்பென்று பிரமாணிக்கஞ் செய்யச்சொல்லுமென்றுரைக்க இனி நடக்கும் விதங்காண்க.

(பாண்டியன்) சரி! அப்படியானால் இந்தச் சிலம்பு இந்த வர்த்தகனுடையதென்று இந்த சர்ப்பகுடத்திலிருக்கும்பொன்னாபரணையெடுத்துச் சபையோர் முன்பாக வைத்துப் பிரமாணிக்கஞ் செய்யச்சொல்லுவீர்கள்.

(மந்திரி) நல்லது! ஐயா வர்த்தகரே அரசனுரைப்படியே பிரமாணிக்கஞ்செய்துவிட்டு உமது சிலம்பை எடுத்துக்கொண்டுபோவீர்.

கோவிலன் தன்னுடைய சிலம்பென்று
இராஜசபையில் பிரமாணிக்கஞ்செய்வது - தரு.
இ-ம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

என்னுடைசிலம்பிது—சத்தியமையா
எல்லாமறிந்திடுவீர்

அநுபல்லவி.

கர்னகைகாற்சிலம்பை கணிகையர்க்காகவே
அன்புடனேவிற்றுப் பொன்தரவந்தேன் (என்னிட.

சரணங்கள்.

சத்தியநெறியுள சற்குணவதியெனுஞ்
சாமிமனோகரமே—என்தன்தேவி
பத்தினியேயென்னுமடத்தமியாளால்
பாம்புக்குடத்திடமே

வைத்தபொன்னரிசி வல்லமையாக
சித்தமிகவுமகிழ் தெடுத்தேனன்பாக
புநதரவெந்தனை புகழ்ந்துமின்பாக
சுத்தினாதகழுத்திற் சுகமுடனாகவே (என்னிட

(மந்திரி) அரசே இவன்மீது யாதொருகுற்றமில்லையென்றறிவீர்கள்

(பாண்டியர்) இது நியாயமல்ல இவன் மந்திரத்தினாற் பாம்பைத் தடைகட்டினான்போலிருக்கிறது ஆதலின்வேங்கைப்புலியின் போனுக் குள்ளேபோய் பிரமாணிக்கஞ்செய்யச் சொல்வீர்கள்.

(மந்திரி) சரி அவ்விதமே செய்புமையா. சத்தியமே துணையாகும் அசத்தியமே பகையாகும் வர்த்தகரே.

கோவிலன் சொல்வது - தரு.

நீதியுமில்லையோ நியாயங்களில்லையோ
நிஜவார்த்தையும்பொய்யோ—எந்தன்தேவி
ஆகினாளுரைத்ததை மறுத்துயான்வந்ததால்
ஆவிதுடித்திடவே

பாதையால்நொந்து பாண்டியராசத்யம்
வேதனையாகுமிவ் வேங்கையின்சத்யம்
நீதியாய்ச்செய்தேன் நிலபுகழ்சத்யன்
காதலாள்சிலம்பிது தான்பிரகத்தியம் (எ

(மந்திரி) அரசே சத்தியத்திற்குஒருக்காலும்பழுதவராதென் கவனித்தீரன்றோ ? இப்போதென்ன சொல்லுகின்றீர்.

(பாண்டியர்) மந்திரி இவன் வெகுதந்திரவாதி மந்திரவித்தை வேங்கையையுந் தடைகட்டினான். ஆதலின் இவனை காய்ந்



சொர்ப்பனைசெய்பித்தலன்றுங்கள். அதினாலுஞ் சாகாதிருந்தால் இவன் கையில்மழுவையேந்தி பிரமாணிக்கஞ்செய்யச்சொல்வீர்கள்.

(மந்திரி) சரி! அவ்விதமேபிரமாணிக்கஞ்செய்வீரையா வர்த்தகரே

கோவிலன் சொல்வது - தரு.

ஐயையோகாயுங் கெய்யினில்தள்ளினீர்
அநியாயமுறைமைச்சேர்ந்தே—வதைக்கும்யாரோ
[illegible] மூழ்கியுககள்முன்
வன்மையாய்வந்தேனே

செய்யாமலிதோபார் சொக்கிமழுவினை
கையினுலேந்தி காட்டியுலகினை
செய்யாகதிக்குஞ் சொக்காலயத்தில்
வைத்திடசொன்னை சற்படியாயினை (என்னிட)

(மந்திரி) அரசே பார்த்தீரா இந்தச்சிலம்பு இவனுடையதென்பதற் குச் சந்தேகமில்லையென்றறிவீர்கள்.

(பாண்டியர்) மந்திரி இவன்மந்திரத்தினால் அக்கினிபந்தனஞ் செய்துவிழைத்து வந்தாற்போலிருக்கிறது. கல்லது கானகத்திலிருக்கும் ஆனையினகாலினாலிவன்சிரசையிடறும்படியாகச்செய்வீர்.

(மந்திரி) சரி அப்படியும் செய்துபார்ப்போம் வேந்தே.

கோவிலன் சொல்வது - தரு.

பள்ளத்திலெந்தனை புட்காரவைத்து
பாலைபால்முடினீரே—பார்த்திரோயானை
கள்ளங்கபடில்லா தெந்தனைத்தூக்கி
கழுத்தில்வைத்ததுகேரே

தள்ளாடி தள்ளாடி தன்மனங்குளிர்ந்து
உள்ளமும்மகிழ்வே உச்சாகத்துடனே
மெள்ளநடைநடந்து மேன்மையதாகவே
விண்ணொளுதுயரும் விலகியோடிற்று (என்னிட)

ஆனையின்மேலேறிக்கொண்டு வருகின்ற
கோவிலனைப்பார்த்து கோனிலிங்கி
[illegible]

கொச்சகம்.

ஆர்பெற்றபுத்திரனோ அரிசிலம்பைத்தானெடுத்து
[illegible] பாண்டியர்முன்வந்தினால்

சீர்பெற்றஉன்றாயிக்கு நீங்குவினைப்பாரிவர்கள்
தார்மகிழுஞ்சிங்கார தர்மகுணசுந்தரனே

கோவிலின் தயரப்படுவதைக்கண்டு
பாண்டியன் சொல்வது

விருத்தம்.

அன்புடன்யானைமீது அமர்க்கோனைக்கண்ணுற்கண்டு
இன்போங்குமொனாவென்மா இரக்கமேயழுவதேனோ
வன்னமாயானையிங்கே வரவழைத்திணைத்துக்கட்டி
துன்பஞ்செய்வாரேல்ரெண்டு துண்டாகவெட்டுவீரே

(பா-ம்) ஆ ஹா! மந்திரி பார்த்தீரையா! இவனைக் கொல்லும்படியாக விடுத்த யானையையும் மந்திரத்தினால் வசியஞ்செய்து அதன்மேலேறிக்கொண்டு நகர்வலம்வருகையில் கோவிலின் உப்பரிகையின் மேலேறிப்பார்த்து துயரப்படுவதைப் பார்த்தால் இவன் ஸ்திரிகளை வசியஞ்செய்யும் மந்திரமுங் கற்றவனைப்போ லிருக்கின்றது ஆகலின் கொலையாளிகளே இவனை இப்போதே அழைத்துக்கொண்டுபோய் இவன் சரீரத்தை இருபிளவாகத்துணித்துவிடுவீர்கள்.

(கொலைஞர்) அப்படியே செய்கிறோம் பாண்டியபூபதி.

கோவிலன் பாண்டியர்களுக்கு சாபமிடுவது
கட்டளைக்கலித்துறை.

விண்ணமுதாக விருந்தளிப்போர்க்கு வெட்டுமெனச்
சொன்னதாலுஞ்சட் சரீரமுடல்தனை சேர்த்ததற்கு
மன்னன்பழிக்கு யுன்னைக்கொல்ல மதுரையிலே
கர்ணகைவந்து புகுந்தஞ்செய்வாள் கடாட்சமே.

(பா-ம்) அடா பழிக்கஞ்சாத பாண்டியப்பயல்களே அநியாயமாக என்னை வெட்டச்சொன்ன அஷ்டப்பிரஷ்டர்களே காலைபதினாறதில் பதிவிரதாசிரோன்மணியாகிய கர்ணகைவந்து உங்களையும் சித்ரவதை செய்து, இந்த மதுரையையும் எரித்து அநாசஞ்செய்துவிடுவாளென்றறிவீர்கள்.

கொலைபாதகர் கோவிலச் செட்டியாரை இரணக்களம்
கொண்டு அழைத்துவருகிறது.

(கொலைஞர்) ஐயா வர்த்தகரே உண்மைசொல்லுவதற்கு எங்களுக்கு மனமில்லை ஆதலினால் நீர் இங்கணம் விட்டு எங்கேனும் ஓடிப்போய்ப் பிழைத்துக்கொள்வீரையா.



(கோவிலன்) ஐயா கொலைஞர்களே யான்பிறந்தநாள் முதற்கொண்டு இந்நாள்வரையிலும் கீர்த்திப்ரகாசமாய்வாழ்ந்திருந்தும் இப்போது சிலம்புதிருடிய கள்ளனென்று பேர்வகித்திருப்பதினும் இறப்பதே நலம் ஆகிலும் நீங்கள் சற்று கிருபைசெய்தால் யான் மீனாக்ஷியம்மன் ஆலயத்திற்சென்று அம்மனிடம் வரப்ரசாதம்பெற்றுக்கொண்டு வருகிறேனையா.

(கொலைஞர்) அப்படியே சென்றுவருவீரையா.

மீனாக்ஷியம்மன் ஆலயத்தில்வந்து
கோவிலன் முறையிடுவது.

விருத்தம்.

மதுரைமீனாக்ஷியம்மா மாதுகர்ணகைக்குத்தாயே
சதுரகவனித்துலாபந்த சற்றுமேயறியேனம்மா
இதுவென்னகர்மமோதான் இந்தபாண்டியர்கள்என்னை
பதுமைபோற்கொன்றவெந்த பதிவிலிருப்பவளோ

(ப-ம்) ஜோதிசொரூபமாய் மதுரைமாநகரத்தில்கொலுவீற்றிருக்கும் மீனாக்ஷியம்மா ஆதியில் யான் கர்ணகைக்கு மங்கிலி கூட்டிய தல்லாமல் யாதொருபலனும் பிறவிலேயே இதற்குள் இந்தப்பாண்டியராக்கினையின்படி யானிறந்துவிட்டால் எனது மனைவியின் கதி என்னாகுமோ எனக்கு விபரமாகத்தெரிவிப்பாயம்மா பரமேஸ்வரி.

மீனாக்ஷியம்மன் கோவிலனுக்கு
ஆதிகாரணத்தைவிபரமாக
தெரியப்படுத்துவது.

விருத்தம்.

அப்பனேகோவிலா நீ ஆதியில்வாணியன்தான்
செப்புமாதவிபுமுந்தன் தேவிகர்ணகையேகாளி
தப்பிலாபதினாறுண்டில் சாகுமுன்பழிக்குதானே
இப்புவிபொரித்தொன்றுமை யெடுமிக்கதுப்புவாளே.

(ப-ம்) கோவிலனே ஆதியில் நீ வாணியன், மாதவியுனதுமனையாள் கர்ணகையே காளியம்மனாகும், ஆதலின் பூர்வீகவினைப்படியே பாண்டியரால் நீ இறக்கவும் கர்ணகை மதுரையைக்கொளுத்தவும்பிறந்திருக்கின்றாள் ஆகையால் உனக்கு பூர்வஜென்மத்தேன் நன்றாயுணர்ந்து கவனிப்பாயாகில் உன் நிலையுனக்கு நன்றாய்த்தெரியும்.

(கோவிலனுக்கு பூர்வக்கியானம்விளக்குவது)

(கோவிலன்) ஆ ஹா காளியம்மா! பூர்வஜன்மத்தில் யானுனது பக்தனாக விளங்கி பூஜித்துக்கொண் டிருந்ததும் இந்த ஜன்மத்தில் யானுன்னை திருமணம்புரிந்து கணவனாக விளங்கியதும் உனது திருவிளையாட்டல்லவோ! ஜெகரக்ஷி.

(மீனாக்ஷியம்மன்) கோவிலனே உனது பூர்வகியானந் தெரிந்துகொண்டாயா?

(கோவிலன்) தெரிந்துக்கொண்டேனம்மா பரமேஸ்வரி.

(மீனாக்ஷியம்மன்) இனி உனக்கு வேண்டிய வரத்தைக்கேள் திருவருள்புரிகிறேன்.

(கோவிலன்) அம்மணி கர்ணகையினகையினால் மாதவியை என்னுடன் தகனஞ்செய்யவும், உன்னுடைய கிருபையால் யாங்களிருவரும் கைலாயபதவியடையும்படியாகவும வரந்தருவாயம்மா.

(மீனாக்ஷியம்மன்) அப்படியே வரந்தந்தேன் மைந்தா.

(கோவிலன்) ஐயா கொலையாளிகளே இனி யொரு தடையுமின்றிவெட்டுவீர்கள்.

(கொலைஞர்) இதென்ன ஆச்சரியம்! வெட்டினகத்தி உமது கழுத்தில் பூமாலையாகவிழுந்ததே. ஆதலின் உம்மைக்கொலைசெய்ய எங்கள் மனமஞ்சுகின்றதே.

(கோவிலன்) ஐயா கொலையாளிகளே அப்படி நீங்கள் பயப்படுவதால் என்னை நானே வெட்டிக்கொள்ளுகிறேன் அச்சமயத்தில் என் மனையாள் வருகிறவரையிலும் என் சரீரத்தைக் காத்துக்கொண்டிருக்கின்றீர்களா?

(கொலைஞர்) அப்படியே செய்கிறோமையா. யாங்களும் காவலிருக்கின்றோம்.

கோவிலன் தன்னைத்தானே வெட்டிக்கொண்டு
இருபிளவாகவிழுந்து இறப்பது.

விருத்தம்.

கத்தியைசிரசில்வைத்து கர்ணகைதனைநினைத்து
இத்தமுங்கலங்கிரெண்டாய் இகழ்வேவிழுந்தான்மன்னனில்
பத்தியரத்தந்தனே பகைஞர்பொட்டிட்டார்வஞ்சி
பத்தனும்மகிழ்வெல்லாம் பண்புடன்குடித்திட்டானே



(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கோவிலன் மனந்துணிந்து தன் சிரசின்மீது கத்தியைவைத்துக்கொண்டு கர்ணகை பதிவிரதையாகில் யான் இருபிளவாகக் கடவதென்றெண்ணியவுடனே சரசரவென்று உச்சியிலிருந்து உள்ளங்கால்வரையிலும் அறுந்து இருபிளவாக பூமியிலவிழுந்து குடல்வேறு, இரைச்சிவேறு, நரம்வேறாகச் சிதறுண்டிருப்பதைக் கொலையாளிகள் பார்த்து இவன் சத்தியவானென்றுமதித்து காகம், பருந்து, கழுகுமுதலிய பறவைகளணுகாமற் காவலிருக்கையில் அவர்களிலொருவன் ஓடிவந்து பாண்டியராஜன்கொலுவில் கத்தியும், இரத்தமுங் கொண்டுவந்ததைக்கண்ட சில துஷ்டர்கள் அந்த உதிரத்தையெடுத்து நெற்றிக்கலங்கார பொட்டிட்டுக்கொண்டார்கள். வஞ்சிபத்தன்ஓடிவந்து அந்த உதிரத்தைக்கையினால் வாரிவாரிக்குடித்து வெறிகொண்டு ஓ ஹோ பாண்டியர்களே எனக்கென்ன இனாகங்கொடுப்பீர்களென்று தட்டிக் கேட்கும்போது நாளைக்குத்தருகிறோமென்று சொல்லியனுப்பியபிறகு நடக்கும்விதங் காண்க.

மதுரையில் பாண்டியர்களுக்குத்
தூர்க்குறி தோற்றுவது
கட்டளைக்கலித்துறை.

கல்மாரி ரத்த மழையும்பொழிந்து கனமதுரை
சொல்மாறி யேபழிக் கவனுறை மாந்தர்கள் சோர்ந்திடவும்
பல்வாறி யாகவே கோட்டை யிடிந்து பலபலென
புல்மாறி போகவு மக்கினி காற்று புறப்பட்டதே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கோவிலன் உதிரத்தைப் பொட்டணிந்துக்கொண்டு உல்லாசமாயிருக்கும் பாண்டியர் நெஞ்சந்திடுக்கிடும்படியாக இரத்தமழையும், கல்மழையும்பொழிந்து கோட்டையிடிந்தும் பலவாறாக மதுரையில் தூர்க்குறிதோன்றி அக்கினி காற்று வீசும்போது நடக்கும் விதங்காண்க.

## பாண்டியர் ஆலோசனை சபை.

(பாண்டியர்) ஆ ஹா மந்திரி இதென்ன ஆச்சரியம்! இந்த மதுரையில் இரத்தமழையும், அக்கினிமழையும்பொழிந்து, கோட்டையிடிந்தும், அக்கினிகாற்று வீசுகின்றதே. இதை ஆலோசனைசெய்து விபரமாகத் தெரியப்படுத்துவாய்.

பொய்யணிமதுரைக்குள்ளே புகுந்தயான்கொளுத்திப்பின்னே
தையலும்வருவேனம்மா தந்திமெல்லிடையெனக்கே

(இடைச்சி) கர்னகா நல்லவார்த்தைப் புகன்றனையே! உன் மணவாளன் என்னிடத்திலுன்னை அடைக்கலமாக வைத்துவிட்டு வர்த்தகஞ்செய்வதற்குப்போயிருக்க நீ ஏதோ நினைவுகொண்டெழுந்து அடி. துடித்து மதுரையைக் கொளுத்திவிட்டு வருகிறேனென்று சொல்லுகின்றனையே இதுநாயந்தானோ? அல்லாமலும் உன்னை அனுப்பிவிட்டேனாகில் அவர் சிலம்பைவிக்கிரயஞ்செய்துவிட்டுவந்து என் மனையாளையனுப்புமம்மாவென்று கேட்பாராகில் யானென்னசொல்லுவேன்? ஆதலின் நீ போகிறகாரியத்தை யான்போய் விசாரித்துக்கொண்டு வருகிறேனம்மா.

(கர்னகி) அம்மா யான் சொல்லுவதை சற்று கவனிப்பாய்.

(இடைச்சி) நல்லது தெரிவிப்பாயம்மா.

(கர்னகை) அம்மணி நீ வைகைநதியிற்சென்று ஸ்நானஞ்செய்து உன் கையினால் ஐந்துகைஜலத்தையள்ளி ஐந்துபானைகளில் வார்ப்பாயாகில் அப்போது பால், தயிர், வெண்ணை, நெய், மோராகும் அதையெடுத்துக்கொண்டு மதுரைக்குப்போய் அசவில்லையாக விற்பாயாகில் எல்லாச்சங்கதியுந் தெரிந்துக்கொள்வாயம்மா.

(இடைச்சி) அப்படியே செய்கிறேனம்மா கர்னகா.

இடைச்சி வைகையாற்றுக்குவருவது

விருத்தம்.

வருமியாயிடைச்சியின் தன் வழக்கம்போலாற்றில்வந்து
எழுசலிலஸ்நானம் ஏற்றெனச்செய்துப்பானை
பஞ்சுபோற்கழுவியந்த பத்தினியுரைத்தவாறு
ஐந்துகைஜலத்தைவார்க்க ஆச்சதேதயிர்பால்மோரும்.

(வ-ம்) கேளுங்கள்யாசபையோர்களே கர்னகை சொற்பிரகாரம் இடைச்சியானவள் வைகையாற்றுக்குவந்து ஸ்நானபானஞ்செய்து பூசைமுடித்து கர்னகையைநினைத்து ஐந்துபானைகளில் ஐந்துகைஜலத்தையள்ளி வார்க்கும்போது அவைகளில் பால், தயிர், நெய், வெண்ணெய், மோர் முதலானவை உண்டாயாகவே விளங்கியதைக்கண்டு மனமகிழ்ந்து எடுத்துக்கொண்டு மதுரைக்குப்போகும்போது நாற்



புறமும் கோட்டைக்கதவுகள் மூடியிருப்பதைக்கண்டு ஆச்சரியமடைந்து பக்கவழியாக அரண்மனைவீதியிற்சென்று தயிர் விலைகூறும் விதங்காண்க.

இடைச்சி இராஜவீதியில் தயிர்விற்பது - தரு.

இ-ம்-கல்யாணி-அடதாளம்.

பல்லவி.

இச்செகமாமினியே—பசுந்தயிர்
இன்பாய்வாங்குவீரே

அநுபல்லவி.

தக்கையப்பிசு          சொக்குமினதயிரா
துங்களுக்குக்கிட்டா          துன்னையாருயிர்ப்பீரோ (இச்செ)

சரணங்கள்.

அப்பட்டப்பாலிதுவே—ருசிகர
ஆவின்வெண்ணெயிதுவே
செப்புமினிப்புள்ள          செங்கரும்பின்னலவாக்
தப்பில்லையென்னது          தாழ்ந்தேபன்னலாம் (இச்செ)

இந்தநெய்யைப்புசிப்பீர்—சரீரம்
இளையாதுயோசிப்பீர்
சந்தோஷமாகவே          சாற்றினேனென்னுமொழி
எந்தன்முன்னேவந்து          எல்லோருமுவாங்குவீர் (இச்செ)

பொருள்-வசனம்.

கேளுங்கள்யாசபையோர்களே இவ்வண்ணமாக இடைச்சியானவள் தயிர்விலைகூறிக்கொண்டுவருகையில் மதுரையிலுள்ள பெண்கள் தயிர் வாங்குவதற்கு வருகிற விதங்காண்க.

(மனோன்மணி) இடைச்சியம்மா ஒருபடி தயிரென்னவிலை தெரியப்படுத்துவாய்.

(இடைச்சி) அம்மா ஒருபடி தயிர் ஒருவராகன், ஒருபடி மோர் அரைவராகனென்றறிவீர்கள்.

(மோகனங்கி) ஒருபடிபால் என்னவிலை.

(இடைச்சி) இரண்டு விராகனுகும்.

(பார்வதி) ஒரு வீசை வெண்ணெய் என்னவிலை?

(இடைச்சி) ஒரு வீசை வெண்ணெய் மூன்றுவிராகனுகுமம்மா.

(மதனவல்லி) ஒரு வீசைநெய் என்னவிலை.

(இடைச்சி) ஒருவீசை நெய் நாலுவிராகனுகும்.

(பெண்கள்) அம்மா இவள் கொஞ்சமேனும் பயமில்லாமல் இந்த மதுரையில்வந்து அநியாயவிலைகூறுகின்றனள் பார்த்தீர்களா.

(இடைச்சி) அடடா இதென்ன ஆச்சரியம் உங்களுக்கு இஷ்டமிருந்தால் வாங்கிக்கொள்வீர் இல்லாவிட்டால் போய்விடுவீர். இவ்வளவுதானே இந்த மதுரையிலுள்ளவர்களுக்கு யான் பயப்படவேண்டிய காரணமென்ன.

(சாந்தபூஷணி) அம்மா கோபித்துக்கொள்ள வேண்டாம். நேற்றையதினம் ஒரு வர்த்தகன் தட்டாரவீதியில் சிலம்பு விலைகூறிக்கொண்டுவந்தவனை வஞ்சிபத்தனென்பவன் அடித்து கயிற்றினுல்கட்டி இழுத்துக்கொண்டுபோய் பாண்டியர்கள்முன்விட அவர்கள் அந்தச் சிலம்பையும் பிடுங்கிக்கொண்டு அந்த வர்த்தகனையும் வெட்டிப்போட்டார்களம்மா.

(இடைச்சி) ஐயோ மகனே!——

இடைச்சியானவள் கோவிலன்படுகளத்தை
தேடிக்கொண்டு வருவது.

விருத்தம்.

அவ்வசனத்தைக்கேட்டு ஆட்டர்வனந்தன்னிற்சென்று
செவ்விழிமாடுமேய்க்குஞ் சிறுவரைக்கட்டபோது
இவ்வியகாளிகோவில் திருப்பரங்குன்றக்காட்டில்
ஒவ்வியக்களமந்தனென்ன ஓடிபோய்ப்பார்க்கின்றுளே

(வ-ம்) கேளுங்களையாசபையோர்களே பெண்களுரைத்த வார்த்தையைக்கேட்ட இடைச்சி மிகுந்த துயரத்துடனே தயிர்பானையையுந் தூக்கிக்கொண்டு கானகம்வந்து அங்கு மாடுமேய்க்கும் சிறுவர்களால் கோவிலன்படுகளத்திற்குவந்துசேர்ந்து அங்கு சிதறுண்டிருக்கும் அவனுடைய குடல், ஈரல், இறைச்சிமுதலானவைகளைப்பார்த்து மனந்துடித்து ஒன்றுந்தோற்றுமல் தலையிலிருந்த தயிர்பானையுடனே பூமியில்விழுந்து துயரப்படுகின்றுள்.



கோவிலனைப்பார்த்து இடைச்சி
துயரப்படுவது - தரு.
இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

அதிரூபசிங்காரா—அழகுள்ளகோவிலா
ஆவியொழிந்தாயோ

அநுபல்லவி.

சதிவளர்க்குமுயர்     பதியுன்னுயிரையே
அதிரவழிந்தாயோடா     அங்கலங்குலைந்தையோ (அதிரூப)

சரணங்கள்.

விதியோவுனக்கிது     விருதாவிக்கேன்வந்தாய்
வினைப்பயனோவிது     விமலரடிசேர்ந்தாய்
மதிவதனசிங்காரா     மாளமனந்துணிந்தாய்
மாதையங்கேவிட்டு     மண்மீதுருண்டிறந்தாய் (அதிரூப)

போகாதேயென்றந்த     பொற்கொடிசொன்னதை
பொய்யென்றகற்றியே     புறப்பட்டுவந்ததை
வாகாயறிந்தாயோ     பாண்டியர்வாளாலே
வெட்டுண்டலங்கோலமாய்     வீழ்ந்தாயோமண்மேலே (அதிரூப)

மாயாவிதேசத்தில்     மன்னுயென்வந்தாயோ
மனதிற்றயருற்று     மயங்கியேநொந்தாயோ
பூபாலவுன்கோலம்     புகல்நேருனதோயோ
புகழிலகுமுன்தேவி     புரண்டழுவாளோயோ (அதிரூப)

(காவலாளி) கிழவி ஏன் அழுகின்றாய்.

(இடைச்சி) பாவிப்பயல் பட்டணத்தில் தயிர்பானையுடைந்து விட்டதையா.

பொது-வசனம்.

கேளுங்களையாசபையோர்களே கோவிலன்படுகளத்தில் தயிர்பானையையும் உடைத்துவிட்டு அழுதுக்கொண்டிருந்த இடைச்சியை காவலாளிகள் அழைத்துக்கொண்டு பாண்டியராசர்கள் முன்பாகவந்து நடந்தசங்கதிகளைத்தெரியப்படுத்தவே பாண்டியர்கிழவியைப்பார்த்து இவர்களுரைத்தவார்த்தை உண்மைதானு வென்றுகேட்க இடைச்சி சொல்லும்விதங்களாவன.

இடைச்சி பாண்டியருக்குச்சொல்வது.

விருத்தம்.

ஆதிகாளபாத்திரத்தான் ஐயைபோய்த்தாட்டில்
ஓதிமெனத்தகாலம் ஞாலந்தடக்கவந்தாற்போல
சோதிக்குக்கண்மையாக இப்பென்னெடைத்தபோக்க
வாதிதோமுடிக்காலம் வயமெரிகின்றதையா.

(பாண்டியர்) சபாஷ் இடைச்சி மங்களை உடைத்துவிட்டதற்காக இவ்வளவு அபராதமென்றனையோ அது பொன்பானையாயிருந்தால் அவ்விடத்திலேயே உயிரைவிட்டுவிலவாய்போயிருக்கின்றதே.

(இடைச்சி) ஐயா பத்துலட்சமானாலும் பழைய பானையாகுமா நீர் அரசனாயிருக்கும் ஆளோசியாமல் பேசுகின்றீரே.

(பாண்டியர்) காவலாளிகளே இந்த இடைச்சியை தாத்துவீர்கள்.

(காவலாளிகள்) இடைச்சி நீ தப்பித்துக்கொண்டனை சீக்கிரமாக ஓடிப்போவாய்.

இடைச்சி தாத்திவைத்தின்று
பாண்டியர்களுக்கு சாபங்கொடுப்பது.

விருத்தம்.

மன்னடியில்லுமிலையில்லா மாபாவிபுங்களவீ
கொன்றுபோயானுக்கே கொடுமைசெய்கையைத்தான்
சென்றுபோனாலும் கொன்று சேதிப்பாவீது வேதூய
அண்டமேமனையை வாதி அறநீனேனுமருவேசே

இடைச்சிபானவன் கர்னகியினமனைத்
தேற்றுவத்திரு கடைவீதியில்சென்று
பலகிணறு சாமானகிணறாக்கி
புதுக்கொடையில்வைத்துக்
கொண்டுவருவது.

விருத்தம்.

செப்புடன்மற்றுசருக்கும் செக்காய்க்கோடிசெய்
கோப்புரணைச்சிதாரம்தங்கராய் கோன்றமகினையின்றுயும
காப்புக்கணமும் போக்கும் கருமணிவாங்கிக்கொண்டு
மாப்புசுழிடைச்சியத்த மங்களமுன்வைத்திட்டாரே



கர்னகை இடைச்சியைவிசாரிக்குதல்

விருத்தம்.

அன்னமும்கறிகாயெல்லாம் அன்புடன்சமைத்தபின்பு
உன்னிடவாவைக்கானை உணவுமேழுந்தெழுந்தேனம்மா
என்னமாய்முடிந்ததோதான் என்பிராணநாதர்சேதி
பன்னுவசொல்லவாமுன்னே பகர்மோக்கிடுவென்றாயே

(வ-ம்) அம்மணிநீபோய்ப்பார்த்துவந்த சமாச்சாரங்களையெல்லாம் விபரமாக எனக்குத்தெரியப்படுத்துவாயம்மா.

(இடைச்சி) கர்னகா உனது மணவாளன் இவைகளையுனக்குக் கொடுத்தனுப்பினார் பெற்றுக்கொள்வாயம்மா.

(கர்னகை) அம்மணி அவர் உயிருடனிருக்கும்போது யாதொரு பலனும்அறியாதவருக்கு தான் இறந்ததற்கடையாளமாக இவைகளை அனுப்பினார்போலிருக்கின்றது. இவைகளையெல்லாம் இருக்கட்டுமூதி அனுப்பினோர் மணவிருக்கும் மாதிரிக்கு அனுப்பிவிடுவாயம்மா யான்சென்று என் மணவாளன் பிணத்தைப் பார்த்துவிட்டுவருகிறேன்.

(இடைச்சி) கர்னகா உன் மணவாளன் உயிருடனிருக்கும்போதே நீ அவரப்படுவது சரியல்ல. அன்னம்புசிப்போம் வருவாயம்மா.

(கர்னகை) அம்மா, இதென்ன ஆச்சரியம் சாதத்தைக்கையிலெடுக்கும்போதே எல்லாம் புழுவாய்விட்டதே.

(இடைச்சி) இந்த பாலையாவது குடிப்பாயம்மா.

(கர்னகை) அம்மணி பார்த்தீரா இந்தப் பாலும் உதிரத்தமாய் விட்டது. ஆகலின் என் கணவன் இறந்துவிட்டதற்குச் சந்தேகமில்லை நீ பொய்சொல்லுகிறபடியால் உன் வீட்டில் அக்கினிபற்றி எரியக் கடவதென்று சபித்தாள்.

கர்னகையின்சாபத்தினால் இடைச்சியின்வீடு
அக்கினிபற்றி எரிவது - தரு.
இ-ம்-கன்னியாசி-ஆதிதாளம்

பல்லவி.

கர்னகைசாபத்தால்—இடைச்சியின்வீடு
கனல்பற்றி எரியுதுபார்

அநுபல்லவி.

மின்னுங்கொழுந்துவிட் டின்புடனொங்கும்
பன்னுஞ்சவாலேபாய் பளபளவென்றிலகும் (கர்ணகை)

சரணம்.

வாசற்படியெல்லாம் மணமணவென
வன்னம்போட்டே வெளிப்புறச்சுவரெல்லாம்
மாசற்றக்கிளிமூக்கு வெண்குத்தருவனை
மன்னும்புரான் டேரிய

காகபனையெல்லாம் கருகியுருகிட
வீசுஞ்சவாலேயோ விளங்கியெரிந்திட
பாசனுகாதலன் மனையைக்குமெரிந்திட
பேசுமிடைச்சியே பெருமூச்செறிந்திட (கர்ணகை)

(இடைச்சி) அம்மா, உன் மணவாளன் வெட்டுண்டிறந்தது உண்மைதான் ஆகலின் நீ விசனப்படுவாயென்று மறைத்துச்சொன்னேன் என் குற்றத்தை மன்னித்து வீட்டையும் முன்போல் விளங்கச்செய்யுமம்மா என்குலதெய்வமே.

கர்ணகை இடைச்சிவீட்டை பழையபடியாக
விளங்கச்செய்துவிட்டு புறப்படுவது.

விருத்தம்.

எப்போதும்போலேயுந்த இடைச்சிவாழகத்தைச்செய்து
கைப்பிடிக்கணவன்மாண்ட காரணமறிவோமென்று
தப்பிலாகர்ணகைத்தான் தனிவழிக்கேவமாக
ஒப்பிலாவேகத்தோட்ட ஓடியேவருகின்றாளே

(வசனம்) கேளுங்களையா சபையோர்களே இடைச்சியின் பரிதாபத்தைக்கண்டு கர்ணகை மனமிரங்கி அவள்வீட்டை முன்னிலும் அதிக சிங்காரமாய் விளங்கும்படியாகச் செய்துவிட்டு புறப்பட்டு வருகின்ற விதங்காண்க.

கர்ணகை கோவிலன் படுகளத்தைப்
பார்க்க வருகிறது - தரு.
ஸ்ரீராகம்-ஆதிதாளம்.
பல்லவி.

காதா புவியாவென்று காண்பேன்



அநுபல்லவி.

வாதாகும்பாண்டியர் வாட்டியவுன்னை
காதாரக்கேட்டிதோ கர்ணகைவந்தேன் (காதா)

சரணங்கள்.

யாரை கேட்டாற்காட்டுவா ருன்னை
காரையின்முள்ளுங் குரையின்முள்ளும்
தாரையாய்க்காலிற் றைக்குதென்செய்வேன் (காதா)

எந்தன் கூந்தலவிழ்ந்தை யையோ
இந்தசெடிகளின் கிளைகளிற்சுற்றவும்
நொந்திடவென்றலை நோகுதேயெந்தன் (காதா)

கொக்கு குருவிகாள் நீங்கள்
மிக்கவழகிலகு மென்பிராணநாதனை
இக்கானகத்தனி லெங்கேனுங்கண்டீரோ (காதா)

(பக்ஷிகள்) அம்மணி அவர் நேற்றையதினம் இவ்வழியேசென்றார் மறுபடியும் யாங்கள் அவரைக்காணவில்லையம்மா.

கர்ணகை சொல்வது - தரு.

ஆனை புலிகரடி மான்காள்
ஆளிசிறுத்தைகளே அழகுள்ளவென்மண
வாளனைக்கண்டீரோ வனமிருகங்காள் (காதா)

(மிருகங்கள்) அம்மணி அவர் சிலம்புவிக்கிரயஞ்செய்வதற்கு இவ்வழியாகச்சென்றவர் மறுபடியுந்திரும்பவில்லையம்மா.

கர்ணகை சொல்வது - தரு

போக வேண்டாமென்றுனை யானும்
ஏகக்கூடாதென் றெவ்வளவோ [illegible]
வேகமாய்ச்சென்று வெட்டுண்டிறந்தாய் (காதா)

பொது-வசனம்.

கேளுங்களையா சபையோர்களே கர்ணகையம்மன் கோவிலன்படுகளத்தைப்பார்க்கவேண்டுமென்று தேடிக்கொண்டுவரும்போது எதிரில் சிலசிறுவர்கள் மாடுமேய்த்துக்கொண்டுவருவதைக்கண்டு அவர்களைவிசாரிக்கும் விதங்காண்க.

(கர்ணகை) அப்பா மாடுமேய்க்கும் பிள்ளைகளே எனது மணவாளனாகிய கோவிலச்செட்டியார் படுகளத்தைக் காண்பிப்பீர்கள்.

(பொன்னன்) ஏன் கேட்கிறாயம்மா? நீ போய் என்னசெய்வாய்,

(கர்ணகை) என் மணவாளனை வதைத்தப்பழிநீச மதுரையைக்கொளுத்தி யென் வஞ்சத்தைத்தீர்த்துக்கொள்ளுவேன்.

(முருகன்) இதென்ன ஆச்சரியம் உன் மடியில்நெருப்பைக்கட்டிக் கொண்டுபோகின்றாயோ.

(கர்ணகை) கோபவேசங்கொண்டு என்வாயினுற்சொன்னால் எரிந்துபோய்விடுமே.

(கோவிந்தன்) நல்லது அப்படியானால் எங்கள் பசிதணிய அன்னம் படைப்பாயாகில்உன்மணவாளன்படுகளத்தைக் காண்பிக்கிறோமம்மா.

(கர்ணகை) இந்தக் கானகத்தில் எவ்விதமாய் சாதஞ்சமைப்பேன்.

(கோபாலன்) எவ்வண்ணம் உனக்கொருத்துவாயோ அவ்வண்ணமே சமையல்செய்வாயம்மா.

(கர்ணகை) அப்படியானால்எல்லோரும் ஸ்நானஞ்செய்துகொண்டு இலையும் சருகும் கொண்டுவருவீர்கள்.

மாடுமேய்க்கும்பிள்ளைகளுக்கு
கர்ணகை சாதம்போடுவது
விருத்தம்.

அன்புடன்மாடுமேய்க்கும் அறியாதசிறுவரெல்லாம்
இன்புடன்வைகைக்கேகி இனிமையாய்ஸ்நானஞ்செய்து
வன்மையாய்கலப்பையிர்க்கு விடதாரிஇலையுங்கொண்டு
கர்ணகைமுன்னேவந்தார் கனிவுடனமுதிட்டாளே

(வ-ம்) கேளுங்கள்ளையா சபையோர்களே கர்ணகையின் மகிமையைச் சோதிப்போமென்று மாடுமேய்க்கும் பிள்ளைகளெல்லோரும் வைகை நதியிற்சென்று ஸ்நானஞ்செய்து விடதாரி இலைகளும் கலப்பைகளையு மெடுத்துக்கொண்டுவந்தவுடனே கர்ணகையம்மன் அவர்களைவரிசையா யுட்காரவைத்து இலைகளையெல்லாம் அவர்கள் முன்பாகவைத்து ஆற்றமணலையள்ளி அன்னபதார்த்தமாகவேண்டுமென்று நினைத்து இலைகளில்வைத்தவுடனே அறுசுவைபதார்த்தமும், அன்னமுமாயிருக்கக் கண்டு சிறுவர்களெல்லோரும் ஆனந்தமாயமுதருந்தி இளைப்பாறின பிறகு அம்மணி எங்களுக்குப் பலகாரம்வேண்டுமென்று கேட்க மறுபடியும் மணலைவாரி இலையில்கொடுத்தவுடனே அவைகளெல்லாம் அவலாய்



டலைபுமாகவே சிறுவர்களெல்லோரும்புசித்து கர்ணகையின் மகிமையைப் புகழ்ந்துகொண்டாடி மனமகிழ்ந்து கோவலன்படுகளத்தைக் கர்ணகைக்கு தெரியப்படுத்தும்விதங் காண்க.

மாடுமேய்க்குஞ்சிறுவர்கள் கர்ணகைக்கு
கோவலன்படுகளத்திற்குப்போகும்
வழியைக் காட்டுவது.
விருத்தம்.

திருப்பரங்குன்றக்காட்டில் தலைக்குமாகாளிகோவில்
நெருப்பெனக்கொதிக்குங்கல்லின்மேல் கேடுறையுண்மணவாளன்
உருப்புடன்குடல்சரிந்து விழுந்திடக்கொன்றார்கள்
சரிப்படப்பறக்குமந்த சாயலேசெல்வாயம்மா

(வ-ம்) அம்மணி அதோ பார்த்தீரா ஓர் பாழ்மண்டபமிருக்கின்றது அதற்கு வடமேற்கே ஒரு கிளைவழி போகின்றது, அம்மார்க்கமேசென்று ஆகாயத்தை நோக்கிப்பார்ப்பீரில் அங்கு கரும்பருந்து செம்பருந்து கழுகுகளானவை பறந்துகொண்டிருக்கும்அவ்விடந்தான் திருப்பரங்குன்றக்காடு அங்கு கொலுவமர்ந்திருக்கும் காளியம்மன் ஆலயத்திற்குமுன்பாக கற்பாறையின்மீது உன் மணவாளனுகிய கோவலசெட்டியாரை இருபிளவாகவெட்டிவிட்டார்கள் சீக்கிரமாகச் சென்று காண்பாயம்மா,

(கர்ணகை) அப்படியே இதோ செல்கிறேனப்பா.

கோவலனைவெட்டிய படுகளத்திலவந்து
கர்ணகை அழப்புலம்புவது.
இ-ட்-முகாரி-ஆதிதாளம்
கண்ணிகள்.

| | |
|---|---|
| ஐயையோயிதென்ன அநியாயகாலமோ | பிராணநாதா-உந்தன் |
| அழகுள்ளமேனிக் கழுகுபட்சாதத்தையோ | பிராணநாதா |
| வையத்திலிவைபோல் வர்த்தகராய | பிராணநாதா-உந்தன் |
| வாழ்நாளை போக்கவோ வந்தாய்மதுரையில் | பிராணநாதா |
| போகாதேயென்றிந்தப்பாற்கொடிசொன்னதை | பிராணநாதா-இந்தப் |
| பொய்யென் றெண்ணிப் புறப்பட்டுவந்தீரே | பிராணநாதா |
| சாபவிராயமோ சதிகாரப்பாண்டியர் | பிராணநாதா-உன்னை |
| சற்றுமிரக்கமில்லாமல்வதைத்தாரே | பிராணநாதா |

ஐந்துபிராய அறிபாதகனையில் பிராணநாதா-என்னை
அன்பாய்க்கலியாணஞ் செய்துமகிழ்ந்தீரே பிராணநாதா
தாலிதரித்தபின் நாளிவிடுசேர்ந்தீர் பிராணநாதா-இந்தத்
தையலென்செய்குவேன் தனைபருமில்லையே பிராணநாதா
பாவிதழ்வாயனே பனிரெண்டாண்டுவரை பிராணநாதா-அந்தப்
பரத்தைபாகத்தினிற் பண்பாயிருந்தீரே பிராணநாதா
மாதவியோடுநீ மருவியிருந்தாற்போல் பிராணநாதா-இந்த
மங்கையுடனே மகிழ்வாயிருந்தாலும் பிராணநாதா
ஆதரவாய்ப்புத்ர சந்தானம்பெறுவோமே பிராணநாதா-அவன்
ஆழியிடுக்கைபா லரிசியிடுவானே பிராணநாதா
கொள்ளியும்வைத்துக் குடமுமுடைப்பானே பிராணநாதா-இன்றும்
கோருமுற்றுரிமைகள் யாவுமுடிப்பானே பிராணநாதா
பாம்புக்குப்பால்வார்த்தும் பலனறியாதுபோல் பிராணநாதா-அந்தப்
பரத்தையாற்பயனேதும் பாரிலடைந்தீரோ பிராணநாதா
எருக்கஞ்செடிக்குஜலமென்னமாய்வார்த்தாலும் பிராணநாதா-அது
எத்தனைபூர்த்தாலும் சுத்தவாசனையாமோ பிராணநாதா
மருக்கொழுந்தாகுமுன் மங்கையென்னைப்போல பிராணநாதா-அந்த
மாதவிபுத்தனுக் காதாரமாவானோ பிராணநாதா

——(*)*(*)——

வெட்டுண்டிறந்த கோவிலனை
கர்ணகை எழுப்புவது.

விருத்தம்.

ஆண்டிசொக்கேசர்தன்னால் ஆளனுருயிரைப்பெற்று
தாண்டியசதைகளெல்லாம் தகுதியாயிணைத்துசேர்த்து
தூண்டியஜாதிநூலால் அரியமாய்த்தைத்துவிட்டு
வேண்டிவெண்ணீறதால வேகமாயெழுப்பிட்டானே.

(வ-ம) சேருங்கலியாசபையோர்களே கோவிலனுடைய குடல்சதைகளெல்லாம் சிதறுண்டிருப்பதைக்கண்ட கர்ணகை மனம்பதைத்துக் கதறியழுது தன்னைத்தானே தைரியப்படுத்திக்கொண்டு சொக்கநாதரிடத்திற்சென்று தன்னுடைய மணவாளன் ஜீவனைக்கொடுத்தருள்வீரென்று ஸ்துதிசெய்யும்போது சொக்கநாதர் மனமகிழ்ந்து கோவிலனுடைய உயிரையும் ஊசிநூலையுந்தந்தனர் அதைபெற்றுக்கொண்டுவந்து சிதறுண்டிருக்கும் குடல்சதைகள்யாவும் வயற்றில்வைத்து நரம்புகளை அந்தந்தஸ்தானத்திலிணைத்து ஊசியில் நூல்கோர்த்துதைத்துவிட்டுதிருவெண்ணீரைத்தூவி ஜலத்தைத்தெளித்து



பிராணநாதா எழுந்திருப்பீரென்று பொற்பிரம்பால் தட்டியபோது கோவிலன் நித்திரை தெளிந்தவனைப்போல ஆ! மாதவியென்றெழுந்திருந்து எதிரிலிருக்கும் கர்ணகையைப்பார்த்து பெண்ணே யாரு வருகிறவளுக்கும் உன்னை இடைச்சிவீட்டிலிருக்கும்படி சொன்ன வார்த்தையை மறந்துவிட்டு தனிவழியாக இந்தக்காளகத்தில் ஏன் வந்தாயென்றுகேட்க. கர்ணகை நடந்தவிஸ்தாரங்களையெல்லாம்விபரமாகத்தெரியப்படுத்தி உமக்குத்துன்பஞ்செய்த துஷ்டர்களையெல்லாமெனக்குத் தெரியப்படுத்துவீரென்றுகேட்க கோவிலனுக்கு மயக்கந்தெளிந்து நல்லவினையோடுசொல்லிக்கொண்டுவருகிறதெங்ஙனக.

கோவிலன் தனக்கு நன்மைசெய்தவர்களையுந்
தீமைசெய்தவர்களையும் கர்ணகைக்கு
தெரியப்படுத்துவது - தரு.

இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

ஆரணங்கேயிங்கு— அடைத்ததுன்பங்களை
அன்பாபோதுவேன்கேளாய்

அநுபல்லவி.

தாரணிபுகழ்ந்திட    தனிசிலம்பினையாலும்
தக்கப்படியேயிற்க    சஞ்சலம்விளைந்ததே (ஆர)

சரணங்கள்.

சித்திரப்பார்வையாள்    சித்ராமணிமாதும்
சிறந்தவாத்தியார்மந்த்ரி    சிலரிவரோடாம்
இத்தகையோரெனக்கு    இன்பாய்மொழிந்ததும்
இனிவரும்வினையாலே    இவர்கள்சொற்றடுத்ததும்
வந்தவினைபோக்க    வழிதெரியின்றதே
சுந்தரியேயினி    சொல்லுவேன்கேட்பாயே (ஆர)

கந்தரிக்கணம்    சோமலிங்கனுயிவர்
குதாய்க்காட்டியமோச    தீதுனாபொல்லாதோர்
அந்தவஞ்சியத்தனோ    அன்னம்புசிக்கச்செய்து
அநியாயம்பென்னைக்    கயிற்றாற்கட்டினானவன்
பெண்சாதிமுந்துமாலை    பெருந்தஉலக்கையாலே
கண்விழிபிதுங்கவென்    தலையிலடித்தானோ (ஆர)

சிலம்புதிருடியென் | அரைத்தான்பாண்டியனிடம்
சித்திரமெத்தனை | சொற்கசிசொன்னாரவ்விடம்
துலங்குமந்திரிகளோ | அயராமலென்னிடம்
தோற்றுச்சிலம்பிய்த்து | செல்லென்றாரவ்விடம்
ஊஞ்சிபத்தனும்பாவி | அழக்குற்றதென்னவே
வஞ்சகசத்தியம் | அப்பாவனைசெய்யவே (௩௫)

பாம்புமொருசத்தியம் | புலியுமொருசத்தியம்
பசுவுஞ்செய்யும் | பாத்தயானைசத்தியம்
அம்படிசெய்வோ | அஞ்சலுமேயாகும்
அன்போடிசெய்தேனே | அவ்செய்தாகசத்தியம்
மதிகேடரான | கள்ளிகண்டானென
விதிவசத்தாலென்னை | வெட்டினாதண்டனை (௩௬)

(கர்ணகை) நாதா உமது சிலம்பு எங்கே.

(கோவிலன்) பெண்ணே உமது சிலம்பு இராஜனிடத்திலிருக்கின்றது,

கர்ணகை சபதஞ்செய்வது.

விருத்தம்.

அன்புடனுனையழைத்து அணிசிலம்பதைக்கவர்ந்து
துன்பமேசெய்திட்டோரை அரிதத்தில்பிடித்துக்கொண்டு
அன்னவர்வயிற்றைக்கீறி அவர்குடல்பிடுங்கித்தோளில்
வன்மையாய்ப்போட்டுக்கொண்டு வருகிறேன்பிராணநாதா

(வ-ம்) பிராணநாதா! உம்முடைய சிலம்பையும் பிடுங்கிக்கொண்டு தவறாய் உம்மை இவ்விதமாக துன்பஞ்செய்த பாவிகளின் வயிற்றைக்கீறி சிறுகுடலும், பெருகுடலும், மணிக்குடலும் பிடுங்கி என் கழுத்தில் மாலையாகப்போட்டுக்கொண்டு வருகிறேன், இனி உமக்கு என்னவரம்வேண்டும் தெரியப்படுத்துவீர்.

கோவிலன் கர்ணகையை வரங்கேட்பது.

விருத்தம்.

அன்பஞ்செனக்காகதோர் துடைமீதக்குடலும்பாரி
வன்மையாயென்றேமிவைத்து வகையுடன்கொடுத்தும்போது
அன்புடனிருக்காமி அழகுமாதகியென்றேடு
இன்புடனதனமாக இவ்வரமருள்செய்வாயே



(வ-ம்) கர்ணகா, எனக்குக் கெடுதிசெய்த துஷ்டர்களின் குடலை களைப்பிடுங்கிக்கொண்டுவந்து என்னுடைய கஷ்டத்தைத்தவிர்த்தும் வைத்து எனது ஆசையிருந்த வேசியாகிய மாதவியையுமென்னுடன் தகனஞ்செய்து எங்களிருவருக்கும் சாயுஜ்யபதவி கிடைக்கும்படியாக வரந்தருவாய் பதிவிரதாசிரோன்மணியே.

(கர்ணகை) அப்படியே வரந்தந்தேன், பிராணநாதா எனக்கு மெத்தப் பசியாயிருக்கின்றது ஆதலின் இந்த மாமரத்தின் மீதேறி சில பழங்களறுத்துப்போடுவீர் நாதா.

{கோவிலன் மாமரத்தின்மீதேறி நல்ல பழங்களைப்பறித்து}
{மடியில்கட்டிக்கொண்டு சொத்தைப்பழங்களைமேழுபோடுவது}

(கர்ணகை) நாதா இதென்ன நல்லபழங்களை பறித்து மடியில்கட்டிக்கொண்டு சொத்தைப்பழங்களை பறித்துக்கீழேபோடுகின்றீரே.

(கோவிலன்) கர்ணகா எனது ஆசையிருக்குமாதவிக்காக நல்ல பழங்களிற் சிலது அறுத்துவைத்திருக்கிறேன் பெண்ணே.

(கர்ணகை) இறந்தும் மாதவியானை மறக்கவில்லையா. கீழே உட்காரும் உமது சிரசிலிருக்கும் பேன்களைப்பொறுக்கிவிடுகிறேன்நாதா,

(கோவிலன்) நல்லது இதோ உட்கார்ந்தேன் மாதே.

கோவிலனுடைய உச்சிசாட்டை கர்ணகையறுத்து
பழையபடி இருபிளவாகச்செய்தது

விருத்தம்.

கச்சணியபதரேற்றான் கர்ணகையனனனுக்கு
இச்சகவார்த்தைப்பேசி ஈர்பேனும்பார்க்கின்றாற்போல்
உச்சியின்சாட்டைமெள்ள உருவினனுடலிரண்டாய்ப்
பச்சையாலானைவெட்டும் பாகனைப்போலாயிற்றே.

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே கர்ணகைகோவிலனுக்குப் பேன்பார்க்குந்தன்மைபோல் உபாயமாக உச்சியிலிருக்கும் நால்சாட்டையுருவியபோது கோவிலனுடையசரீரம் இரண்டுபிளவாகவிழுந்து சிறுகுடலும், பெருகுடலும்விதமாய்தொடுப்பதைக்கண்டு கண்களுக்கு கட்டெறும்பையும், காதுகளுக்கு சிற்றெறும்பையும், சரீரத்திற்கு மாங்களையும் காவல்வைத்து கூளிகளையும், பருந்துகளையும் வரவழைத்து வெய்யற்படாமல் இறகுகளினால் நிழல்தரும்படிக்குச் சொல்லி ஆக்ஞாபித்து கர்ணகையம்மன் மதுரைக்குவருகிறாள் சபைக்காணக.

——()(*)()——

கர்னகை கானகத்திலிருந்து புறப்பட்டு
கோபாவேசத்துடனே மதுரைக்கு வருகிற - தரு.

இ-ப்-ஆரபி-ஆதிதாளம்.

பல்லவி

மதுரைக்கிப்போதேகுவேன்—பாண்டியர்
மணிக்குட்டையறுப்பேன்

அறபல்லவி

சதிகாரப்பாண்டியர் — சிலம்பைக்கவர்ந்தாரே
அதிரவுஞ்சினைக்கவென் — ஆளனுயிரகந்தாரே (மது)

சரணங்கள்.

அறிவில்லாபாண்டியரை—கொன்றிடாமல்
ஆறாறாவிடுவேனோ.
சரிபிவர்படந்தான் — சாற்றினேர்கோட்டையை
பிரியமாய்க்காவலன் — முன்வந்ததட்டியே (மது)

(காவலாளிகள்) நீ ஆரம்மா கோபாவேசமாய் வருகின்றனையே.

கர்னகை சொல்வது - தரு.

அடடாகன்னிதேவி—வந்தேனிதோ
அநியாயபடுபாவி
இடமாய்க்கதவையும் — இறந்துவிட்டாய்பழி
கடங்காரப்பாவிக்குக் — காட்டலாம்மறுமொழி (அடடா)

(காவலாளிகள் பயந்தோடுவது)

கர்னகை சொல்வது - தரு.

மூன்னிற்காமலீர்கள்—சதவையும்
மூடிவிட்டோடினர்கள்
என்காலால்லோங்கியே — அடிபூதைத்திட
வல்லமையில்லாமல் — பறக்கென்றுடைத்தது (முன்)

(காவலாளி) ஆ ஹா ஹா பெண்ணே நீயார் கொஞ்சமேனும் அச்சமயமில்லாமல் கோட்டைக்கதவைக் காலாலுதைத்து உடைத்தெறிந்தனையே உன்னை சும்மாவிடப்போகாது அரசன்முன்வருவாய்,

கர்னகை சொல்வது - தரு.

முன்னும்பின்னுகவுந்தன்—தலைதனை
மூதேவிபார்த்தன்
வன்னையார்திருப்பினேன் — மன்னனென்முன்வந்து
அன்போடுகாணச்சொல் — வாயடாதடேனே (முன்)



(காவலாளி) பாண்டியபூபதிகளே கோவிலச்செட்டியார் மனைவியாள் வந்து கோட்டைக்கதவையும் காலாலுதைத்துடைத்துவிட்டு இவன் தலையையும் முன்பின்னாகத்திருப்பி உங்களையும்வருபடியாகச்சொல் லிருளாயா.

(பாண்டியர்) மந்திரி நாம் அந்தப் பெண்முன்சென்று நீதிமொழிகளால் சமாதானஞ்செய்து அனுப்பிவிடுவோம வருவீர்கள்.

(மந்திரி) அப்படியே மஹாபாக்கியம் அரசே.

(பாண்டியர்) அம்மணி நீ எங்கிருப்பது யாரு கார்பார்த்தமாக இங்குவந்தனையோ தெரியப்படுத்துவாயம்மா.

கர்னகை பாண்டியர்களுக்குச்சொல்வது - தரு.

இ-ம-மோகனம்-சாப்புதாளம்.

கண்ணிகள்.

என்னசெய்தாருன்னை எங்கநாதர்கோவிலர்
ஏன்கொலைசெய்தீர்கள் பாவியே—அடடா
மாண்டாருப்மாலெந்தன் ஆவியே
பன்னடாபாவிகாள் சீக்கிரமாகவே
பஞ்சமாபாதக — வஞ்சரே

(பாண்டியர்) அம்மணி அவர் செய்ததகாதகாரியத்தைசெய்ததினால் இராஜதண்டனைவிதித்தோம்.

கர்னகை சொல்வது - தரு

உங்கள்மனையாளை எந்தன்மணாளான்
உற்றுப்பார்த்தாரோசொல் பாவியே—அடடா
உண்மைப்பயலென்றுஞ் — சாவியே
எங்கட்சிலம்பையும் எத்திக்கவர்ந்தபின்
ஏன்வெட்டினீர்களென் — நாதனை

(பாண்டியர்) எங்களுடைய சிலம்பை சீர்திருத்தஞ்செய்வதற்காக தட்டானிடத்திற்கொடுத்தோம் அதையவன் வீட்டில்வைத்த சமயம் பார்த்துகொண்டேயிருந்து திருடிக்கொண்டுபோனதால் தண்டித்தோமம்மா.

கர்னகைசொல்வது - தரு.

திருடனென்றவரையே-தீரமாய்வெட்டிய
தீக்குறும்பாவிகா ளென்முனே—இந்த
தீரமாய்ச்சொன்னாயே வம்பனே
குருடரே அடடா என்காற்சிலம்பது
குற்றவாளிநீங்க — ளானீரே

(பாண்டியர்) விஞ்சிபோன காரியத்திற்கு யாக்களென்ன செய்குவோமம்மா.

கர்னகை சொல்வது - தரு.

எப்பழிபோனாலு மிப்பழிபோகாது
என்னுயிர் நாயகன் தன்னுள்ளே — அட்ட
ஏழையின் தன்பழி யும்முன்னே.
கப்பிக்கொள்ளத் தேடும் கருமிகளைய
காலனுக் கேற்றவ தன்மையே

(பாண்டியர்) அப்படியே அது உன்சிலம்பாகில் இவ்விடத்தில் வரவழைத்துக் காட்டும் பார்ப்போம்.

கர்னகை தன்னுடைய சிலம்பை
சபையில் வரவழைப்பது.

விருத்தம்

அன்னவருளக் கலங்க அவனைச் சிலம்பைநோக்கி
என்னுடை யதிந்நாதன் எங்கிருந்து வருவாயென்ன
பன்னருஞ்சோதியின்ன பாண்டியர்க்கெதிராய் வந்து
கர்னகையெதிரில் வந்து கலகலென்றொலித்ததன்றே

(வ-ம்) கேளுங்களையா சபையோர்களே பாண்டியர்கள் சொல்லிய வார்த்தையைக்கேட்ட கர்னகையும் சம்மதித்து தன்னுடைய சிலம்பை இராஜசபையில் வரச்சொல்லுமென்றழைக்க பாண்டியராஜர்க்கள் பொக்கிஷப்பெட்டியில் அடக்கஞ்செய்திருந்த காகரத்ன சிலம்பானது கேட்டு பேழையைப்படியே உடைத்துக்கொண்டு எதிரிலிருப்பதைகளெல்லாம் அன்னாரகச்செய்துவிட்டு சபையில் வந்தவுடனே கர்னகைகொடுத்துக் கொண்டு அடடா பாண்டியப்பாவிகளே இதோ பார்த்தீர்களா என்னுடைய காகரத்னசிலம்பு சபையில் வந்திருக்கின்றது இப்போதென்ன சொல்லுகிறீர்கள்.

(பாண்டியர்) அம்மணி எங்களுடைய சிலம்பையும் வரவழைப்பாயாகில் உனது காயகனைக்கொன்றபழிக்கு மறுப்பழிதருவோமம்மா.

—— * ——

கர்னகை இராஜகன்னியின் சிலம்பை
சபையில் வரவழைப்பது

விருத்தம்

இளையிருமை நடையுந்தன் குஞ்சியின் பழியைக்கொள்ளவே
வளைக்கரச்சிலம்பை யிங்கே வரவழைத்திடுவேனென்ன
மினைத்திகழ்ந்திடவே பாண்டியர்க்கென்றெடுத்து
கணத்தினிற் போட்டுவந்து காண்பித்ததன்றே



(கர்னகை) பாண்டியர்களே இதோபாருங்கோ உங்கள்சிலம்பும் வந்துவிட்டது இனிஎன்கணவன்பழிக்குமறுபழிகொடுப்பீர்களா!

(பாண்டியர்) மந்திரி இதென்ன விபரீதமாய்விட்டதே

(மந்திரி) அரசே அப்பெரியோருரைத்தமொழியை கவனித்தீரா?

(கர்னகை) கேடுவரும்போது மதி கெட்டுவருமல்லவோ

பொதுவசனம்

கேளுங்களையா சபையோர்களே பாண்டியர்கள் இரண்டுசிலம்பையும் கோவிலன் இக்குக்காண்பித்து இவைகளில் உன்சிலம்பெதுவென்று கேட்க தன்னுடையசிலம்பை யெடுத்துக்கொண்டு காகரத்னசிலம்பு தன்னுடையதல்லவென்றுகொடுத்துவிட்டதை பாண்டியர்கண்டு திகைத்திருக்கும்போது கர்னகைசொல்லும் விதங்காண்க.

—— * ——

கர்னகைக்கும் பாண்டியருக்கும் தர்க்கம் - தரு.

இ-ம்-ஜம்பை-திரிபுடைதாளம்.

கண்ணிகள்.

உன் சிலம்புமென்சிலம்பும் உன்சபையில்வந்ததுவே
என்பழிக்கென்சொல்வீரட ஏமமடைப்பயலே

(பாண்டியர்) மந்திரி இதென்னகெட்டிக்காரியாயிருக்கின்றனளே.

கர்னகை சொல்வது - தரு.

கெட்டப்பழிவீண்போமோ சோழிக்குப்பாண்டியரே
சீக்கிரமாய்தருவீர் பிச்சியென்காதன்பழி

(பாண்டியர்) மந்திரி சீறிப்பின்னையைப்போல் மூச்சுவிடாமற் கத்திக்கொண்டிருக்கின்றனளே இதற்கென்னசெய்வோம்.

கர்னகை சொல்வது - தரு.

கேடிலகும்பாண்டியரே கிரிவென்றால்வீண்போமோ
கொன்றபழிதாரும் இன்மொழிகோவிலனை

(பாண்டியர்) மந்திரி இதென்ன ஆச்சரியம் என்னோரமும் நாயைப்போல் குலைத்துக்கொண்டிருக்கின்றனளே இதற்கென்செய்குவோம்.

கர்னகை சொல்வது - தரு.

தங்கைமனைவாசனையும் காயின்பழிவாங்காதோ
கதிதுயிலென்றென்னே காதன்பழிவீண்போமோ

20

(பாண்டியர்) அடா காவலாளிகளே இந்த மாதைக்கழுத்தைப்பிடித்துத்தள்ளிக்கொண்டுபோய் வெளியேதுரத்திவிடுவீர்கள்.

கர்ணகை சொல்வது - தரு.

பெற்றமகன்மாரசெய்தால் பேருலகுகொண்டிடுமோ
பேதைகளேயின்றேடே போருமுழக்களாவீ

(பாண்டியர்) அப்படியானால் உத்தமிக்குப் பத்தார்த்தம்சொல்வாயாகில் உன் மணவாளன்பழிக்கு மறுபழிதருகிறேனம்மா.

கர்ணகை சொல்வது - தரு.

உத்தமிகேளின்றேடே உயிர்ப்பிப்பத்தார்த்தம்
உள்ளதழகனேசென்னேனே உத்தபழிதருவீர்

(பாண்டியர்) அம்மணி உன் கணவனை இன்றென்னறியாமல் கொன்றுவிட்டோம் ஆகையின் யாங்கள்செய்தபிழையை மன்னித்துக்கொள்ளுமம்மா.

(கர்ணகை) அப்படியானால் நீங்களெல்லோரும் ஒரேகடையில் முற்பழி, பிற்பழி, இப்பழியோடு மூன்றுபழியெனச் சொல்லீராவிடில் விட்டுவிடுவேனோடா பாண்டியர்களே.

(பாண்டியர்) ஆனாலப்படியே சொல்லுகிறோமம்மா.

(கர்ணகை) ஆனால் கோட்டைக்குவெளியில் வருவீர்கள்.

(பாண்டியர்) இதோ வந்தோமம்மா.

கர்ணகை பாண்டியருக்குச் சொல்வது.

விருத்தம்.

பாண்டியப்பாவிகளே நீர் பழிவந்துசேர்ந்தபோது
தாண்டியமிட்டவென்ன அம்பலந்துறையுதவியென்ன
வேண்டியபணிகளென்ன வேஷ்டிதானங்களென்ன
ஆண்டிபோற்கூட்டிவைத்து அணியணியாகநிற்பீர்.

(பாண்டியர்) அம்மணி நீ சொல்லியவண்ணமே அணியணியாவுங் கூட்டிவைத்து எல்லோரும் வரிசையாக நின்றோமம்மா.

(கர்ணகை) பாண்டியர்களே முன்புநான்சொல்லியவண்ணமே எல்லோரும் சொல்லீர்கள்.

(பாண்டியர்) முற்பழி, பிற்பழி, இப்பழியோடு மூன்றுபழி.

——(*)*(*)——



கர்ணகைக்கு காளிசொரூபம்வருவது - தரு

இ-ம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

வாவென்றழைக்கவே—காளியின்ரூபம்
வந்ததேகர்ணகைக்கு

அநுபல்லவி.

ஆலவாய்ப்பாண்டிய ரனைவருந்திடுக்கிட
காவெனகர்ச்சித்து காசினிநடுங்கிட (வாவென்)

சரணங்கள்.

சிங்கத்தின்பல்லுஞ் செஞ்சடையழகும்
சிவனுடைய ரூபம்—ஜொலித்திடவே
எங்குந்திடுக்கிட இரண்டுகையதனில்
எடுத்தாள்திரிசூலம்
கோடாலிப்பல்லும் கோழிமுட்டைக்கண்
வாடாதொளிமேனி வாடுமேயிம்மண்
காடாகுமோவெனை கருதிபுகழும்வெண்
மாடாக்குஞ்சூரி மடியினிற்றூக்கினன் (வாவென்)

பன்னிரண்டாயுதம் பன்னிருகையிலும்
பாசமொருகையிலும்—விளங்கிடவே
மன்னரம்பாண்டிய ரனைவர்வயிற்றை
மாசறப்பக்கிழித்ததிலும்
மன்னுஞ்சிறுகுடலும் மணிக்குடலீரல்
பன்னுமணனீரலும் பார்த்தெடுத்தாவல்
இன்மையாகவாரி இலகிடுங்காதல்
தானுந்தோளிலிட்டுத் தலைக்கிடுங்கூறல் (வாவென்)

வஞ்சிபத்தன்தேவி மூத்தமாலைமணம்
வாடிப்பழங்கலத்தில்—ஒளித்திருக்க
கொஞ்சுங்கிளிமொழி கர்ணகையம்மனுங்
கோபித்தவ்விடஞ்சென்று
அஞ்சாதகத்தில் ஆரடாவென்ன
பிஞ்சுபழங்கல முடைத்ததுவென்ன
வஞ்சிமூத்தமாலை வயற்றனைதென்ன
கஞ்சகிசைப்பல்லிற் கவ்வியேபன்ன (வாவென்)

பாணைமீதிருந்தபட்டாணையுமிழுத்து
பற்றிவயற்றைக்கிழித்து—அவன்குடலை
சருணையாய்மார்பி லாரமாயணிந்ததை
செங்கருடன் பார்த்து
என்பதிதாவென எத்திசைமுகனும்
முன்வரும்பிள்ளைகள் விழிகளிரண்டும்
தன்கையாற்பிடுங்கித் தக்கனள்பருந்தும
வன்மையாய்வாங்கி வாழ்த்தியருந்தும் (வாவென்)

பகடசாலையிலாடிக்கொண்டிருக்குமந்த
பாவையாங்கோவிலிக்கி—முன்சென்றவள்
சிகையைவெட்டிப்பிடித்து வயிற்றைக்கிழித்தவள்
சிறுபெருகுடல்பிடுங்கி
மகிழ்ந்திவன்மார்பில் மாலையாயிட்டு
திகழும்வாத்தியார்சிக் தாமணிசெட்டு
புகழும்மந்திரிகளை போகப்படுத்திட்டு
நிகழும்மதுரையின் நல்லில்லின்றிட்டு (வாவென்)

தன்னிடமிலம்மையுந் தாயார்சிலம்மையும்
தனிமதுரையி லெரித்து—தகதகென
வன்மையாய்பற்றி மளமளமளவென
வன்மையுடனெரிய
வலதுஸ்தனத்திருகி வடக்கிலிட்டெறிந்தாள்
இலங்குமிடதுஸ்தனந் தெற்கில்விட்டெறிந்தாள்
கலகலகலவென களிப்புற்றுமகிழ்ந்தாள்
பலபலவெனவக்கினி பிடித்திடப்புகழ்ந்தாள் (வாவென்)

பொய்புடலழித்துங் கைபதவெந்திட
பொறிபுலனுங்கலங்கி—தலைமூக்குங்கண்
மெய்பதுவெந்திட மதுரையுள்ளோர்கள்
வெந்துமடி மயங்கி
தனமதனைவிட் டலறியிற்பலர்கள்
சனங்குறைந்தேங்கித் கதறியேசிலர்கள்
மனம்மிகநொந்து மடிந்தார்பலர்கள்
இனம்பலங்குன்றியே இறந்தார்சிலர்கள் (வாவென்)

——(*)——



கர்ணகையம்மனுக்கு இடைச்சியும், பறைச்சியும்
உபகாரஞ்செய்வது
விருத்தம்.

கர்ணகைதிரேகமெங்கும் கனலொளிவீசப்பார்த்து
அன்னகரிடைச்சியெல்லாம் அன்புடன்வெண்ணெயாலே
மின்னுமிக்காளிமார்பில் மேன்மையாய்விட்டெறிந்தாள்
பன்னரும்முதத்திருலே பறைச்சியும்விசிறினாளே.

கர்ணகையம்மன் இடைச்சேரியும், பறைச்சேரியும்வேகவிருக்க
வரங்கொடுத்துவிட்டு மாதவிக்குரூபமெழுதுவது
விருத்தம்.

நன்மையாங்கண்டபூரென்னும் நகர்தனில்வாழுந்தங்கா
இன்பேராக்குமுனதத்தானும் இறந்தனராகையாலே
கன்மங்கள்செய்வதற்கு கடுகியேவாருமென்று
என்கையால்ரூபமிப்போ எழுதியேயனுப்பினேனே

☞ இப்படிக்கு,
கர்ணகையம்மாள்.
திருப்பரங்குன்றக்காடு
மதுரைமாநகரம்

பொது - வசனம்.

கேளுங்களையாசபையோர்களே இவ்விதமாக கர்ணகையம்மன் ரூப மெழுதி காகத்தினிடத்தில் கொடுத்து நிக்கண்டபூரிலிருக்கும் மாதவிக்குக்கொடுப்பாயென்றுரைத்த மொழிப்படியே காகம் பறந்தோடி வந்து மாதவிமுன் ரூபத்தைப் போட்டுவிட்டுப் பறந்தோடிய பிறகு நடக்கும்விதங்காண்க.

——(*)——

மாதவி ஓலையைவாசித்துப்பார்த்து
பயணம் வருவது.
விருத்தம்.

மாதவிமுன்னவ்வோலை மாகவிபாய்விழவாசித்து
போதவேதனக்கிருந்த பொருளைகாற்பங்குசெய்து
நீதமாய்க்கோவிலுக்கும் நிஜகுருதாயாருக்கும்
பூதலதருமத்திற்கும் பகுந்திட்டுவருகின்றாளே

வெட்டுண்டிறந்த கோவிலனைப்பார்த்து
மாதவி துயரப்படுவது - தரு.
இ-ம்-ஆஹிரி-ஆதிதாளம்.
கண்ணிகள்.

மச்சராஜம்போன்ற சித்ரவடிவழகா பிராணநாதா-உன்னை
மறலிக்கிரைகொடுத்து மண்மீதிருப்பேனோ பிராணநாதா

அன்னம்பேடும்போலஅன்புடன்வாழ்ந்தோமே பிராணநாதா-அந்த
ஆசையைமறந்தீரோ அழகுசிங்காரனே பிராணநாதா

வாழைப்பழமேயென் வலதுணைசேர்ந்தேனே பிராணநாதா-இந்த
வஞ்சியெனைப்பிரிந்து வானுலகடைந்தீரோ பிராணநாதா

நால்குடல்சரிய இறைச்சிவெங்குஞ்சிதற பிராணநாதா-உன்னை
இருதுண்டாவெட்டவும் எப்படிதுணிந்தாரோ பிராணநாதா

உற்றுறவினர் ஒருதுணையுமின்றி பிராணநாதா-யான்
ஒற்றைக்குரல்விட்டு ஏங்கியழுகின்றேனே பிராணநாதா

மாதவியா இதோ மனந்தாளாதுயருமேன் பிராணநாதா-நீர்
மங்கிலியமணிந்த மங்கையைக்காணேனே பிராணநாதா

(கர்ணகை) இதோ யானும்வந்தேனம்மா

மாதவி கர்ணகைக்குச் சொல்வது - தரு

ஆளனிறந்து அமங்கலியரானோமே அம்மணி-நாம்
அவனியிலிருந்தினி அடையும்பலன்யாது அம்மணி

நாதில்லாமலரானோம் நதியில்லாநகரானோம் அம்மணி-இனி
நாமிருந்தென்னபலன் நாதனையிழந்தோமே அம்மணி

பரமசிவத்தைநாளும் பக்தியாய்த்துதிப்பாரே அம்மணி-இவரை
பாவிப்பயலெவனோ பதைக்கவெட்டினானே அம்மணி

கர்ணகை மாதவிக்குச் சொல்வது
விருத்தம்.

ஆண்டாண்டுதோறுங்கத்தி அழுதுமேகலங்கினாலும்
மாண்டவரெழுந்திருந்து மறுபடிவருவதுண்டோ
பூண்டதோர்துயரொழித்து புண்ணியருடனேயென்னை
வேண்டியகாஷ்டத்தன்னில் மேன்மையாய்த்தகனஞ்செய்வாய்



(மாதவி) அம்மணி உன்னுடைய கையினால் எங்களிருவரையுந் தகனஞ்செய்வாயம்மா

(கர்ணகை) அப்படியே செய்கிறேனம்மா

கர்ணகையும், மாதவியும் கோவிலனைக்
கழுவிக் குளிப்பாட்டுவது.
விருத்தம்.

அன்னவரிஷ்டம்போல அன்புடன்செய்வோமென்று
கர்ணகைமாதவியுந்தங்கள் கணவனைக்கழுவிக்காலே
நன்னயமாகக்கட்டி நவதுங்காரு நிவிட்டு
மின்னிடுகாசிதானும் மேன்மையாயமர்ந்திட்டாளே

கோவிலனையும், மாதவியையும்
கர்ணகை தகனஞ்செய்வது - தரு.
ஸ்ரீராகம்-ஆதிதாளம்.
பல்லவி.

கொள்ளி வைக்கவேன்ன யானோ (கொள்ளி)

அநுபல்லவி.

கள்ளங்கபடமா கர்ணகையானும்
சன்னையோடுற்ற சஞ்சலம்பூணும் (கொள்ளி)

சரணங்கள்.

குடத்தில்நீ ரெடுத்தும்மை சுற்றி
உடனேகொள்ளி யுங்களுக்கப்போ
கடனுமேற்றான் காரணத்தப்போ (கொள்ளி)

(வ-ம்) ஆ பிராணநாதா நீர் என்னைக் கலியாணஞ்செய்த கடனாக உமக்கு யான் குடமுடைக்கலாச்சுதோ.

தண்ணீர்க் குடமுடைத்தே னையோ
செண்மனதுங்கள் வெண்வாய்க்கரிசி
இன்றுமேபோட்டேன் இயங்காதரி (கொள்ளி)

(வ-ம்) மதுரைமீனாட்சி சொக்கலிங்கேஸ்வரா யான் பதிவிரதையா யிருந்தது உண்மையாகில் இந்த வாழைத்தண்டிலால் அக்கினிபற்றி யெரியவேண்டும்,

வாழைத் தண்டையெடுத்துக் கொள்ளி
கொழையில்லாமல் கோவிலமாதவி
குழவைத்தேனே காட்சிப்பட்டதுவே (கொள்ளி

(வ-ம்) அம்மா மாதவி

(மாதவி) ஏனம்மா கர்ணகா.

(கர்ணகை) ஆ ஹா இவள் தாசியானாலும் பதிவிரதையென்பதற்கு சந்தேகமில்லை

பத்தி யெரிகின்றதை யையோ
சொத்திரமோவி சோந்தழல்சொரிய
உத்தரிமையான் ஊக்கமாய்செய்ய (கொள்ளி)

கர்ணகை அஸ்திகளை கங்கையில்விடுத்து
புறப்பட்டு வருவது.

விருத்தம்

காஷ்டமூக்கனிக்கப்பின்பு கருதுமவ்வஸ்திதன்னை
தாஷ்டியாயெடுத்துச்செல்ல சொக்கர்வேதியர்போலங்கு
மேட்டியாயிலக்கங்கை மேன்மையாய்க்காட்டென்றே த
வாட்டமாயிதுவேயென்னவ் வஸ்தியைவிடுத்திட்டாளே

(வ-ம்) கேளுங்களையர்சபையோர்களே காஷ்டமெரிந்து தணிந்த [illegible]கு பால்தெளித்து உத்தரிமையாவுமுடித்து அஸ்திகளைப் பொறுக்குஞ்சமயத்தில் மாதவியின்மடியில்வைத்தபுஷ்பம், மஞ்சள், குங்குமம் ஜவ்வாதுசம்பழம், இவைகளெல்லாம்கருகாமலிருக்க கர்ணகையின்மனம் [illegible]ந்து இவைகளையெல்லாம் கங்கையிலவிடுகிறதற்கு எடுத்துக்கொண்டு போகும்போது வேதியன்போல்வந்தசொக்கநாதர் சொல்லியவிதமாக அங்கோர் நதியைக்கண்டு இதுதான் கங்கையென்று அஸ்திகளை விடுக்க கோவிலனஸ்தி மலராகவும், மாதவியஸ்தி நாலாகவும் விளங்கினதைக்கண்டு ஆசீர்வதித்துவிட்டு வேம்பூரின் எல்லையைத் தாண்டி யானத்திற்குவந்து அங்கிருந்துபுறப்பட்டுவருகிறவிதங்காண்க.

——()(*)()——



கர்ணகை திருவொற்றியூருக்குவருவது - ௧௬.

இ-ம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

கர்ணகையம்மனுக்—கடலோரவழியாய்
ஊருடன்வருகின்றாள்

அநுபல்லவி.

சர்வாதாசார கட்டளையொழித்து
தர்மகுணனி தாவெனமதித்து (கர்ணகை

சரணங்கள்

திருவொற்றியூர்வழி வரம்பினையுடனே
தியாகர்களிகூர்ந்து—சொக்கட்டானுட
வருகிறமாதை யம்மனுக்கண்டு
வந்தொளித்தான்நேர்ந்து
பருவப்பெண்போலப் பாவையேன்வந்தாய்
திருவேயெனக்கின்று செப்பெனவென்றாய்
அருமையாகதாகம் ஆச்செனப்பகர்ந்தாள்
பெருமையாஜலத்திற் பசுமையையெழித்தார் (கர்ணகை)

ஆழ்ச்சனையதிலிறங்கிநீருண்டு
அந்தபாத்திரைகையெடுத்து—என்னைதாவென
தாழ்வுறங்கலே பாரக்கல்லே
தான்முடிஞ்சதுத்து
தம்புரிவீதியில் கலமாயெழுந்தாள்
சப்புவங்கொருகல் சமைத்திடக்கண்டாள்
அம்பூர்தோட்டத்தி லவறியெழுந்தாள்
மூன்பொருக்கல்லே மூடவுங்கண்டாள் (கர்ணகை)

காசிக்குளத்தின் மேட்டருகதனில்
கர்லகையெழுந்திருக்க—அங்கொருகல்லே
மாசிலாமுடிஞர் மங்கையுங்கண்டு
மனமுமகிழ்ந்தாடிக்க
வசனேயிப்படி இடையூர்செய்ய
மாசனுநாதர் மழுவையிறாய்ய
வாசனேயின்னமேயோ வரைகுலசைய
பரசமகற்றிய பதிவொளுப்பெய்ய (கர்ணகை)

(தியாகேசர்) கர்னகா நீ மனவருத்தங்கொள்ளவேண்டாம் இன்று முதற்கொண்டு வருஷந்தோறும் சித்திரை மாதத்திலுனக்கு முதற் பூசைகிடைக்கும்படியாக திருவருள்புரிந்தோம். இன்னும் உனக்கு வேண்டியவரத்தைக்கேட்பாய்

(கர்னகை) சுவாமி எனக்குப்பொங்கலிட்டுப் பூசைசெய்யும்போது ஒவ்வொரு கம்மாளனெனக்கு காவுகொடுக்கவேண்டுமையா.

(தியாகேசர்) அப்படியேஅருள்புரிந்து உனக்குவட்டப்பகாச்சியாரெனப் பெயருந்தந்தேன்.

நகரத்திலுள்ள குடிகளெல்லோரும்
வட்டப்பகாச்சியாருக்குப்
பொங்கலிடுவது
விருத்தம்

இப்படிசிவனுரைக்க இவ்வுலகிலகுமாத்தர்
மெய்ப்படிகாவுதந்து மேன்மையாய்ப்பூசைசெய்ய
செப்புமோர்கம்மாளன்தான் சீருடன்பதிகம்பாட
துப்பியேமனங்குளிர்ந்து ஒழுங்குடனமர்ந்திட்டாளே,

(வ-ம்) கேளுங்களோபா சபையோர்களே தியாகேசர் கிருபையினால் அன்பர்கள் யாவருக்களிசேர்ந்து வருஷந்தோறும் வட்டப்பகாச்சியாருக்கு காவுடன் பூசையும் குறைவின்றி நடத்தும்போது ஓர் வருஷம் ஒரு கம்மாளச்சிறுவன்முறைவந்தமையால் ஸ்நானபானமேயகிஷ்டையாவுமுடித்துக்கொண்டு நெற்றியில் திருவெண்ணீறணிந்துக்கொண்டு வட்டப்பகாச்சியார் முன்பாகவந்து அம்மணி அடியேனுக்குயாதொருகிடையூறும் வந்தணுகாமல் வரந்தருவாயென்று பதிகம்பாடினான், அப்போது அம்மன் மனமகிழ்ந்து இனிமேல் எனக்கு நரபலிவேண்டியதில்லை எருமைக்கிடா காவுகொடுக்கவென்று திருவாய்மலர்ந்தருளியபடியே பூசித்துக்கொண்டிருப்பவர்களுக்கு சகலசன்மையுந்தந்தாட்சிக்கும் கர்னகையம்மன்மகிமையை எனது குருஸ்வாமியாகிய கணேசமூர்த்தியின் கிருபையினால் நாடகலங்காரமாக பெருமிதனேனையா கனவான்களே.

வாழி - விருத்தம்.

சீருடனெருதுமிக்க சிறந்தநாடகமும்வாழி
பாருடன்நவக்ரகங்கள் பண்ணவர்முனிவர்வாழி
கேருடன்சொக்கரோடு கேர்ந்தமீனாட்சிவாழி
தாருடன்வாளிற்சேருன் றுந் தர்மவானெல்லாநவாழி



மங்களம் - தரு.

இ-ம்-சுருட்டி-அடதாளம்.

பல்லவி.

மங்களம் மங்களம்—நித்தியசுப
மங்களம் மங்களம்

அநுபல்லவி.

திங்களொ கங்கையை செஞ்சடையணிந்திடும்
செங்கையில் மான்மழு வேந்துஞ்சிவ
சங்கரனுகிய சொக்கலிங் கேசர்க்கும்
மங்கைமீனாட்சிக்கும் மைந்தன்கணேசர்க்கும் (மங்களம்)

சரணங்கள்.

மயிலேறும் முருகர்க்கும் வள்ளிதெய்வானைக்கும்
மலரயன்ராணிக்கும் மாதகிக்கும்
கைலையில் வாழ்ந்திடும் காமகேனுக்கும்
கருதுங்கோவிலனுக்கும் கர்னனக்கும்ஜெய(மங்களம்)

எந்தேசத்திலு மெங்கெங்குள்ளவர்களும்
சந்ததம்புகழ்ந்திட தரணியிலவாழ்
சுந்தரஜெயவீர சூரதீரகவிராஜ
கந்தசாமியின்னோக் கனதினமும்ஜெய (மங்களம்)

# கோவிலன் நாடகம்

# முற்றிற்று